சக்தி



உலகத்திலே அழகும் மணமும்
மிகுந்தது ரோஜா புஷ்பம்
உலகத்திலே சுவையும் மணமும்
மிகுந்தது அசோகா பாக்குத்தூள்

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூர்

For SILKS
and SAREES
நாகரீகமான பட்டு புடவை
கள் பல ரகங்களில் ஏராள
மாக கிடைக்குமிடம்
S. R. B.
குப்புசாமி அய்யர் & சன்
(பழைய விலாசம்)
S.R. பாலுசாமி அய்யர்
& சன்ஸ்
117, நயினியப்ப நாய்க்கன்
தெரு, P.T. மதருஸ்
230, கீழமாரெட் வீதி, மதுரை
SRB
MSD

பண்டங்களை மாற்றிக் கொள்வதற்காக ஒரு திருப்திகரமான சாதனத்தை மனிதன் கண்டு பிடிக்கும் முயற்சியில் எளிய பண்டமாற்று வியாபாரத்தை விட்டுவிட்டு வெள்ளாடுகள் முதலியவை போன்ற பணச்சின்னத்தை உபயோகிக்கத் தொடங்கியதே ஒரு பெரிய முன்னேற்றமாகும். ஆனால் "வெள்ளாட்டுப் பணம்" எல்லோராலும் விரும்பப்படவில்லை. எல்லா வெள்ளாடுகளும் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. அடர்ந்த உரோமமுள்ள மெலிந்த ஆட்டு மந்தையின் பண்டமாற்று மதிப்பை நிச்சயிப்பது விரைவில் ஒரு பிரசினையாய் விட்டது. நோய் வாய்ப்பட்டு அவை இறந்து போவதால் செல்வம் அடிக்கடிக் குறைந்துவிட்டது. வியாபாரத் துறையில் ஏற்பட்ட புதிய அபிவிருத்திகளால், சதா சிந்தித்துக்கொண்டிருக்கும் தன்மையுள்ள மனிதன் அவைகளைவிட மேலான ஒரு பணத்தைக் கண்டறிய வேண்டியதாயிற்று. அழியாத உலோகங்களின்மீது அவன் நாட்டம் விழுந்தது - உண்மையில் அவை எப்பொழுதும் ஒரே மாதிரியாயிருப்பவை. எனவே, அது முதற்கொண்டு, சகல விவகாரங்களும் இரும்பு, செம்பு, ஈயம் முதலியவைகளின் கட்டிகள் அல்லது பாளங்களின் ரூபத்தில் நடைபெற்று வந்தன.

தபாலாபீஸுகளிலும், கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்

ஸெர்டிபிகேட்

மனிதன் தனக்கு அன்றாடம் தேவையாயுள்ள பொருள்களை வாங்குவதற்காக ஏதேனும் ஓர் உலோகத்தின் பெரிய கட்டிகளையாவது பாளங்களையாவது தூக்கிச் செல்லவேண்டியிருந்தது. ஆகவே, உலோகங்களைச் சேர்த்து ஒளித்து வைப்பதே எதிர்காலத்துக்கென்று சேர்த்து வைக்கும் மார்க்கமாயிற்று. உண்மையில் தனவான்கள் அவர்களுடைய செல்வத்தின் எடையினாலேயே அமிழ்த்தி வைக்கப் பட்டார்கள்! அதிகரித்த சுரங்க வேலையினால், அடிக்கடி பணத்தின் மதிப்பு குறைந்து வந்தது; கொள்ளை லாபக்காரர்கள் உலோகங்களின் அசல் தன்மையைக் கெடுத்துவந்தார்கள்.

இன்று பொருளை வாங்குவதிலோ சேர்த்து வைப்பதிலோ அதிக கஷ்டம் இருப்பதில்லை. புத்திசாலியான மனிதன் இப்பொழுது செலவு செய்துவிடுவதற்குப் பதிலாக எதிர் காலத்துக்கென்று சேர்த்து வைப்பதைச் சிலாக்கியமாய்க் கொண்டு, தமது சேமிப்புகளைப் புத்திசாலித்தனமாய் வட்டிக்குப் போட்டு வைக்கிறான். நேஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் வட்டிக்குப் போட்டு வைக்கப்படும் பணம் மிகவும் பத்திரமாயிருக்கிறது; மேலும் அது உரிய காலத்தில் 50 சத வீதம் அதிகமாகிறது. அதாவது, பிரதி 10 ரூபாயும் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாயாகிறது. இந்த வட்டிக்கு இன்கம்-டாக்ஸ் கிடையாது. இப்பொழுது நீர் 5 ரூபாயிலிருந்து 15,000 ரூபாய் வரையில் எவ்வளவு தொகையையேனும் வட்டிக்குப் போட்டு வைக்கலாம். சிறு சேமிப்புக்காரர்கள் 4 அணா 8 அணா அல்லது 1 ரூபாய்க்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம்.

எதிர்காலத்துக்கென்று சேர்த்து வைக்கவும்

நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளை வாங்கவும்

பிரபலமான முதலீடு

பெற்ற ஏஜெண்டுகளிடமும், ஸேவிங்ஸ் பிரோக்களிலும் இந்த
டுகள் கிடைக்கும்.

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற் றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகா ணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

வயிற்றுக் கோளாறுகளிலிருந்து விடுதலை

நீங்கள் வயிற்று வலி, வயிற்று எரிச்சல், அஜீரண ஏப்பம் முதலியவற்ருல் துன்பமடைந்தாலும் அதிவிரைவில் குண மடைந்து குதூகலமடைவீர்கள்—உடனடியாக "மில்க் ஆப் மெக்நீஷியா" சாப்பிட ஆரம்பியுங்கள். ஹ்ருதய எரிச்சலால் உண்டாகும் உபாதையும், வாயுத் தொந்தரவுகளும் சடுதியில் ஒழிகின்றன. இரவில் வயிற்று உபாதையால் தூக்கமில்லாதிருந்தால் படுக்கும்பொழுது "மில்க் ஆப் மெக்நீஷியா"வை உபயோகியுங்கள். அன்றைய வேலையைக் குதூகலமாகச் செய்யும் ஊக்கத்துடன் எழுந்திருப்பீர்கள். "பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்நீஷியா" வயிற்றுப் புளிப்பை ஒழித்து மலத்தை இளக்கக் கூடிய ஓர் அரிய சாதனம் என்பதை நீங்கள் மறவாதீர்கள்.

PHILLIPS

"MILK OF MAGNESIA"

LIQUID or TABLETS

No. 1

கட்டிடங்களுக்கு எஃகு



டாடா எஃகு

டாடா அயர்ண் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

தலைமை சேல்ஸ் ஆபீஸ் :

102 A நேதாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா.

பொருள் அடக்கம்

மலர் 14 : : இதழ் 10

அமரர் மகாத்மா	...	தலையங்கம்	9
காந்தியைக் கொல்ல முடியாது	...	மோ. க. காந்தி	10
விளக்கு அணைந்தது	...	பண்டித ஜவாஹர்லால் நேரு	11
வையம் இருளடைந்து போச்சு	...	சுரபி	14
முஸ்லிம்களுக்கு ஓரம்	...	மகாத்மா காந்தி	15
குற்றமும் தண்டனையும்	...	மகாத்மா காந்தி	16
சரித்திர புருஷர்	...	ரவீந்திரநாத தாகூர்	18
மேனாட்டிலிருந்து ஒரு காணிக்கை	...	ரோமெய்ன் ரோலந்து	19
மனிதருள் மாணிக்கம்	...	பெர்ள் பக்	23
காந்தி	...	பிரெட் ஈஸ்ட்மேன்	27
காந்தி சக்தி	...	காஸா சுப்பாராவ்	33
காந்திஜியும் கவிஞரும்	...	...	37
தெய்வம் நின்று காக்கும்	...	லியோ டால்ஸ்டாய்	41
காந்தி மகாத்மா	...	கொத்தமங்கலம் சுப்பு	51
உலகின் அனுதாபங்கள்	...	...	55
படங்கள்	...	...	65—88
தமிழகத்தில் முதல்......	...	கிருஷ்ணதாஸ்	89
சுயராஜ்யத்தில்	...	மகாத்மா காந்தி	101
காந்தியடிகள் சரிதை	...	...	105
காந்தியாருக்கு ஞாபகச் சின்னம்	...	ஈ. வெ. ராமசாமி	127

நீங்கள் நேரில் வந்து
பரீக்ஷை செய்யுங்கள்



முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானால் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் பாபாலால் கம்பெனியிலிருந்து வாங்கினதானால் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டியதில்லை. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS.

சர்வசித்து
மலர் 14

சக்தி

மாசி
இதழ் 10

மெய்ப் பொருள் காண்பது அறிவு

அமரர் மகாத்மா

●

மகாத்மா காந்தி காலம் சென்று இரண்டு வாரங்களுக்கு மேலாகிவிட்டன; ஆயினும், இன்னும் உலகத்தின் துக்கம் தீரவில்லை. எப்படித் தீரும்? ஆயிரம் வருஷங்களுக்கு ஒரு முறை அபூர்வமாக மனித சமூகத்தில் தோன்றும் ஒரு புண்ணிய புருஷனின் அஸ்தமனத்தை, எத்தனை ஆண்டுகள் சென்று நினைத்துப் பார்த்தாலும் உள்ளம் துக்கத்திற்கும் துயரத்திற்கும் ஆளாகாமல் போகுமா? மகாத்மா காந்தி தம் வாழ்க்கையின் அந்திய காலத்தில், இந்தியாவில் நிகழும் கோரமான கொலைகளையும், அக்கிரமங்களையும் கண்டு மனம் வெதும்பினார்; இனித் தாம் வாழ்வதில் பயன் இல்லை என்று கூட நினைக்கத் துணிந்து விட்டார். அவரைப் பின்பற்றக்கூடிய ஒரு சிலராவது இந்த நாட்டில் இருந்திருப்பார்கள் என்றால் மகாத்மா நிச்சயம் அவ்விதம் நினைத்திருக்கமாட்டார். இந்த மன வேதனையின் நடுவிலேயே, திடீரென்று அநியாயமாக மகாத்மாவுக்குச் சாவு வந்தது. உலகின் நாலா பக்கங்களிலும் உள்ள பெரியவர்களெல்லாம், 'ஞான விளக்கு அணைந்துவிட்டதே' என்றும், 'உலகம் அனாதையாகி விட்டது' என்றும் துக்கித்தார்கள். ஆனால், உண்மையில் ஞான விளக்கு அணையவில்லை. மகாத்மாவின் பூதவுடலுடன் மறையக் கூடியனவா அவருடைய சொத்துக்களாகிய அஹிம்சையும் சத்தியமும்? மகாத்மாவின் மரணத்துக்குப் பின்னும் அவருடைய ஞான விளக்கு ஒளிவீசிப் பிரகாசிக்கிறது; இனி என்றென்றும் பிரகாசிக்க இருக்கிறது. இந்த ஞான சூரியனின் அருட்பெருஞ் ஜோதி, பலாத்காரமும் பொய்யும் கலந்த இருளிலே கிடந்து உழலும் மனித வர்க்கத்துக்கு வழிகாட்டி உதவக் காத்திருக்கிறது. ஆகவே, மகாத்மாவின் வாழ்நாளிலே அவர் உபதேசித்த தர்மங்களைக் கடைப்பிடிக்கத் தவறிய நாம், இனியாவது அந்தத் தர்மங்களை நம் வாழ்க்கையில் கடைப்பிடித்து வருவோமாக! முப்பது கோடி மக்களும், 'அறுபது கோடி தடக்கைகளாலும் அறங்கள் நடத்தச்' சித்தமாக இருக்கும் வரையிலும் மகாத்மா நம் அருகிலேயே வீற்றிருப்பார்; வீற்றிருந்து உதவுவார்.

✤

காந்தியைக் கொல்ல முடியாது

★

என்னைக் கொல்லுவதற்குப் பல தடவை களிலும் முயற்சி நடந்திருக்கிறது. ஆனால் கடவுள் இன்றுவரையும் என்னைக் காப்பாற்றி வந்திருக்கிறார். என்னைத் தாக்கி யவர்களும் தாங்கள் செய்ததை நினைத்து வருந்தியிருக்கிறார்கள். ஆனால், ஒரு அயோக்கியனை ஒழித்துக் கட்டுகிறோம் என்று நினைத்து, இனி யாராவது என்னைச் சுட்டால், அவனால் உண்மையான காந்தி யைக் கொல்ல முடியாது; அவன் கண் ணுக்கு எவன் அயோக்கியனாகத் தோன்றி னானோ அவனைத்தான் கொல்ல முடியும்.

—மோ. க. காந்தி

✲

விளக்கு அணைந்தது

ஜவாஹர்லால் நேரு



சிநேகிதர்களே, தோழர்களே, நம்மிடமிருந்து விளக்கு போய் விட்டது. எங்கு பார்த்தாலும் இருள் சூழ்ந்திருக்கிறது. உங்களுக்கு என்னசொல்லுவதென்று எனக்குத் தெரியவில்லை; எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. நமது அருந் தலைவர்—அவரை நாங்கள் பாபு என்று அழைப்பது வழக்கம்—நமது தேசத்தின் பிதா மறைந்துவிட்டார். அவ்விதம் நான் சொல்லுவது பொருந்தாது எனத் தோன்றுகிறது. இருப்பினும் நாம் இத்தனை ஆண்டுகளாக எவ்விதம் அவரைப் பார்த்து வந்தோமோ அவ்விதம் இனிப் பார்க்க முடியாது. புத்திமதி கேட்பதற்காக அவரிடம் போக முடியாது. அவரிடமிருந்து ஆறுதல் பெற முடியாது. அது எனக்கு மட்டிலும்மல்ல; கோடிக் கணக்கான மக்களுக்கும் அது ஒரு பெரிய தாக்குதல்.

உங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தத் தாக்குதலின் வலியை நானோ அல்லது வேறு யாருமோ ஆறுதல் கூறி ஆற்ற முடியாது.

விளக்கு போய்விட்டதென்று நான் சொன்னேன். ஆனால் நான் அவ்விதம் சொன்னதும் பொருந்தாது. தேசத்திலிருந்த அந்த ஒளி சாதாரண ஒளி அல்ல. இது வரையில் நமது தேசத்தில் வீசிவந்த அந்த ஒளி இன்னும் பல்லாண்டுகளுக்கு இந்தத் தேசத்தைப் பிரகாசப் படுத்திக் கொண்டிருக்கும். ஆயிரம் வருஷங்களுக்குப் பின் இந்தத் தேசத்தில் இதே ஒளி மீண்டும் தோன்றும். அதை இந்தத் தேசமும் உலகமும் பார்க்கும். அந்த ஒளி எண்ணற்ற மக்களுக்கு ஆறுதல் அளிக்கும். ஏனெனில் அந்த விளக்கு இப்பொழுதுள்ள காலத்தைப் பிரதிபலிக்கவில்லை. அது ஜீவகலையுள்ள சத்தியத்தைப் பிரதிபலித்தது. ஒரு நாளும் அழியாத சத்தியங்களைப் பிரதிபலித்தது; தவறான வழியிலிருந்து இழுத்து நல்வழியிலே நம்மை நடத்திச் சென்று வந்தது; இந்தப் புராதன நாட்டுக்கு சுதந்

மகாத்மா காந்தி அமரரான தினத்தன்று இரவு ரேடியோவில் பண்டித நேரு பேசிய பேச்சு இது. மனம்விம்ம, பேச முடியாதபடி இடையிடையே தொண்டை அடைத்துக் கொள்ள, மிகுந்த சிரமத்துடன் பேசினார் பண்டித நேரு. காந்தி மகானின் வாரிசு நமக்குப் போதித்த இந்த போதனைகளைக் கடைப் பிடிக்கப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுவோமாக!

திரத்தைச் சம்பாதித்துக் கொடுத்தது.

அன்னாரால் நமக்கு இவ்வளவு அனுகூலமும் ஏற்பட்டிருக்கிறது. அதுபோல் இன்னும் எத்தனையோ அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கும். எந்தச் சமயத்திலும் அவரை அனாவசியமாக நாம் நினைத்ததே கிடையாது. அவருடைய காரியம் பூர்த்தியாய் விட்டதென்றும் நாம் நினைத்ததும் கிடையாது.

எவ்வளவோ கஷ்டங்கள் நம்மைச் சூழ்ந்திருக்கும் இந்த மோசமான சமயத்தில் அவர் நம்முடன் இல்லாமலிருப்பது பெருத்த துரதிர்ஷ்டமாகும். இதை நம்மால் சகிக்கவே முடியாது.

ஒரு பைத்தியக்காரன் அவரைக் கொன்றுவிட்டான். இத்தகைய காரியம் செய்தவனைப் பைத்தியக்காரன் என்றுதான் நான் சொல்வேன். கடந்த சில வருஷங்களாக நமது நாட்டில் விஷம் பரப்பப்பட்டு விட்டது. அந்த விஷம் மக்களின் மனதில் வேலை செய்தது. அந்த விஷத்தைச் சமாளித்து அதைப்பூண்டோடு ஒழிக்க வேண்டும். நம்மை எதிர் நோக்கியுள்ள எல்லா ஆபத்துக்களையும் சமாளிக்கவேண்டும். பைத்தியக்காரத்தனமாகவோ, மோசமான வகையிலோ அல்லாமல் நமது அரும் தலைவர் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ள முறையில் அவைகளைச் சமாளிக்கவேண்டும். நாம் கோபமாயிருக்கிறோமென்ற காரணத்துக்காக நம்மவரில் யாரும் தவறான முறையில் நடக்கத் துணியக்கூடாது. நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய முதல் விஷயம் இது தான். பலவான்களாகவும் உறுதியுள்ளவர்களாகவும் நாம் நடந்து கொள்ளவேண்டும். நமக்கு வந்திருக்கும் ஆபத்துக்களைச் சமாளிக்க உறுதி கொள்ள வேண்டும்.

நமது தலைவரும் குருவுமாகிய மகாத்மா நமக்கு இட்டுள்ள கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்று உறுதிகொள்ள வேண்டும். அவருடைய ஆத்மா நம்மைப் பார்க்கும்பொழுது-அவருடைய ஆத்மா நம்மைப் பார்க்குமென்றே நான் நம்புகிறேன்—நாம் பலாத்காரத்திலோ அல்லது அற்பத்தனத்திலோ ஈடுபடுவதாகக் கண்டால் அவருடைய ஆத்மா மிகவும் வருத்தமடையுமென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, அவருடைய கட்டளையை நிறைவேற்றி நமது ஆபத்துக்களைச் சமாளிக்க வேண்டும்.

ஆகவே, நாம் அற்பத்தனமாகவோ பலாத்காரமாகவோ நடந்துகொள்ளக்கூடாது. அதற்காக நாம் பலவீனர்களாயிருக்க வேண்டுமென்பதல்ல. நாம் ஐக்கியமாகவும் பலசாலிகளாகவும் இருந்து நம் முன்புள்ள கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டும்.

நாம் ஐக்கியமாயிருக்க வேண்டும். இப் பெரிய விபத்தின் எதிரே நமது கஷ்டங்களையும் சிறு தகராறுகளையும் முடிவு கட்டிவிடவேண்டும். ஒரு பெரிய விபத்தானது சிறு விஷயங்களை மறந்து வாழ்க்கையின் உயரிய விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கான ஒரு அறிகுறியாகும். சிறு விஷயங்களைப் பற்றியே நாம்

சமீப காலமாக அதிகமாக யோசனை செய்து வருகிறோம். அவர் தமது மரணத்தின் மூலமாக வாழ்க்கையின் உயரிய விஷயங்களை ஞாபகப் படுத்தியுள்ளார். அழிக்கமுடியாத சத்தியத்தை ஞாபகமூட்டியுள்ளார். அதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் இந்தியாவுக்கு நன்மை ஏற்படும்.

லக்ஷக் கணக்கான மக்கள் மகாத்மாவை தரிசித்து தங்கள் கடைசி மரியாதையைச் செலுத்தும் பொருட்டு அவருடைய சரீரத்தைத் தைலபாடம செய்து இன்னும் சில தினங்களுக்குப் பாதுகாத்து வைக்கலாமென்று சில நண்பர்கள் யோசனை கூறினர்.

ஆனால் அதெல்லாம் செய்யக் கூடாதென்றும் தமது பிரேதத்தைத் தைலபாடம் செய்யவோ, பாதுகாத்து வைக்கவோ கூடாதென்றும் மகாத்மா பலதடவைகளிலும் சொல்லியிருக்கிறார். காந்திஜி அதை விரும்பியதில்லை. பிறர் எவ்வளவு ஆசைப் பட்டாலும் இவ் விஷயத்தில் மகாத்மாவின் விருப்புத்துக்கு மாருக எதையும் நாங்கள் செய்ய விரும்பவில்லை.

நமது மகாத்மா எந்த நோக்கத்துக்காக உயிர் வாழ்ந்து இறந்தாரோ அந்த நோக்கததுக்காகவும் சத்தியத்துக்காகவும் நம்மை அர்ப்பணம் செய்துகொள்வதாக நாம் சங்கல்பம் செய்துகொள்வதே நாம் செய்ய வேண்டிய பிரார்த்தனை. நமக்கும் நமது தேசத்துக்கும் நாம் செய்யக் கூடிய சிறந்த பிரார்த்தனை இதுவே.

*

அயல் நாடுகளில் அஹிம்சைப் போராட்டங்கள்

●

ஆல்டௌஸ் ஹக்ஸ்லி

1901-லிருந்து *1905*-ம் ஆண்டு வரையில் பின்லாந்தில், பின்லாந்து மக்கள் ருஷ்யர்களை எதிர்த்து அஹிம்சைப் போர் நடத்தினர்கள். இந்தப் போராட்டம் பலனளித்தது. *1905*-ம் ஆண்டு பின்லாந்தியர்கள் மீது இருந்த கட்டாய ராணுவச் சட்டம் நீக்கப்பட்டது.

ஹங்கேரி நாட்டிலும் ஒரு அஹிம்சைப் போராட்டம *1867*-ம் ஆண்டு நடந்தது. டீக் என்பவர் இந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தி வெற்றி பெற்ருர்.

ஜெர்மனியிலுங்கூட பிஸ்மார்க்கை எதிர்த்து நடந்த போராட்டமும், கத்தோலிக்கர்களின் கிளர்ச்சியும், தொழிலாளரின் இயக்கமும் அஹிம்சை வழியில் சென்று வெற்றியே பெற்றன. 1871-ம் ஆண்டுக்குப் பிறகு சமுதாய ஜனநாயகக் கட்சியின் அங்கீகாரத்திற்காக நடந்த கிளர்ச்சியும் வெற்றி பெற்றன. சமீபகாலத்தில்கூட, எகிப்து நாட்டில் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த போராட்டமும் அஹிம்சை முறையில் தான் நடந்தது.

வையம் இருளடைந்து போச்சு

●

சுர்பி

புதிர்........

வெள்ளிக் குடமுடைந்து போனால்—நாங்கள்
வீரிட் டலறியழ மாட்டோம்
தங்கக் குடமுடைந்து போனால்—நாங்கள்
தரையில் புரண்டலற மாட்டோம்
மண்ணின் குடமுடைந்து போச்சு—நாங்கள்
மண்டை பிளந்திடுறோ மையா!
மன்னன் எமைப்பிரிந்து போனால்—நாங்கள்
மனது தளர்ந்திடவு மாட்டோம்
வீரன் எமைப்பிரிந்து போனால்—நாங்கள்
விம்மி யழுதிடவு மாட்டோம்
பங்கி எமைப்பிரிந்து போனான்—நாங்கள்
பாரிற் புரளுகிறோ மையா!
சின்னஞ் சிறியசிசு போனால்—நாங்கள்
தேம்பி யழுதிடவு மாட்டோம்
காளை கயிறறுந்து போனால்—நாங்கள்
கதறி யழுதிடவு மாட்டோம்
தொண்டு கிழவன்விட்டுப் போனான்—நாங்கள்
சோகக் கடல் விழுந் தோமையா!

........புரிந்தது

மண்ணின் குடமுடைந்து போனால்—அதை
மயக்கிப் பிசையவழி யுண்டோ?
பங்கி எமைப்பிரிந்து போனால்—இந்தப்
பாரைத் துலக்கவழி யுண்டோ?
தொண்டு கிழவன்விட்டுப் போனால்—எமைத்
தூக்கி வளர்க்கக்கர முண்டோ?
வீட்டின் விளக்கணைந்து போனால்—அண்டை
வீட்டின் ஒளியடுத்து வாழ்வோம்
நாட்டின் விளக்கணைந்து போனால்—இந்த
ஞால விளக்கொளியில் வாழ்வோம்
வையம் இருளடைந்து போச்சு—இனி
வாழும் வழியெமக்கு உண்டோ?

*

முஸ்லிம்களுக்கு ஓரம்

●

மகாத்மா காந்தி

நான் முஸ்லிம்களின் சார்பிலுள்ளவன் என்னும் குற்றச்சாட்டு மறுபடியும் இருமடங்கு வேகத்துடன் வருகிறது. "நீங்கள் ஹிந்துக்களின் குறைகளை மிகைப்படுத்திவிடுகிறீர்கள். முஸ்லிம்களின் குறைகளைக் குறைத்துவிடுகிறீர்கள்." இது என்னைப் பற்றி விமரிசனம் பண்ணுகிறவர்கள் கூறுவதின் சாரம். இக் குற்றச்சாட்டை ஒரு வழியில் ஏற்றுக்கொள்ளுகிறேன். நாம் சரியான தீர்ப்புக் கூற வேண்டுமானால், விஷயங்களை உள்ளது உள்ளபடி பார்க்கும் இயற்கை வழியை நாம் பின்பற்றியே தீரவேண்டும். பழக்க தோஷத்தால் செயற்கை, இயற்கை போல் ஆய்விட்டது. நமது குறைகளைக் குறைத்து, எதிரியின் குறைகளை மிகைப்படுத்துகிறோம். இது சகியாத் தன்மையை வளர்க்கிறது. நாம் பெருந் தன்மையாகவும் தாராளமாகவும் இருந்தால் நமது எதிரிகள் தம்மை எப்படிக் கருதுகின்றார்களோ, அப்படியே நாமும் அவர்களைக் காண முயலுவோம். இம் முயற்சியில் ஒருக்காலும் பூரண வெற்றி கிடைக்காது. ஆனால், அதுதான் நமக்கு விஷயங்களை உள்ளது உள்ளபடி எடுத்துக் காட்டும். எனவே ஹிந்துக்களின் குறைகளை நான் மிகைப்படுத்தியிருக்கிறேன் என்பது மேற்பார்வைக்குத் தெரியும் தோற்றமே. எனது விமரிசகர் சொல்லுகிறார்: "நீங்கள் சொல்லுகிற மாதிரி, மௌலானா அப்துல் பாரி கடவுளின் கள்ளமில்லாத ஒரு குழந்தைதான் என்று நாங்கள் நம்ப வேண்டுமென்பது உங்கள் விருப்பமல்ல. ஐக்கிய மாகாணத்தில் வசிக்கும் எங்களுக்குத் தெரிந்த மட்டில், அவர் தற்பெருமைக்காரர், பொய்யர், நம்ப முடியாதவர் என்றே சொல்லுவோம்." இவர்கள் சொல்லுகிற மாதிரியே மௌலானா சாஹிப் எனக்குத் தோன்றியிருந்தால், அதைத் தயங்காது சொல்லியிருப்பேன் என்பது உறுதி. அவர் ஓர் ஆபத்தான நண்பர் என்னும்போது, அவருக்கு எதிராகச் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிவிட்டேனென்றே நினைக்கிறேன். பொய்மையை நான் அவரிடம் கண்டதில்லை. சிலர் நினைக்கிற மாதிரி, நான் அரசியல் காரியங்களைச் சாதிப்பதற்காக முஸல்மான்களைத் துதிசெய்கிறேன் என்று விமர்சகர்கள் கருதக் கூடாது.

முகஸ்துதி செய்வது என்னால் முடியாத காரியம். இதனால், ஒற்றுமை ஏற்பட்டுவிடாதென்பது எனக்குத் தெரியும். மரியாதையை முகஸ்துதி என்றும், அடக்கமின்மையைப் பயமின்மை என்றும் தவறாக நினைத்துவிடக் கூடாது.

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட மகாத்மா காந்தி அவ்வகையில் தம் நிலை என்ன என்பதை இக்கட்டுரையில் விளக்குகிறார்: புதுமைப் பதிப்பகத்தாரின் ஹிந்து-முஸ்லிம் பிரச்னை என்னும் புத்தகத்திலிருந்து.

✱

ஹிந்து—முஸ்லிம்

நான் உயிரோடு இருக்கும்பொழுது இல்லாவிட்டாலும் நான் இறந்த பிறகாவது இந்துக்களும் முஸ்லிம்களும், நான் வகுப்புவாதத்தை ஒழிக்கப் பாடுபட்டேன் என்பதை நிரூபிப்பார்கள். —காந்திஜி

குற்றமும் தண்டனையும்

மகாத்மா காந்தி

திருடர்களுக்கும் கொள்ளைக் கூட்டத்தாருக்கும், கொலை காரர்களுக்குங் கூடத் தண்டனை கொடுப்பதை என்னுடைய அஹிம்சைக் கொள்கை ஆமோதிக்க வில்லை.

'பீனல் கோடையும் அது விதிக்கும் தண்டனைகளையும் நான் ஒப்புக் கொள்ளுவேனுனல், நானே ஹிம்சையைச் செய்கிறவனுக ஆவேன். என் மனம்போல நடப்பதென்ருல எல்லாச் சிறைக் கதவுகளையும் விரியத் திறந்து விட்டு, கொலைகாரர்களைக்கூட விடுதலை செய்துவிடுவேன். ஆனல், இந்த அபிப்பிராயம் கொண்டிருப்பதால், நான் பெருமைப்படக் கூடிய சிறுபான்மையோனுகத்தான் இருப்பேன் என்பதுஎனக்குத்தெரியும்.

எல்லாக் குற்றங்களும் பலவித வியாதிகளைச் சேர்ந்தவையே. குற்றவாளிகளை வியாதியஸ்தர்களாக் கருதி, அவர்களுக்குச் சீர்திருத்தகாரர்கள் சிகிச்சை தரவேண்டும். இதனல் போலீஸ் காரர்களுக்கு இந்தக் குற்றங்களைச் சமூகக் குற்றங்கள் என்று கருதும் வேலை இருக்காது என்று அர்த்தமல்ல. ஆனல், அவர்கள் கையாளும் முறைகள், இந்தச் சமூகக் குற்றங்களின் அடிப்படைக் காரணங்களைக் கண்டு பிடிக்க பயன்பட ஏற்பட்டவை அல்ல.

அம்மாதிரிச் செய்வது சீர்திருத்தவாதிகளின் தனிப் பெருமையும் உரிமையுமாகும். சமூகம் ஆத்மீகத் துறையில் முன்னேருத வரையில் இந்தமாதிரியான குற்றங்கள் வளர்ந்து கொண்டுதானிருக்கும்; அதுவும் இந்தக் குற்றவாளிகளின் ஆத்ம சிந்தனை மழுங்கினல்தான். ஆகவே எனக்குத் தெரிந்தவரையில் ஒரே ஒரு வழிதான் உள்ளது: அதாவது சீர்திருத்தவாதிகள் ஒன்று கூடிக் குற்றவாளிகளைச் சீர்திருத்த ஒழுங்குபட்ட சில முறைகளை வகுத்துக்கொள்ள வேண்டுவது தான்.

சில சூழ்நிலையில் தவறு செய்கிறவர்களுக்குத் தண்டனை விதிக்கலாம். உதாரணமாகத் தற்போதைய சமூக அமைப்பில் திருடர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் சிறைத் தண்டனை கொடுக்க நான் தயங்கமாட்டேன். இந்தச் சமுதாய அமைப்பில் வேறு வழியே எனக்குத் தோன்றவில்லை. ஆகவே, சிறைக் கூடங்கள் தண்டனை கொடுக்கும் இடங்களாக இருப்பதைக் காட்டிலும், சீர்திருத்த மன்றங்களாகத் திகழ வேண்டும் என்று சொல்லுவதோடு திருப்தி அடைகிறேன்.

ஆனல், தூக்குத் தண்டனைக்கும், சிறைத் தண்டனைக்கும் அல்லது சித்திரவதைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை எடுத்துச் சொல்லுவேன். அந்த வித்தியாசம் அளவில் மட்டுமல்லாமல் குணத்திலும் உள்ளது என்றே நினைக்கிறேன். சிறைத் தண்டனையை ரத்துச் செய்யலாம். ஒருவனைச் சித்திரவதை செய்தாலும் அவனுக்கு, பிறகு, பட்ட கஷ்டத்துக்கு ஈடு கொடுக்கலாம். ஆனல், ஒருவனைக் கொன்றுவிட்டாலோ, அந்தத் தண்டனையை மீட்கமுடியாது, திருத்தியமைக்க முடியாது; படைக்கும் கடவுள் தான் அழிக்கவும் வல்லவர்.

குற்றத்துக்கும் தண்டனைக்கும் உள்ள சம்பந்தத்தையும், குற்ற நிவாரணத்துக்குரிய மார்க்கத்தையும் இக்கட்டுரையில் மகாத்மா விவரிக்கிருர்.

The Time Factor—

in the ARMY



நம்பிக்கை முக்கிய அம்சமாயின் "வெஸ்ட் எண்ட்" கடியாரத்தை வைத்திருக்கவேண்டும்.

க்வின் ஆன்-க்ரிஸ்டல் ஷேப்; நிக்கல் ஸில்வர் ரு. 52.

in the NAVY



மாட்ச்லஸ (க்ரிஸ்டல் ஷேப்)

நிக்கல் ஸில்வர் கேஸ் ரு. 57.



சமாதான காலத்திலும், யுத்த காலத்திலும் பலவிதமான சோதனை நிலையிலும், பல்லாயிரக் கணக்கான வெஸ்ட் எண்ட் கடிகாரங்கள் அவைகளின் திறமையை நிரூபித்திருக்கின்றன. எப்பொழுதும் வெஸ்ட் எண்ட் கடிகாரங்களையே கேளுங்கள். அவைகளே உங்கள் பணத்திற்குகந்த பெருமதிப்புள்ளது.

வெஸ்ட் எண்ட் வாட்சு கோ. :: பம்பாய் & கல்கத்தா.

WEST END WATCH Co.

BOMBAY **CALCUTTA**

சரித்திர புருஷர்

ரவீந்திரநாத தாகூர்

அரசியல் மேடையில் ஏகதேசமாகச் சரித்திர புருஷர்கள் தோன்றுகிறார்கள். இவர்களடைந்திருக்கிற மனோபரிபக்குவம், சாதாரண ஜனங்களடைந்திருக்கிற மனோபரிபக்குவத்தைக் காட்டிலும் மிகவும் உயர்ந்ததாயிருக்கிறது. இவர்களிடத்தில் பிரகாசிக்கும் அதிகார சக்தியானது, பலாத்காரத்தை விட அதிகமான சக்தியுடையதாய், மற்றவர்களை எளிதில் இணங்கும்படிச் செய்கிறது; மனிதனிடத்திலுள்ள குறைபாடுகளாகிய பேராசை, அச்சம், கர்வம் முதலியவற்றைத் தோண்டியெடுக்கிறது. மகாத்மா காந்தி தோன்றி இந்தியாவின் சுதந்திரப் பாதையைத் திறந்துவிட்டபோது, அவர் கையில் எந்தவிதமான அதிகாரக் கருவியும் இல்லை; எந்த விதமான அடக்கு முறைச் சக்தியும் கிடையாது. ஆனால் அவருடைய புருஷத்துவத்திலிருந்து உதயமான சக்தியோ, சங்கீதத்தைப் போல், அழகைப்போல் வருணிக்க முடியாதது. அஃது—அந்தச் சக்தி—மற்றவர்களைத் தன் வசம் எளிதில் ஆட்படுத்திக் கொண்டுவிட்டது. ஏனென்றால் அது, தன்னையே பிறருக்கு அளிக்கும் தன்மையானது; அப்படி அளிப்பதிலே ஒரு சந்தோஷத்தையும் அடைகிறது. இதனால் தான், காந்தியடிகளின் அறிவு விசேஷத்தைப் பற்றி இந்தியர்கள் அதிகமாக வற்புறுத்திப் பேசவில்லை. அவருடைய குணவிசேஷத்தில் சத்தியமானது, மிக எளிய தன்மையில் பிரகாசிப்பதையே பெரிதும் பாராட்டுகிறார்கள். இதனாலேயே அவர் அரசியல் துறையிலேயே அதிகமாக ஈடுபட்டிருந்த போதிலும் அவரை, எந்த மகான்கள் அகில உலகத்திடமும் அன்பு பூண்டொழுகுகிறார்களோ, எவர்கள் ஜனங்களின் மனதை உலகாயத எண்ணத்தினின்று திருப்பி ஞானமார்க்கத்தில் கொண்டுவிடுகிறார்களோ, அப்படிப்பட்ட மகான்களில் ஒருவராக எல்லா ஜனங்களும் கொண்டாடுகிறார்கள்.

கவியரசரின் இந்தக் கட்டுரை, கமலா பிரசுராலயத்தாரின் மகாத்மா காந்தி என்னும் நூலிலிருந்து எடுத்தது.

*

ஒழுக்கத்திலும் உயர்ந்தவன் மனிதன்

மனிதன் உத்தாரணம் செய்யக்கூடிய ஒழுங்கு முறையைவிட மனிதன் உயர்ந்தவன் என்பதை நான் கண்டுகொண்டிருக்கிறேன்.

—மகாத்மா காந்தி

மேனட்டிலிருந்து ஒரு காணிக்கை

ரோமெய்ன்ரோலந்து

இந்திய தேசீய சரித்திரம் பிற்காலத்தில் எழுதப் படுமானல் அதில் மகாத்மா காந்தி ஒரு தேசீய வீரராகமட்டும் போற்றப்பட மாட்டார். யுக சரித்திரத்தில் அவருடைய பெயர் புனித ஞாபகத்துடன் போற்றப்படும். இந்திய மகா ஜனங்களின் ஒற்றுமை உணர்ச்சியையும், அவர்களுடைய சக்தியையும், அவர்களுடைய சுதந்திர இச்சையையும் பிரதிபலித்துக் காட்டும் கிரியா சக்தியாக அவர் விளங்குகிறர். மேனட்டார் மறந்துவிட்ட அல்லது புறக்கணித்துவிட்ட இயேசுநாதரின் உபதேசத்தை மீண்டும் அவர் புதுப்பித்துக் கொணர்ந்திருக்கிறர். மானிட சமுதாயத்தின் முனிவர்கள், சாதுக்கள் முதலியோர்களுடைய வரிசையில் அவர் பெயர் சேர்க்கப்பட்டுவிட்டது. உலகத்தின் மூலே முடுக்குகளிலெல்லாம் அவருடைய உருவத்தின் ஒளி வீசுகிறது. அவர் தோன்றியதை ஏதோ ஓர் அற்புதச் செயல் நிகழ்ந்திருப்பதாகவே மேனட்டார் கருதினர்கள். அப்படிப்பட்ட ஒரு காலத்தில்தான் அவர் தோன்றினர். அப்பொழுது ஐரோப்பிய மகா யுத்தம் நான்கு வருஷம் கோரமாக நடைபெற்று முடிந்திருந்த காலம். அந்த யுத்தத்தினல் ஏற்பட்ட அழிவுகளும், மனக் கசப்புகளும் மறையவில்லே. அதற்கு மாருக அவை வேரூன்றிக் கொண்டு வந்தன. அதே சமயத்தில் இன்னும் கடுமையான யுத்தங்களுக்கு விதைகளும் தெளிக்கப்பட்டு வந்தன. மற்றும் அநேக நாடுகளில் புரட்சிகள் ஏற்பட்டுச் சமுதாயத் துவேஷங்களை அதிகப்படுத்திக் கொண்டு வந்தன. இவையெல்லாம் சேர்ந்து தேசங்களின் மனத்தை அரித்துவந்தன. ஐரோப்பா துக்கமும் ஏக்கமும் நிறைந்த ஓர் இரவுபோல் இருந்தது. எங்கும் ஒளியின் ரேகைகூடக் காணப்படவில்லே. இப்படிப்பட்ட தருணத்தில், மெலிந்த தேகத்தினரும் அரை நிர்வாணமாயுமுள்ள ஒரு சிறிய மனிதர் தோன்றினர். அவர்தான் காந்தியடிகள். அவர் பலாத்காரத்தைப் புறக்கணித்தார். நியாய புத்தியும அன்புமே அவருடைய ஆயுதங்கள். அவருடைய சாந்தசுபாவம் — ஆம், உறுதியான சாந்தசுபாவம்—இப்பொழுதே தனது முதல் வெற்றிகளை அடைந்து வந்திருக்கிறது. இதுகாறும் தனித்தியங்கிக் கொண்டு வந்த மேனட்டு எண்ணம், பரம்பரை முதலியவைகளுக்கெல்லாம் விரோதமாக ஏறபட்டிருக்கிற இந்த வெற்றியானது, ஒரு பெரிய புதிராகவே பலருக்கும் தோன்றியது. ஆனல், இந்த வெற்றியானது, ஏக்கத்துடன் தவித்துக் கொண்டிருக்கும் மானிட ஜாதிக்கு ஓர் ஒளி போல் இருந்தது. முதலில் யாரும் இதனே நம்பவில்லே. இப்படிப்பட்ட ஒரு மகான் தோன்றியிருக்கிருரென்பதைப் பலரும் நம்பச் சிறிது காலமாயிற்று.

கட்டுரையாளர் உலகப் பிரசித்தி பெற்ற நாவலாசிரியர். மேதைகளுக்கும் மேதையாக விளங்கும் இவர் காந்திஜிக்குத் தலே வணங்கி, கட்டுரையை முடிக்கிறர். கமலா பிரசுராலயத்தாரின் மகாத்மா காந்தி எனும் நூலிலிருந்து.

அவருடைய பெருமையை என்னைத் தவிர வேறு யாரறிவார்? ஏனென்றால் மகாத்மாவின் உபதேச உயர்வை முதன் முதலாகக் கண்டுபிடித்து அதனைப் பரப்பிய மேனாட்டார் பலருள் நான் ஒருவன். இந்தியாவின் ஆத்மீகத் தலைவரான அவருடைய நிதானமானதும் ஆனால் நிச்சயமானதுமான வேலைப்பாடுகளின் விளைவுகள் தெரிந்த பிறகே, மேனாட்டினர் பலரும் அவரை அங்கீகரிக்கவும் அவரிடம் நம்பிக்கைகொள்ளவும் ஆரம்பித்தார்கள். கிறிஸ்து நாதரே மீண்டும் தோன்றியிருக்கிறாரென்று பலரும் கருதினர். சுயமாகச் சிந்திக்கிற வேறு பலர், மேனாட்டு நாகரிகம் ஒழுங்கீனமான முறையில் சென்று வருவதைக் கண்டும், தன்னுடைய விஞ்ஞான அறிவைக் கொண்டு தானே அழிந்து போய்க்கொண்டு வருவதைப் பார்த்தும் மனமுடைந்தவர்களாயிருந்தசமயத்தில், அவர்களுக்குக் காந்தியடிகள் தோன்றியிருப்பது, மீண்டும் ரூஸ்ஸோவும் டால்ஸ்டாயும் அவதரித்திருப்பதாகவே பட்டது. இந்த ரூஸ்ஸோவும் டால்ஸ்டாயும், தற்கால நாகரிகத்தினாலேற் பட்டிருக்கிற மயக்கங்களையும் குற்றங்களையும் கண்டித்து மனிதர்கள் இயற்கை வாழ்வுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்று கூறினார்களல்லவா? அரசாங்கங்கள் காந்தியடிகளைப் புறக்கணித்தன; இகழ்ந்தன. ஆனால் ஜனங்கள் அவரைத் தங்கள் சகோதரராகவும் நண்பராகவும் கொண்டார்கள். ஸ்விட்ஜர்லந்தில் வசிக்கும் விவசாயிகள் முதலிய ஏழைமக்கள், அவரிடத்தில் எவ்வளவு பக்தி விசுவாசம் வைத்திருக்கிறார்களென்பது எனக்குத் தெரியும்.

இயேசுநாதருடைய மலைப்பிரசங்கத்தைப் போல் காந்தியடிகளின் அன்பும் ஞானமும் நிறைந்த உபதேசங்கள் லட்சக்கணக்கான நன் மக்களின் இருதயத்தைத் தொட்டிருக்கிறதே யானாலும், தம்முடைய உபதேசத்தினால் மட்டும், யுத்தத்திற்கும் அழிவுக்கும் தன்னை அர்ப்பணம் செய்து விட்டிருக்கிற ஓர் உலகத்தின் போக்கை மாற்ற முடியுமென்று அவர் கருதவில்லை. அஹிம்சையை அரசியலில் அநுஷ்டிக்க வேண்டுமானால், அதற்கு இப்பொழுது ஐரோப்பாவில் எந்த ஒழுக்க நிலையுண்டோ அதற்கு வேறுபட்டதோர் ஒழுக்க நிலை வேண்டும். அப்படி அஹிம்சை வெற்றியடைய வேண்டுமானால், மனிதன், தான் என்ற அகங்காரத்தை ஒழிக்க வேண்டும். ஆனால் இந்த நிலை ஏற்படுமா? ஏனென்றால் இப்பொழுது உலகத்தில் சர்வாதிகார ஆட்சி முறை உக்கிரத்தோடு பரவி வருகிறது. இந்த ஆட்சி முறையானது, லட்சக்கணக்கான மக்களின் ரத்தத்தில் தன் அடையாளத்தைப் பொறித்து விட்டுப் போயிருக்கிறது. இங்ஙனம் ஜனங்கள் செய்கிற தியாகமானது, இப்பொழுது ஒரு நல்ல பலனைக் கொடுக்குமென்று சொல்வதற்கில்லை. எப்பொழுதோ ஒரு காலத்தில், ஜனங்கள் அதிகமான கஷ்டத்தையடைந்த பிறகு வெற்றி காணலாமோ என்னவோ? ஜனங்கள் இங்ஙனம் கஷ்டப்படுவதற்கு ஆற்றல் தேவை. இந்த ஆற்றல், காந்தியடிகளுக்கிருக்கிற நம்பிக்கையைப்போல் ஒரு நம்பிக்கை ஏற்பட்டால்தான் உண்டாகும். அதுதான் கடவுள் நம்பிக்கை. இந்தக் கடவுள் நம்பிக்கை இப்பொழுது மேனாட்டு ஜனங்களிடத்திலும் தலைவர்களிடத்திலு

யில்லை. பலாத்கார இயக்கத்தின் சந்ததிகளாகத்தான் தேசீய இயக்கங்களும் புரட்சி இயக்கங்களும் தோன்றுகின்றன. பாசிஸ்ட் நாடுகளும், ஜாதீய மேம்பாட்டை முக்கியமாகக் கொள்ளும் நாடுகளும் சேர்ந்திருக்கிற ஏகாதிபத்தியங்கள், ஐரோப்பிய மகா ஜனங்களுடைய சுதந்திரம், உயிர் முதலியவற்றை அழித்து வருகின்றன. இந்த அழிவு வராமல், மேற்படி ஐரோப்பிய மகா ஜனங்கள் எந்த முறையைக் கைப்பற்றியேனும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அப்படிக் இல்லாமல் இவர்கள், தங்கள் அரசியல் பொறுப்பைத் துறந்து விடுவார்களானால், அதனால் நூற்றாண்டுகள் கணக்கில் மானிட சமுதாயம் அடிமைப்பட்டுக் கிடக்கும். எனவே, காந்தியடிகளின் சித்தாந்தத்திற்கு நாம் எவ்வளவு தூரம் மதிப்புக் கொடுத்த போதிலும் அதனை அநுஷ்டிக்குமாறு மேனாட்டு ஜனங்களுக்கு நாம் சிபார்சு செய்ய முடியாது.

ஐரோப்பிய சரித்திரத்தின் மத்திய காலத்தில், கிறிஸ்தவ மதத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் சில இயக்கங்கள் தோன்றின. அவை, பெரிய சமுத்திரத்தின் மத்தியில் காணப்படுகிற தீவுகள்போல் இருந்தன. அவை நாகரிகத்தின் ஒழுக்க மேம்பாட்டையும், சமாதானம், அன்பு இவைகளையும், ஆத்மாவின் உயர்வையும் பற்றி உபதேசித்தன. இந்த இயக்கங்கள் எந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்றனவோ அந்த ஸ்தானத்தையே காந்தியடிகளின் இயக்கமும் பெறும். இது சிறந்த ஸ்தானந்தானே. மேற்படி கிறிஸ்தவச் சீர்திருத்த இயக்கங்களை ஸ்தாபித்த செயிண்ட் ப்ருனோ, செயிண்ட்பெர்னாட், செயிண்ட் பிரான்சிஸ் முதலியோர்களைப் போல், காந்தியடிகளின் ஆத்ம சக்தியும், இப்பொழுது மானிட சமுதாயம், எந்தக் கடுமையும் நெருக்கடியுமான பாதையில் சென்று கொண்டிருக்கிறதோ அந்தப் பாதையில் அன்பையும் சாந்தியையும் புகுத்துமாக.

படித்த கூட்டத்தைச் சேர்ந்த நாம், நம்முடைய சக்திக்கியன்ற அளவு கடவுள் ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயன்றுகொண்டிருக்கும் நாம், வரப்போகிற மானிட சமுதாயம் எப்படியிருக்க வேண்டுமென்பதைத் தமது மனத்தினால் நினைத்தும், செயலால் காட்டியும் வருகிற நமது குருநாதரும் தலைவருமான காந்தியடிகளுக்கு நமது வணக்கத்தைச் செலுத்துவோமாக.

✽

தவறு செய்கிறவனும் நானும்

தவறு செய்பக்கூடிய மனிதனைக் காணும் போதெல்லாம், நானும் தவறு செய்திருக்கிறேன் என்று எனக்குள்ளேயே சொல்லிக் கொள்ளுவேன். காமுகனைக் கண்டால், நானும் ஒரு காலத்தில் அப்படியிருந்திருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளுவேன். இப்படி நான் நடந்து கொள்ளுவதன் காரணமாக உலகத்திலுள்ள ஒவ்வொருவனுடனும் நான் உறவு கொள்ளுகிறேன்; நம்மிடையே மிக மிகத் தாழ்ந்த நிலையிலிருப்பவர்கள் சந்தோஷம் அடையாவிட்டால் நானும் சந்தோஷமடைய முடியாது என்பதை உணருகிறேன்.

—மகாத்மா காந்தி

உங்கள் கூந்தல் இம்மாததிரி படியாமலிருந்தால்

அதை ஸ்வஸ்திக் வாசனையிடப்பட்ட ஆமணக்கெண்ணையால் படியச்செய்யுங்கள்

உங்கள் கூந்தல் சுருட்டையாயும் படியாமலு மிருந்தால் கண்ட தைலங்களால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. ஸவஸதிக் வாசனை கூடப்பட்ட ஆமணக்கெண்ணை, உங்கள் தலை மயிரின் அழகை வெளிப்படுத்தி கூந்தல் நன்ருக வாரிக் கொள்ளும்படி உதவுகிறது. அதி மனோஹரமான வாசனை யுடையதால் ஸ்வஸ்திக் பரிமள ஆமணக்கெண்ணையை யெதார்தம் தெரிந்த ஆடவரும் பெண்டிடும் விரும்பிப் போற்றுகிருர்கள்.

இதர உயர்தர ஸ்வஸ்திக் தயாரிப்புகள் காந்தி ஸோப், ஸ்வஸ்திக் க்ஷவர ஸோப், சலவை ஸோப்புகள், கோவாலின் பிராந்ட் வனஸ்பதி முதலியன.

வாசனைகூடப்பட்ட ஆமணக்கெண்ணை

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்



SHILPI   Som. 21 Tamil

மனிதருள் மாணிக்கம்

பேர்ள் பக்

அமைதி குடிகொண்டு விளங்கும் எங்கள் கிராமத்தில் அன்று என்றைக்கும் போல் தான் பொழுது புலர்ந்தது. எங்கள் குழந்தைகள், கிராமத்துக்குச் சற்று தூரத்திலிருக்கும் பள்ளிக்கூடத்துக்குச் செல்லுவதால் நாங்கள் அதிகாலையிலேயே எழுந்துவிட்டோம். காலைப் பலகாரம் சாப்பிட்டுக் கொண்டு வழக்கம்போல் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். வீட்டுக்கு வெளியே பனி மூடிக்கொண்டிருந்தது. வானமும் மப்பு மந்தாரமாக இருந்தது. இன்னும் அதிகப் பனி பெய்யுமோ என்று குழந்தைகள் அதிசயப்பட்டார்கள். திடுதிப்பென்று எங்கள் குடும்பத் தலைவர் அறையினுள் நுழைந்தார். அவர் முகம் வருத்தத்தால் சுண்டியிருந்தது. "சற்று முன் ரேடியோவில் ஒரு பயங்கரச் செய்தி வந்தது" என்று கூறினார். நாங்கள் அனைவரும் அவரைக் கூர்ந்து கவனித்தோம். பிறகு, "காந்தி இறந்தார்" என்ற பயங்கர வார்த்தைகளைக் கேட்டோம்.

பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலிருக்கும் ஓர் அமெரிக்கக் குடும்பத்துக்கு இந்தச் செய்தி எப்படி இருந்தது என்பதை இந்திய மக்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அந்தச் சோகக் கதையின் விவரங்களைக் கேட்டோம். காந்தி சமாதான புருஷர்; தம் வாழ்க்கையை மக்களின் சேவைக்கு அர்ப்பணம் செய்த உத்தமர். அவர் கொலை செய்யப்பட்டார். எங்கள் பத்து வயதுப் பையன் கண்ணீர் ததும்ப தழுதழுத்த குரலில் "மனிதன் துப்பாக்கி செய்ய ஏன் கற்றுக் கொண்டான்?" என்று சொன்னான். நாங்கள் ஒருவரும் காந்தியை நேரில் பார்த்ததில்லை. நாங்கள் இந்தியாவில் இருந்த சமயத்தில் அவர் சிறையில் இருந்தார். ஆனால், அவரைப்பற்றி நன்கு அறிவோம். காந்தி எங்களுடனேயே வசித்த ஒருவரைப்போல குழந்தைகளுக்கு அவருடைய முகம் அறிமுகமாகியிருக்கிறது. எங்களுக்குக் காந்தி, உலகத்திலுள்ள ஒரு சில தேவ புருஷர்களில் ஒருவராக விளங்குகிறார்; தாங்கள் எண்ணுவதே சரியென்று தங்கள் கொள்கைகளை நிலைநாட்டும் மிகச் சில வீர புருஷர்களில் ஒருவராகக் காட்சியளிக்கிறார். அவ்வாறு அவர் நேர்மை என்று கருதுவதைத்தான் நாங்களும் சரி என்று எண்ணுகிறோம். காந்தியின் வாழ்க்கையின் பயன்களைப்பற்றியும், அவருடைய மரணத்தின் விளைவையும்

அமெரிக்க நாவலாசிரியை ஸ்ரீமதி பேர்ள் பக் காந்திமகானின் திடீர் மரணத்தைக் கேட்டுத் திடுக்குண்டதை அப்படியே இக் கட்டுரையில் விவரித்திருக்கிறார்.

பேசினோம். இந்திய மக்களில் ஒருவராகக் காந்தி அவதரித்த காரணத்தால் இந்தியாவைப் பற்றிப் பெருமை யடைகிறோம். அதே இந்திய மக்களில் ஒருவனே அவரைக் கொன்றான் என்று நினைத்து இந்தியாவைப் பற்றி அனுதாபப் படுகிறோம்.

பிறகு மிக வருத்தத்தோடு சந்தடியின்றி அன்றாட அலுவல்களைக் கவனிக்கச் சென்றோம். எங்கள் நாட்டில் காந்தியைப் பற்றி எவ்வளவு தூரம் அறிந்திருக்கிறார்கள் என்பதை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். தெருவில் ஒரு குடியானவன் என்னைக் கண்டவுடன் என்னை நிறுத்தி, "உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் காந்தியை நல்லவர் என்கிறார்களே, அப்படியிருக்க ஏன் அவரைக் கொல்லவேண்டும்?" என்று கேட்டான். நான் பதில் ஒன்றும் சொல்லாமல் தலையை அசைத்தேன். "அன்று ஏசுவைக் கொன்றதைப் போலத்தான் இன்று இவரைக் கொன்றுவிட்டார்கள் என்று நினைக்கிறேன்," என்றான். அவன் உண்மையைச் சொன்னான். ஏசுவைச் சிலுவையில் அறைந்ததைக் காட்டிலும் வேறு சரியான உதாரணத்தை, காந்தியின் கொலைக்குக் கூறமுடியாது. அன்று ஏசுவை அவருடைய பகைவர்கள் சிலுவையில் அறைந்தனர்; காந்தியை அவருடைய நாட்டு மக்களில் ஒருவனே கொலை செய்தான் என்பது படுபாதகமான செயல். காந்தியின் மறைவுக்காக எங்கள் வீடு மட்டும் வருந்தவில்லை; நாடு முழுவதும், உலக முழுவதும், காந்தியை முன் பின் நேரே பார்த்திராத மக்களும் அவருடைய மறைவைக் குறித்து கண்ணீர் வடிக்கின்றனர். அவருடைய செல்வாக்கு எங்கும் பரவி வருகிற இந்தத் தருணத்தில் அவர் இறந்துவிட்டார்.

அமெரிக்கர்களிடையே காந்தியைப் பற்றி அறிந்து கொள்ளுவதில் சிரத்தை அதிகமாவதைப் பற்றிச் சில நாட்களுக்கு முன் குறிப்பிட்டோம். பலாத்காரத்திலும், ஹிம்சையிலும் நம்பிக்கையுள்ள நாங்கள் காந்திய முறைதான் நேர்மையானது என்று கருத ஆரம்பித்துள்ளோம். எங்கள் நாட்டுப் பத்திரிகைகளும் இந்தப் போக்கை கண்டுவிட்டன. இதனால் இந்தியா கீர்த்தி பெற்று விட்டது. நாடுகளுக்கிடையே உள்ள தகராறுகளையும் அபிப்பிராய பேதங்களையும் போக்க காந்தி கையாண்ட சத்தியாக்கிரக முறை எங்களுடைய மனத்தை உருக்கி விட்டது.

இந்தியாவைப் பற்றி உலகத்தார் எப்படி மதிக்கிறார்கள் என்பதைப் பற்றி இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் உணரும்படி செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். இந்தியா இப்பொழுது என்றைக்கும் இல்லாத ஒளியோடு விளங்குகிறது. இந்திபா, மக்கள் இனத்தின் சின்னமாக விளங்குகிறது.

"சுதந்திரத்தை எல்லோருமே அனுபவித்துவிட முடியாது" என்று நமக்கு சர்ச்சில் சொல்லியிருக்கிறார். சர்ச்சிலைப் போன்ற சிலரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உலகத்திலுள்ள பலம் படைத்த சிறுபான்மையான மக்களே உலகத்தை ஆள வேண்டும் என மக்களுக்குக் கூற வேண்டும் என்று சர்ச்சிலைப் போன்றவர்கள் சொல்லுகிறார்கள்.

நம்மை ஆளுவதற்கு யாராவது ஓர் அரசன் வேண்டும். நாம ஆளப்பட விரும்பா விட்டால் தான் நாமே நம்மை ஆளத் தலைப் பட வேண்டும். ஆனால் இதில் நமக்கு நம்பிக்கை இல்லை. மக்களே தங்களை ஆளச் சுதந் திரங் கொண்ட உலகத்தைக் காணத்தான் நாம் விரும்பு கிறோம். இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாக விளங்குகிறது இந்தியா.

இந்தியாவைப் பற்றி அறிந்து கொள்ள நாள்தோறும் நாங்கள் தினசரிப் பத்திரிகைகளை ஆவ லோடு புரட்டுகிறோம. 'இரத்த வெள்ளம்' ஒன்று ஏற்படத்தான் செய்யும் என்று சர்ச்சில் உறுதி கூறினரே, அது நிகழுமா? மக் கள் தங்களுடைய அபிப்பிராய பேதங்களையும், கொள்கை வேறு பாட்டையும் அஹிம்சா முறை யில் தீர்த்துக் கொள்ள முடி யாதா? யுத்தங்கள் என்றென் றைக்கும் நடந்து கொண்டு தானிருக்குமா?

காந்தி, மக்களின் வழிகாட்டி யாக இருந்தார். அந்த மெல்லிய உருவத்தை நாம் கடவுளாக மதித் தோம் என்பது கருத்தல்ல. மனித வாழ்க்கைக்கு அடிப்படையான ஜீவாதாரமான உண்மையை அவர் அறிந்திருந்தார். அவரு டைய மறைவில் இந்தியா வெற் றியைக் காண்கிறதா தோல்வி யைக் காண்கிறதா என்பதை இந்திய மக்கள்தான் சொல்ல வேண்டும். அவருடைய மரணத் தினல் அவரைப் பின்பற்றியவர் கள் உள்ளத்தில் புதுச் சக்தியும், கொள்கையில் திட நம்பிக்கையும் உண்டாகுமானல், இந்தியாவுக் கும் நல்லது மனிதத்துவத்தில் நம் பிக்கை கொண்ட நம்எல்லோருக் கும் நல்லது. அவருடைய மறைவு அவருடைய தொண்டர்களையும் சகாக்களையும் தோல்வி மனப் பான்மை கொள்ளச் செய்தால் மனித வர்க்கமே தோல்வி யடை யும். இன்று இந்த மாதிரியான எண்ணங்களை எண்ணி எண்ணி சிந்தனை சுழல்கிறது. இந்தச் செய்தியின் தாக்குதலை அமைதி யுடன் ஏற்றுக் கொண்டோம். "பண்டித ஜவாஹர்லால்நேரு இருக்கிருர். கவலையில்லை. அவர் இருக்கும் வரை மோசமாக ஒன் றும் நிகழாது" என்று இங்கே மக்கள் சொல்லிக்கொள்ளுகிருர் கள்.

✲

ஏமாற்ருதே

நயிகள் நாயகம் ஒரு சந்தைப்பக்கமாகப் போயிருந்தார். அங்கே ஒருவன் தானியத்தைக் குவித்து வைத்திருந்தான். நபிகள் நாயகம் தானியக் குவியலுக்குள் கைகளை விட்டுத் துழாவிப் பார்க்கும் போது அவர் கைவிரல்கள் ஈரமாயிருப்பதைக் கண்டார். உடனே நபிகள் நாயகம் "தானியக்காரனே! என்ன இது?" என்று கேட்டார்.

"தீர்க்கதரிசியவர்களே! தானியத்தில மழை பெய்துவிட்டது" என்ருன் தானிய வியாபாரி.

"அப்படியானுல் நீ ஏன் நனைந்த தானியத்தை மேலாகக் குவித்து வைக்கவில்லை? அப்படிச் செய்தால் எல்லோருக்கும் உண்மை தெரியும் அல்லவா? நம்மை ஏமாற்றுகிறவர்கள் நம்மைச் சேர்ந்தவர்களாக மாட்டார்கள்" என்ருர் நபிகள் நாயகம்.

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனேகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுகளைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

MSK-10.TM கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

அயோடிசால்

மிகச் சிறந்த

ரத்த சுத்தி மருந்து

இது திரேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனுல் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.

ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

MSD

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

காந்தி

பிரெட் ஈஸ்ட்மேன்

1922-ம் ஆண்டு, தம் குற்றத்தை ஒப்புக்கொள்ளுவதற்காக காந்தி நியாய ஸ்தலத்திற்குள் நுழைந்ததும், அங்குள்ளவர்களெல்லோரும் எழுந்து நின்று அவருக்கு மரியாதை செய்தனர். கொஞ்சங்கூடக் கவலையில்லாமல், மகிழ்ச்சியோடு அதிக பக்ஷ தண்டனையையே தமக்குத் தரும்படி காந்தி நீதிபதியைக் கேட்டுக்கொண்டார். ஆனால், நீதிபதி, காந்திக்கு ஏழு வருடச் சிறைவாசம் விதித்தார். தீர்ப்பின் முடிவில், "நான் இந்த நாள் வரை விசாரித்த குற்றவாளிகளையும் இனிமேல் விசாரிக்கப் போகும் குற்றவாளிகளையும் போல் நீங்கள் இல்லை. நீங்கள் ஒரு தனி ரகத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடாமலிருக்க என்னால் முடியாது." என்று நீதிபதி சொல்லி முடித்தார்.

தனி ரகம். ஆம், உண்மையாகவே காந்தி ஒரு தனி ரகத்தைச் சேர்ந்தவர்தான். முப்பது கோடிக்கு மேற்பட்ட இந்திய மக்களுக்கு அவர் ஒரு மகாத்மா. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இருக்கும பத்திரிகை நிருபர்களெல்லாம், பெரிய மதத் தலைவர்களிலெல்லாம் தலை சிறந்தவராகக் காந்தியைப் போற்றுகிறார்கள். அவருடைய வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களெல்லாம் அவரை ஏகமாகப் புகழ்கிறார்கள், "புத்தர் பெருமானுக்குப் பிறகு அன்பைக் கொண்டே எல்லோரையும் ஆட்சி புரியும் சர்வாதிகாரியான உங்கள் தந்தை இயேசு கிறிஸ்துவும், டாம்மனிஹாலும், சேர்ந்த சேர்க்கைதான்" என்று குறிப்பிடுகிறார் ஜான்கந்தர். சி. எப். ஆண்ட்ரூஸ் காந்தியை, "தற்காலத்திய செயின்ட் பிரான்சிஸ், ஏழைகளின் சகோதரன்" என்று புகழ்கிறார். எப்பொழுதுமே காந்தியோடு ஒத்துப் போகாத தாகூர், "காந்தி இந்தியாவில் மட்டும் அல்ல, உலகத்திலும் இன்றைக்குப் பெரிய மனிதர் அவர் தான்" என்று சொல்லுகிறார்.

ஆனால் காந்தி எந்த விதமான தெய்வீக சக்தியும் தமக்கு இருப்பதாகச் சொல்லிக் கொள்ளுவதில்லை. 'கடவுள் நெறியைப் போதிக்கும் தேவதூதன் அல்ல நான்' என்றும் கூறிக் கொள்ளுகிறார்: "கடவுள் உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் நன்னெறி காட்டுகிறார். ஆனால் அவருடைய மெல்லிய குரலுக்கு நாம்தான் செவிசாய்ப்பதில்லை. இந்தியாவுக்கும் மனித வர்க்கத்துக்கும் நான் ஒரு

கட்டுரையாளர் ஒரு பிரபல அமெரிக்கப் பேராசிரியராவார். அவர் பல உலகப் பிரசித்தி பெற்ற தலைவர்களின் சரிதைகளையும் சுருக்கமாக எழுதியிருக்கிறார். அவர் எழுதிய காந்திஜி சரிதையின் முதல் பகுதியே இக் கட்டுரை.

தொண்டன்தான். எந்த ஒரு தனியான மதத்தையும் உண்டாக்க எனக்கு ஆசை கிடையாது. உண்மையை, நான் அறிந்த வழியில் கடைப் பிடிப்பதும் அதற்காகவே வாழவும் தான் நான் விரும்புகிறேன். நான் ஒரு தெய்வ சக்தி வாய்ந்தவனல்ல; சாதாரண மனிதனைப் போல் தவறு செய்யக்கூடியவன் தான். நான் செய்த சேவை பல வழிகளிலும் குறையுடையதாயிருந்தாலும், கடவுள் அவற்றுக் கெல்லாம் அருள் புரிந்திருக்கிறார்.''

அவருடைய உடல் தோற்றமும் ஒரு மாதிரியாகத் தான் இருக்கிறது. மிக சாதாரணமனிதனாகவே காட்சி யளிக்கிறார் காந்தி. முன்பு பம்பாய் கவர்னராயிருந்த சர் ஜார்ஜ் லாயிட் காந்தியைப் பற்றி, 'ஒரு ஒல்லியான, பலமே இல்லாத பேர்வழி' என்று கூறியதிலே உண்மை இருக்கத்தான் செய்கிறது. எடையிலே நூறு பவுண்டும், அகலமான காதுகளும், இடுப்பில் கையால் நெய்த சிறு ஆடையுமாக இருக்கிறார் இந்தப் பல்லே இல்லாத கிழவர். வெளியில் போகிற நேரத்தைத் தவிர, மற்ற வேளைகளில் காலில் ஒன்றுமே அணிவதில்லை. இவருக்குத் தலை மொட்டை. தம்முடைய பெரிய மூக்கின்மேல் அகலமான கண்ணாடியை அழகாக அணிந்திருக்கிறார். எங்கே போனாலும் கைராட்டையோடு போய், நினைத்த மாத்திரத்தில் நூற்க ஆரம்பித்து விடுவார். கொஞ்சம் ஆட்டுப்பால், சிலபழங்கள், பச்சைக் காய்கறிகள், இவை தான் அவருடைய தினசரி உணவு.

பிரமாதமாக ஆடம்பரமான தோற்றமில்லாவிட்டாலுங்கூட, எந்தத் தெய்வீக சக்தியும் தம்மிடம் இல்லை என்று அவரே கூறிக் கொண்டாலும் கூட, கோடிக்கணக்கான இந்திய மக்கள் அவரைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். மன்னர்கள் அவருடைய காலடியில் மண்டியிடுகிறார்கள். மக்கள் அவர் கால்பட்ட மண்ணைத் தொட்டுக் கும்பிட்டு, கண்ணில் ஒற்றிக் கொள்ளுகிறார்கள். பொது மேடைகளில் எங்காவது அவர் தென்பட்டால், லட்ச லட்சமாக மக்கள் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். அவர் போகிற ரயிலைப் பார்ப்பதற்கே, பல மைல் தொலைவிலிருந்தும் கிராமவாசிகள் ஓடோடியும் வருகிறார்கள்.

அவருடைய படங்களை தங்களுடைய வீடுகளில் வைத்துப் பூஜித்து, தங்கள் குழந்தைகளைக் கும்பிடச் சொல்லுகிறார்கள். நோய்போக்கும்தெய்வசக்தியாக அவரை நம்பிக் கொண்டாடுகிறார்கள். அவர் சிறைக்குப் போனால், ஆயிரக்கணக்கில் இந்திய வாலிபர்கள் அவரோடு சிறைக்குப் போகச் சிறைச்சாலைகளை முற்றுகையிட்டு முன் வருகிறார்கள். ஏதாவது ஒரு அரசியல் விஷயமாகவோ, சமூக விஷயமாகவோ அவர் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தால், பிரிட்டிஷ் அரசாங்கம் நடுங்குகிறது. வேறு யாரும் செய்யாதவாறு, முப்பது கோடி மக்கள் அவர் ஆணைப்படி நடப்பார்கள். இவர் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்ய அவர்கள் காத்துக் கிடக்கிறார்கள். சிறையிலாவது, உபவாசத்தின் போதாவது அவர் இறந்து போனால், அத்தனை மக்களின் இருதயத்தினின்று வெளிக்கிளம்பும் பழி வாங்கும் உணர்ச்சி, பிரிட்டிஷ் ஆட்சிக்கே

குழி தோண்டி விடும் என்பது நிச்சயம். தம் நாட்டு மக்களின் உணர்ச்சிகளுக்கெல்லாம் அவர் கடிவாளம் போட்டுத் தம் கையில் வைத்துக் கொண்டு, இந்திய சுதந்திரத்துக்கும், தம் நாட்டின் புது வாழ்வுக்கும் வழி கோல சாத்வீக முறையில் போராடுகிறார். கிர்பி பேஜ் என்ற அமெரிக்கர் சில வருஷங்களுக்கு முன்னால் காந்தியையும், இந்தியாவையும் பார்க்கப் போனார். பார்த்துவிட்டு வந்து அவர் கீழ்க் கண்டபடி எழுதினார் :

"காந்தி தம் நாட்டின் முப்பது கோடி மக்களின் விடுதலைக்காக, இப்போது ஒரு இயக்கத்தை தலைமை தாங்கி நடத்துகிறார். இந்த இயக்கம் பலம் பொருந்திய சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தையே தகர்த்துவிடும். அரசியலில் பங்கெடுத்துக்கொண்டு பணி புரியும் இந்த முனிவர் பாடுபடுவது போல, எந்த கிராம்வெல்லும், மாஜினியும், வாஷிங்டனும் பாடுபட்டது கிடையவே கிடையாது. உலகத்திலேயே மிகச் சக்தி வாய்ந்த படைபலம் கொண்ட ஒரு நாட்டை, இவரும் இவருடைய மக்களும் மெஷின் துப்பாக்கிகளோ, ஆகாய விமானங்களோ, விஷவாயுவோ, இல்லாமல் எதிர்த்துப் போராடுகிறார்கள். அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மக்களைக் கொண்டே, சீதோஷ்ண மாறுபாடுகளாலும், வியாதிகளாலும் தாக்குண்ட மக்களைக் கொண்டே, சமூகப் பழக்க வழக்கங்களும் மாறுபட்ட உணர்ச்சிகளும கொண்ட மக்களைக் கொண்டே, தாம் எடுத்துக் கொண்ட காரியம் வெற்றி பெறுமா, தோற்குமா என்பதையும் லட்சியம் செய்யாமல், காந்தி பாடுபட்டுக் கொண்டே இருக்கிறார். இதற்குமுன் வேறு எப்போதும் ஏற்பட்டிராதவாறு, காந்தி மிருகபலத்தை ஆத்ம பலத்தைக்கொண்டு எதிர்க்கவும், தீமையை அஹிம்சையாலேயே வெற்றிகொள்ளவும் முயலுகிறார். சமாதான முறைகளினாலேயே தம் மக்களுக்கு விடுதலை வாங்கித் தர பிரயத்தனம் செய்கிறார். எவ்வளவுதான் அவரோடு கருத்து வேறுபாடிருந்தாலும், அவருடைய தோற்றத்தைக் கண்டதும் அவருக்கு மரியாதை செய்யாமல் இருக்க முடியாது. அவர் சீலத்தில் புத்தர் பெருமானைப் போலவும், கொள்கை உறுதிப்பாட்டில் செயின்ட் பாலைப் போலவும், வீரத்தில் கரிபால்டியைப் போலவும், அன்பாயிருப்பதில் செயின்ட் பிரான்சிசைப் போலவும் இருக்கிறார்."

அந்த ஆங்கில நீதிபதி சொன்னது போல இந்த ஒல்லியான பேர்வழி எப்படி ஒரு 'தனி ரக'த்தைச் சேர்ந்தவராவார்? அவர் ஒரு சுதந்திரப் பிரியராக இருப்பதால் அல்ல; ஒரு புரட்சிக்காரராயிருப்பதால் அல்ல; ஒரு சிந்தனைச் சிற்பியாயிருப்பதால்கூட அல்ல; ஆனால் ஒரு பழைய லட்சியத்தை அடைவதற்காக, புத்தம் புது முறைகளை அவர் கையாண்ட ஒரே காரணத்தால்தான் அவரை 'தனி ரக'மாகக் கொள்ள வேண்டும். அந்த முறைதான் அன்பு மார்க்கம். தன்னலமற்ற அன்பு நெறி. உண்மையைச் சொல்லப் போனால் இந்த மார்க்கத்தைத் தான் இயேசு கிறிஸ்து தம் மலைப்பிரசங்கங்களில் வலியுறுத்தினார். ஆதிகாலத்தில் கிறிஸ்தவர்கள் இதே முறையைத்தான் ரோம சாம்ராஜ்யத்தோடு அவர்கள் நடத்திய போராட்டங்களில்

கையாண்டார்கள். பதின்மூன்றாம் நூற்றாண்டில் இத்தாலியைச் சீர்திருத்த செயின்ட் பிரான்சிஸ் இதே முறையைத்தான் கையாண்டார். ருஷ்யாவைச் சீர்திருத்த டால்ஸ்டாயும் இந்த மார்க்கத்திலேதான் போனார். ஆனால் ஒரு அரசியல் லட்சியத்திற்காக பெரிய அளவில் இந்த மார்க்கத்தை இதுவரை யாருமே கைக்கொண்டதில்லை. ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியானால், அரசாங்கமும் வாளுக்கு வாள் கொண்டு அடக்க முடியும். ஆனால் அன்பு மார்க்கத்தில் நடக்கும் கிளர்ச்சியை அடக்க எந்த அரசாங்கமும் எந்த வழியையும் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் காந்தி தம் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில், அன்பையும் அஹிம்சையையுமே தம் ஆயுதங்களாகக் கொண்டு போரிட்டார். இந்தப் பெரும் போரிலே இவர் ஒரு துப்பாக்கியைக்கூட உபயோகித்ததில்லை. ஒரு வாள்கூடப் பிடித்ததில்லை. கொஞ்சமாவது வெறுப்புணர்ச்சியைக் கூடக் காட்டியதில்லை. அவர் யாரையுமே வெறுப்பதில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தைக்கூட, அவர் ஒரு சாபக்கேடாகக் கருதுகிறாரே தவிர, அவர்களையும் வெறுப்பதில்லை. அவரிடம் பணமில்லை; தனிப்பட்ட சொத்துமில்லை; எவ்விதப் படை பலமும் இல்லை. அவரிடம் இருக்கும் பலம் ஆத்ம பலமும், அன்பு மார்க்கமுமே. அன்பால்தான், தம் மேல் பிறர் வீசிய சுடுமொழிகள், தடியடிகள், அனுபவித்த சிறைத் தண்டனை ஆகியவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டார். அன்பால்தான், பிரிந்து கிடந்த தம் மக்களை ஐக்கியப் படுத்தினார். அன்பால்தான பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பல தடவைகள் ஸ்தம்பிக்க வைத்தார். எல்லா மதத்தினருக்கும் அன்பே கடவுளாகும். அதனால்தான் அத்தனை மக்களும் அவரைப் பூஜிக்கிறார்கள். அதனால்தான், அவருக்குச் சிறை தண்டனை விதிக்கும் இங்கிலீஷ் நீதிபதிகளுங்கூட, தண்டனை விதித்த பிறகு தங்கள் தொப்பிகளை எடுத்து மரியாதை செலுத்துகிறார்கள்.

*

நான் சந்நியாசியல்ல

என்னை முற்றும் துறந்த சந்நியாசி எனக் கூறுவது தவறு. என் வாழ்க்கையை நடத்திச் செல்லும் கொள்கைகள் யாவும், மனித வர்க்கம் முழுவதிற்குமே பொருந்துவனவாகும். சிறுகச் சிறுக வளர்ச்சி பெற்று அந்தக் கொள்கைகளை நான் கடைப்பிடித்திருக்கிறேன்.

—மகாத்மா காந்தி

எஞ்சி நிற்கும் மூன்று

ஒரு மனிதன் சாகும்போது அவனுடைய செயல்களும் ஒடுங்கிவிடுகின்றன; ஆனால் மூன்று விஷயங்கள் மட்டும் எஞ்சி நிற்கின்றன: 1. அவனுக்குப் பிறகும் தொடர்ந்து நடக்கும் அவனுடைய தர்ம காரியங்கள்; 2. (எல்லோருக்கும்) பயன் தரும் அவனுடைய அறிவு; 3. அவனுக்காகப்பிரார்த்தனை செய்யும் அவனுடைய சந்ததிகள்.

—நபிகள் நாயகம்

பர்மா-ஷெல்
SHELL
ஏவியேஷன் சர்வீஸ்
"விமான கம்பெனிகளால் நம்பப்படும் சர்வீஸ்"
பர்மா-ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அண்ட் டிஸ்ட்ரிபியூடிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்
(இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப் பெற்றது) ஏஜெண்ட்ஸ்.
281



மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல— இது நல்லது

போர்ன்-வீடாவில் 95 சதவிகிதம் எலும்பு வளர்ச்சிக்கும் ஜீவசக்தியளிப்பதற்குமான சரக்குகள் இருக்கின்றன. தவிர அது ருசியாகவும் ஜீர்ணத்துக்கு தூண்டுகோலாகவும், எளிதில் ரத்தத்துடன் சேர்ந்து புஷ்டிதருவதாகவும் இருப்பதால் குறிப்பாக கர்ப்பிணிகளுக்கும் வியாதிக்குப்பின் குணமடையும் தருவாயிலும் இன்றியமையாத உணவாக விளங்குகின்றது.

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியம் விடமின்கள் நிறைந்தது.

காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

சப்ளை கிடைக்காவிட்டால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—
காட்பரி-ப்ரை(எக்ஸ்போர்ட்) லிட், (Dept 14) தபால் பெட்டி 1417-பம்பாய்.

காந்தி சக்தி

காஸா சுப்பாராவ்

காந்திஜியை, வெறுப்போடு குறை கூறுகிறவர்களுடைய கண் கொண்டு பார்க்கவேண்டுமென்று கொஞ்ச காலமாக முயன்று வருகிறேன். அன்றொரு நாள் மதிப்புக்குரிய என் நண்பர் ஒருவர், காந்திஜியைப் பற்றி மிகக் கேவலமாகப் பேசினார். அவற்றை இங்கு எழுதக் கூட எனக்குக் கூச்சமாக இருக்கிறது. மற்றொருவர், பகுத்தறிவைக் கொண்டே வாழ்க்கையை நிர்ணயம் செய்தவர் என்று நான் கருதிய அவர், காந்திஜியைப் பற்றிப் பின் வருமாறு கூறினார்:

"காந்தியை நான் போய்ப் பார்க்கவே மாட்டேன். அவரைச் சந்திப்பது ஆபத்தானது. மந்திர சக்தியால் என்னை மயக்கி, விஷயங்களைக் காரண காரியங்களோடு ஆராயும் என்னுடைய பகுத்தறிவைப் போக்கி விடுவார். பிளேக்கைக் கண்டு அஞ்சி ஓடுவதுபோல நான் அவரைத் தவிர்ப்பேன்."

அபேதவாதிகளின் அபேதவாதமும், பெரும்பான்மையான தேசியவாதிகளின் தேசபக்தியும் இன்று காந்திஜியைக் குறை கூறும் அளவுக்குக் குறுகிவிட்டன.

காந்திஜியை வெறுப்பதன் ரகசியம்தான் என்ன? ஆதிகாலத்தில் ஏதென்ஸ் நகரில், குற்றங்கள் செய்ததற்காக நாடுகடத்தும் பொறுப்பைச் சாதாரண மக்களே ஏற்றுக்கொண்டிருந்தனர். அதைப் பற்றிய முழு விவரத்தையும் பற்றிப் புளூடார்க் எழுதியிருக்கிறார். ஒவ்வொருவனும் தான் யாரை நாடு கடத்தவேண்டும் என்று விரும்புகிறானோ அவனுடைய பெயரை ஒரு மண் பானையில் எழுதி, அந்தப் பானையைக் கடை வீதியில் இதற்கெனக் குறிப்பிட்ட இடத்தில் வைத்துவிடுவான். நியாயாதிபதி அந்த மண் பாண்டங்களை எண்ணிப் பார்த்து, எந்த மனிதனுடைய பெயர் பெரும்பாலான மக்களால் எழுதப் பெற்றிருக்கிறதோ, அவனைப் பத்து ஆண்டுகளுக்கு நாடுகடத்துவார். ஒரு சமயம் கல்வியறிவற்ற ஒருவன், அரிஸ்டைட்ஸிடம், அவரைச் சாதாரண மனிதன் என்று எண்ணி தன்னுடைய மண் பாண்டத்தைக் கொடுத்து அதில் "அரிஸ்டைட்ஸ்" என்று எழுதும்படிக் கெஞ்சினான்.

ஆச்சரியமடைந்த அரிஸ்டைட்ஸ் "அவன் உனக்கு என்ன தீங்கு செய்தான்?" என்று கேட்டார். "ஒரு கெடுதலும் செய்ததில்லை. அவரை நான் பார்த்தது கூடக் கிடையாது. அவரை நீதிமான் என்று எங்கே பார்த்தாலும் கேட்டு என் காது புளித்துவிட்டது" என்று பதில் சொன்னான். அதிமனிதத் தன்மையும், சக்தியும் உடையவர்களைக் கண்டால் நடுத்தர மக்கள் கருத்தழிந்துவிடுகின்றனர். நம் நாட்டில் பலர் காந்திஜியை மகாத்மா என்று சொல்லக் கேட்டுச் சலித்துப்போயிருப்பார்கள்.

கட்டுரையாளர் ஸ்வதந்திராப் பத்திரிகையின் ஆசிரியர். அவர் எழுதியுள்ள, காந்திஜியைப் பற்றிய இந்த ஆராய்ச்சி அவருடைய 'லைஃ லைட்ஸ்' என்ற புத்தகத்திலிருந்து எடுத்தது.

அரிஸ்டைட்ஸ் ஒருவருக்கும் கெடுதல் செய்தது கிடையாது. ஆனால் காந்திஜியோ, மனிதர்களுடைய வாழ்க்கையையே முற்றிலும் திருத்தியமைத்துவிட்டார். அவர் நாட்டில் பலவற்றை ஒழித்துக் கட்டிவிட்டார். மத குருக்களின் போலி வேஷம், தையற் கடைப் பொம்மையாக இருப்பதுதான் நாகரிகம் என்று எண்ணியவர்களின் போலிக் கௌரவம், மிதவாதிகளின் போக்கு, வக்கீல் தேசியவாதிகளின் பதவிமோகம், அன்னிய நாட்டுத் துணி விற்பனையாளர்களும், மதுபான வியாபாரிகளும நடத்திய நிம்மதியான வாழ்க்கை முதலியன அவர் ஒழித்துக் கட்டியவற்றுள் சில. காந்திஜி தலையெடுப்பதற்குமுன் தலைவர்கள் என்று இருந்தவர்கள் காந்திஜியின் கொள்கைகளினால் தங்களுடைய பதவி, பணம், செல்வாக்கு முதலியன பறிபோவதைக் கண்டு காந்திஜியின் மேல் சினம் கொண்டனர்; அவரைக் கவிழ்க்கச் சமயம் பார்த்திருந்தனர். காந்திஜி வகுத்த கடுமையான திட்டங்கள், அவரைப் பின்பற்றியவர்களுடைய நிம்மதியான, திருப்திகரமான வாழ்க்கைக்கு முரண்பட்டதாக இருந்தன. "நான் ஏன் மகாத்மாவைப் பின்பற்றுகிறேன்?" என்ற தம் புத்தகத்தில் முன்ஷி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

"செங்கிஸ்கானும் நெப்போலியனும் கத்தி முனையைக் காட்டி பட்டாளத்துக்கு ஆள் சேர்த்தார்கள். ஆனால், இவருடைய படை திரட்டும் முறையோ அதைவிட மோசமானது. இந்த முறை உடலை வருத்தவில்லை; உள்ளத்தை உருக்கியது. ஒவ்வொரு நாளும், சொல்லொணாத கஷ்டத்தையும், பொறுக்க முடியாத மனக் கொதிப்பையும் அடைந்து சஞ்சலப்பட்டேன். சாப விமோசனமில்லாத அடிமையாய், டாம்பீக வாழ்க்கை யென்னும் கல்லில் கட்டப்பட்டு, கருத்தழிந்து என்றென்றும் உழல வேண்டியதுதானோ என்று பயந்தேன். நான் ஏன் என் நாட்டுப்பணியில் ஈடுபடவில்லை?"

நான் ஏன் என் நாட்டுப் பணியில் ஈடுபடவில்லை? இந்தக் கேள்வியைத்தான் ஒவ்வொருவர் மனத்திலும் தூண்டிவிட்டார் காந்திஜி. வேறு எவரும் செய்யாத அளவுக்கு இந்தப் பணியைச் செய்து முடித்தார். தமக்கு ஒரு நீதி பிறருக்கு ஒரு நீதி என்று இல்லாமல், தாம் சொல்லுவதை வாழ்க்கையிலும் நடத்திக் காட்டியதால் தான் மக்கள் அவர் சொல்லில் நம்பிக்கை வைத்தனர். சுரேந்திரநாத் பானர்ஜி நிகழ்த்திய மதுவிலக்குப் பிரசங்கம் ஒன்றைப் பற்றிக் கின்கெய்ட், "அது நான் இதுவரை பார்த்திராத ஒரு பெரிய நிகழ்ச்சி. வங்க நாட்டில் குடியால் எத்தனை குடும்பங்கள் வருந்துகின்றன, எத்தனை அறிவாளிகள் அழிந்தொழிகிறார்கள் என்று வர்ணித்தபொழுது அங்கே கூடியிருந்த அனைவரும் கண்ணீர் சொரிந்தார்கள்" என்று கூறுகிறார். ஆனால் இரண்டு நாட்களுக்குப் பிறகு கின்கெய்ட், பானர்ஜியை சர் அலெக்சாண்டர் மூடிமன் வீட்டில் சந்தித்தார். நாவன்மை படைத்தவர்களோடு பானர்ஜி சரிநிகர் சமானமாகப் பேசுவது போலவே, பெருங் குடியர்களுடன் சமமாகக் குடிப்பார் என்பதை அங்கு நிரூபித்து விட்டார். நாலாவது 'கிளாஸ்'

குடித்துக் கொண்டிருக்கும் பொழுது கின்கெய்ட், "பானர்ஜி! நீங்கள் தன்னடக்கம் உடையவர்; மதுவிலக்கில் நம்பிக்கையுடையவர் என்றல்லவா நினைத்திருந்தேன்?" என்று கேட்டார். "ஆமாம், ஆனால், அது சட்டசபையில்தானே? இங்கு நான் என் நண்பர்களுடன் இருக்கிறேன். ஆகவே இங்கு விஷயமே வேறு" என்று பதில் சொன்னார் பானர்ஜி. "நாற்பத்துநான்கு ஆண்டுகள் ஒரு பொதுஜன சேவகன்" என்ற புத்தகத்தில் கின்கெய்ட் எழுதிய இந்தக் கதை காந்தி காலத்துக்கு முன்பு இருந்த தலைவர்களுடைய குறைகளை நன்கு விளக்குகிறது. ஆனால் காந்தி மனத் திட்பமும், ஸ்திர புத்தியும் உடையவர். தாம் போதிப்பதைத் தாமே நடைமுறையில் செய்து காட்டும் புது வழியினால்தான் காந்திஜி, மக்களை, மரியாதையோடு தாம் சொல்லுவதைக் கேட்கச் செய்தார். தாங்களுண்டு தங்கள் வேலையுண்டு என்று வேறு ஒரு விஷயத்திலும் புத்தி செலுத்தாதவர்கள் உள்ளங்களிலும், கொந்தளிப்பை உண்டுபண்ணிவிட்டார். காந்திஜி ஒருவர் மட்டும் இல்லாதிருந்தால், சி. ஆர்., பிரகாசம், தாஸ், நேரு போன்றவர்கள் தங்களுடைய வக்கீல் தொழிலை விட்டுவிட்டு, உடல், பொருள் ஆவி அனைத்தையும் நாட்டுச் சேவையில் அர்ப்பணம் செய்திருப்பார்களா?

தேச சேவைக்குப் படைதிரட்டுவதில் காந்திஜி அவருக்கு முன்னிருந்தவர்களுடைய சேவையை யெல்லாம் புறங் காட்டச்செய்து முதன்மை ஸ்தானம்பெற்றார். அவருடையதொண்டர்கள் தங்களுடைய பதவிகளையும், தொழில்களையும் விட்டெறிந்து விட்டு, ஜெயில் வாழ்க்கையை மேற்கொண்டு தங்களுடைய தேவைகளையும் நிராகரித்துவிட்டு, எளிய வாழ்க்கை, வாழ்ந்து, ஒரு சிலர் பிரம்மசரிய வாழ்க்கையையும் கடைப்பிடித்து, காந்திஜியை மனப்பூர்வமாகப் பின்பற்றினார்கள். சில ஆண்டுகள் கழித்து ஒரு சிலர், "நாம் செய்ததெல்லாம் பயன்படுகிறதா?" என்று கேட்க ஆரம்பித்துவிட்டனர். சத்தியாக்கிரக அல்லல்களை யெல்லாம் அனுபவித்த பிறகு, 'இந்தப் போக்கு அன்னிய ஆட்சிமீதிருந்த வெறுப்பைப் போக்கிவிடுகிறதே! இந்த வெறுப்புத்தானே அடிமைப்பட்டிருக்கும் நம் நாடு விடுபடுவதற்கு அவசியமானது' என்று எண்ணத் தொடங்கினார் எஸ். சீனிவாச அய்யங்கார். 'தேசவிடுதலைக்காக நிகழும் புனிதப் போரில் இறங்கிய காந்திஜி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பாதுகாப்பாளனாக மாறிவிட்டாரே! பிரிட்டிஷாருக்கு ஹிம்சா பூர்வமாகத் தொல்லை கொடுக்காமல் இருக்க தம்முடைய ஆத்ம சக்தியை உபயோகப்படுத்துகிறாரே' என்றும் பயந்தார் சீனிவாச அய்யங்கார். அரசியல் குறிக்கோளை அடைவதற்கு நிகழ்த்தும் போராட்டம் எதிரிக்குக் கருணைகாட்டுவதால் வலுப்பெற முடியுமா? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவதன் மூலம ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பதிலை வைத்துக் கொண்டே அதற்குத் தக காந்திஜியை மதிப்பிடுகிறான்.

சூதகத்தை நிறுத்தியது

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தி யளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தி யடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3

நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5

மிக்க கடுமையான கோளாறுகளுக்கு விலை ரூ. 8

கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets)
6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணு அதிகப்படி)

Mrs. P. DEVEE, F.D.S. (M.S)
Tollygunge, : : CALCUTTA

ஸ்டாக்கிஸ்டுகள்: ஹரி அண்ட் சன், 93, சைனு பஜார் ரோட், சென்னை
ராகவன் அண்ட் கம்பெனி
ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோட், பெங்களூர் சிடி

காந்திஜியும் கவிஞரும்

அன்று சாந்திநிகேதனத்தில் ஒரே மகிழ்ச்சிப் பெருக்கு. மகாத்மா காந்தி, பண்டித நேருவுடன் அங்குவந்து மூன்று நாட்கள் தங்கப் போகிறார் என்ற செய்திதான் மகிழ்ச்சிக்குக் காரணம்.

விருந்தினர் விடுதியில் ஓர் அறை காந்திஜிக்காக ஒதுக்கிவிடப்பட்டது. சாந்தி நிகேதனத்திலுள்ள பிரசித்தி பெற்ற கலாபவனத்தின் கலைஞர்களான பேரறிஞர் நந்தலால் போஸின்சிஷ்யர்களால் அவ்வறை ஏகப் பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பச்சிலைகள், மலர்கள், வர்ணப் பாத்திரங்கள், கையால் செய்து அச்சடித்த கலர்த் துணிகள் ஆகிய வெகு சாதாரணப் பொருள்களைக் கொண்டே, அந்த அறையை அவ்வளவு அழகாக அலங்கரித்து விட்டார்கள்.

அன்றைக்கு அதிகாலையில் காந்திஜி வந்துசேர்ந்தார். அவரோடு பண்டித நேரு, மகாதேவ தேசாய், காதி பிரதிஸ்தானைச் சேர்ந்த சதீஸ் பாபு ஆகியவர்களும் வந்தனர். குருதேவரே காந்திஜியின் நெற்றியில் சந்தனக் குங்குமப் பொட்டிட்டு வரவேற்றார். பெண்களின் இனிய கீதம் பின் தொடர, கவிஞரின் அன்புக் கைகள் முன்னே வழிகாட்ட, காந்திஜி தமக்கென ஏற்பாடு செய்திருந்த அறைக்கு வந்து சேர்ந்தார். அந்த அறையின் அலங்காரங்களைப் பார்த்துவிட்டு, "இதெல்லாம் என்ன? ஏன் என்னை மணவறைக்கு அழைத்து வந்தீர்கள்?" எனக் குருதேவரிடம் கேட்டார்.

அதற்குக் குருதேவர், "கவியின் உறைவிடத்தில் இருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்" என்றார்.

காந்திஜி விடவில்லை. "ரொம்பச் சரி, அப்படியானால் மணப்பெண் எங்கே?" என்று அடக்க முடியாத சந்தோஷத்துடன் கேட்டார்.

அங்கே கூடியிருந்த அத்தனை பெண்களும் நாண மடைந்தனர். "எங்கள் உள்ளத்தில் சதா காலமும் யுவ ராணியாக வீற்றிருக்கும் சாந்தி நிகேதனம் தங்களை வரவேற்கிறது" என்றார் கவிஞர். அதற்குக் காந்திஜி, "அப்படியானால் அந்த யுவ ராணி, பல்லே இல்லாத என் போன்ற கிழவனை பாப்பரை ஒரு தடவை பார்த்தால் மறு தடவை என் பக்கம் திரும்பவே மாட்டாளே!" என்றார். "ஒருக்காலுமில்லை. எங்கள் ராணி சத்தியத்தை நேசிக்கிறவள். இத்தனை ஆண்டுகளாக அவள் அதை மிகுந்த பக்தியுடன் பூஜித்து வந்திருக்கிறாள்" என்றார் கவிஞர்.

"அப்பச் சரி. பல்லில்லாத கிழவனுக்கும் நம்பிக்கை உண்டு" என்றார் காந்திஜி.

மறுநாட் காலை, காந்திஜி கோஷ்டியார் 4-30 மணிக்கே பிரார்த்தனையை முடித்துவிட்டனர். பையன்களுக்கும் பெண்களுக்கும் கை வில்லால் பஞ்சடிக்கும் விதத்தை சதீஸ் பாபு விவரித்துக் காண்பித்துக்கொண்டிருந்தார். வில்லின் சப்தம் குருதேவருக்கு இசை ஒலி போல் இருந்தது. "ஏது, உங்களுடைய வில்

இலக்கியப் பதிப்பகத்தாரின் மகாத்மா காந்தி வாழ்க்கையில் ரசமான சம்பவங்கள் என்ற நூலிலுள்ள ஒருகட்டுரையின் சாரம்.

சங்கீதத்தினால் ஆசிரமப் பெண்களின் சங்கீதத்தையும் சிதார் வாத்தியங்களையும் அவமானப்படுத்துகிறீர்களே!" எனக் குருதேவர் சதீஸ் பாபுவிடம் கேட்டார்.

இந்தக் காட்சியைக் கடந்து கவிஞர், காந்திஜியின் அறைக்குப் போனார். அறைக்குள் பார்த்தவுடன் அவர் திடுக்கிட்டார். முன்தினம் இருந்த அலங்காரமெல்லாம் அலங்கோலமாகக் கிடந்தது. கட்டில், முற்றத்தில் தூங்கிக்கொண்டிருந்தது. காந்திஜி திறந்த வெளியில்தான் படுப்பது வழக்கம்! சித்திரக் கும்பங்களின் இடத்தையும், பசும் இலைகளின் ஸ்தானத்தையும், நூல் நூற்கும் சாமான்களும் காகிதக் கட்டுகளும் கைப்பற்றிக் கொண்டன. உடனே குருதேவருக்கு, காந்திஜியைக் கேலி செய்யலாம் என்று தோன்றிற்று. உடனே, "ஹரே ராம் ஹரே ராம்! மணவறை மறைந்துவிட்டதே! மணமகன் இருப்பதைக் காண்கிறேன்; ஆனால் பாவம்! மணப் பெண் எங்கேயோ ஓடிவிட்டாளே!" என்றார்.

காந்திஜி சந்தோஷ ஆரவாரத்துடன், "என்ன ஐயா, பல்லில்லாத கிழவனாகிய என்னை எந்தப் பெண்ணும் லட்சியம் செய்ய மாட்டாள் என்று நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேனே! ஞாபகம் இல்லையா?" என்றார்.

இந்தக் குத்தலும் எதிர்த்தாக்குதலும், சுற்றி நின்று கேட்டவர்களுக்கு மிக ரசமாக இருந்தன. உலகத்தின் இரண்டு பெரிய மகான்களின் இந்த வேடிக்கைப் பேச்சைக் கேட்டு ரசிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!

மகா புருஷர்

ஆல்பர்ட் ஏன்ஸ்டீன்

உலக அரசியல் சரித்திரத்தில், காந்தியடிகள் ஒரு விசேஷமான புருஷர். ஒடுக்கப்பட்ட ஒரு ஜாதியினரை விடுதலை செய்விப்பதற்காக அவர் புதியதும் மனிதத் தன்மை நிரம்பியதுமான ஒரு சரிதத்தைக் கண்டுபிடித்து. அதனை மிருந்த உற்சாகத்தோடும் சிரத்தையோடும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார். நாகரீக உலகத்தில் ஆங்காங்கு வசிக்கும் அறிஞர்களின் மத்தியில் அவருக்கேற்பட்டிருக்கும் மகத்தான செல்வாக்கானது—ஒழுக்க ரீதியான செல்வாக்கானது—மிருக பலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிற இந்த யுகத்தில் ஸ்திரமில்லாததாகத் தோன்றிய போதிலும் எதிர்காலத்தில் ஊர்ஜிதம் பெற்று விளங்கும். ராஜ தந்திரிகளின் வேலை எந்த அளவுக்கு நிரந்தரமாக நிலவி நிற்குமென்றால், அவர்கள் தங்கள் சொந்த உதாரணத்தினாலும், பிறரை நல்வழிப்படுத்துவதற்கென்று உபயோகிக்கிற செல்வாக்கினாலும் ஜனங்களின் ஒழுக்க ரீதியான சக்திகளைத் தூண்டி விட்டு அவைகளை ஒன்று திரட்டுகிற அளவுக்குத்தான்.

நாம் வசித்துக் கொண்டிருக்கிற இந்தக் காலத்திலேயே, நம்மிடையே பிரகாசமான வாழ்க்கையோடு கூடிய ஒரு மகான் தோன்றியிருக்கிறார். இது விஷயத்தில் நாம் பாக்கியசாலிகள். இதற்காகக் கடவுளுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்—அந்த மகான்—வருங்காலச் சந்ததியாருக்கு, வழி காட்டும் விளக்காக விளங்குவார்.

"இதோ இவர் தான் ஆனந்த் மிஸ்ரா...
இப்போதுதான் ஆபீசிலிருந்து வீடுதிரும்புகிருர். நல்ல டீ ஒரு கோப்பை சாபபிட விழைகிருர். ஆனல் பாவம், அது கிடைக்காது. ஏனெனில் கெட்டிலில் காய்ந்து கொண்டிருக்கும் வெந்நீர் நாள் பூராவும காய்ந்து கொண்டேயிருந்தது. நல்ல தேயிலை பானத்துக்கு புதிதாகக்கொதித்த நீரே தேவை.
இந்து சுலபமான விதிகள்!
1. எப்போதும் புதிதாக எடுத்த தண்ணீரை புதிதாக கொதிக்கவைத்தே உபயோகிக்கவும். 2. பாண்டியை உபயோகிக்குமுன்பாக கொஞ்சம் சூடாக்கவும். 3. நல்ல தேயிலையை நபர் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பாண்டிக்கு ஒரு கரண்டியுமாகப் போடவும் 4. கொதி நீரில் தேயிலை சமார் 3 முதல் 5 நிமிஷங்களுக்கு ஊறட்டும். 5. கோப்பையில் கஷாயம் எடுத்துக்கொண்டு பால் சேர்த்துக் கொள்க. பாண்டியில் அல்ல.
"தேயிலைப்பானம் - சில யோசனைகள்" எனும் இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி உருது, தமிழ்பாஷைகளில் கிடைக்கும். விண்ணப்பிக்குமிடம்: கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101, நேதாஜி சுபாஷ் ரோட், த. பெ. நெ. 2172, கல்கத்தா.
கோடிக்கணக்கான மக்கள் சோர்வையகற்றி புத்துணர்ச்சிபெற தேயிலை பானம் அருந்துகின்றனர். ஆனல் தேயிலை பானம் அருந்தும் பலருக்கு நல்ல டீ எப்படி செய்வதென்பது தெரியாதது வருந்தத்தக்கது. நல்ல டீ தயாரிக்க செலவு ஏதும் அதிகமில்லை. இந்து சுலபமான முறைகளைக் கடைப்பிடிப்பதே போதுமானது. உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் உங்கள் டீ நறுமணம் மிகுந்ததாயிருக்கவும் இம்முறைகளை உங்கள் மனதில் பதியவைத்து வீட்டிலும் சரிவர அனுசரிப்பது நலம்.
டீ
யைப்போன்றது வேறேதுவுமல்லை.
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

லிப்டன்ஸ்
என்றால்
முதல்தரமான
டீ
JAKOOJA BRAND
FINEST DUST TEA
LIPTON'S
FINEST DUST
PACKED BY LIPTON
JAKOOJA
LTM 132 W.TM.

தெய்வம் நின்று காக்கும்

லியோ டால்ஸ்டாய்

விளாடிமிர் நகரிலே ஓர் இளம் வியாபாரி வாழ்ந்து வந்தான். அவன் பெயர் அக்ஸினுவ். அவனுக்கு இரண்டு கடைகளும் ஒரு வீடும் இருந்தன.

அக்ஸினுவ் நல்ல அழகன். சுருட்டைத் தலை. நன்முய்ப் பாடுவான். சிறு வயதில் அதிகமாகக் குடித்ததுண்டு. ஆனல், கல்யாணமான பின்பு குடிப்பதை நிறுத்திவிட்டான். எப்பொழுதாவது ஒரு தடவை கொஞ்சம் குடிப்பான்.

ஒரு முறை அவன் நிஷ்னி சந்தைக்குப் புறப்பட்டான். அப்பொழுது அவனுடைய மனைவி அவனைப் பார்த்து, "இன்று போகாதீர்கள். உங்களுக்கு ஏதோ துன்பம் நேரப் போவது போலக் கனக் கண்டேன்" என்ருள்.

அக்ஸினுவ் சிரித்தான். "நான் சந்தையில் குடித்துவிட்டு அலேவேன் என்று நீ எப்பொழுதும் பயப்படுகிருய்" என்ருன்.

மனைவி சொன்னுள்: "நான் எதற்காகப் பயப்படுகிறேன் என்று எனக்கே தெரியவில்லை. ஆனல் விநோதமான கனக் கண்டேன். நீங்கள் சந்தையிலிருந்து திரும்பி வந்தபோது, உங்கள் தலை நரைத்திருந்தது."

அக்ஸினுவ் மீண்டும் சிரித்தான்.

"இது நல்லதற்கு அறிகுறி. பார், இப்பொழுது நான் போகிறேன். திரும்பி வரும்போது, உனக்குப் பல அழகான சாமான்கள் வாங்கி வருவேன்" என்ருன்.

குழந்தைகளிடமும் மனைவியிடமும் விடை பெற்றுப் புறப்பட்டான்.

பாதித் தூரம் போனதும், வழியில் ஒரு வியாபாரியைச் சந்தித்தான். இருவரும் ஒரு ஹோட்டலில் தங்கினுர்கள். ஒன்ருகத் தேநீர் பருகினுர்கள். அடுத்தடுத்து இருந்த இரு அறைகளிலே தூங்கினர்.

அக்ஸினுவ் வெகு நேரம் தூங்க விரும்பவில்லை. நள்ளிரவில் எழுந்தான். குளிர்ந்த நேரத்தில் வெகு தூரம் சென்றுவிடலாம் என்று கருதி வண்டிக்காரனை எழுப்பி வண்டி பூட்டச் சொன்னுன். பயணம் ஆரம்பமாயிற்று.

முப்பது மைல் போன பிறகு, வயிறு பசித்ததால், ஏதாவது

காந்திஜி லியோ டால்ஸ்டாயைத் தம் குரு என்று குறிப்பிட்டார். அந்த ருஷ்ய தேசத்து மகானின் கொள்கைகள் யாவும் காந்தியக் கொள்கைகள்தான் என்பதை நிரூபிக்கிறது இந்த அருமையான கதை. ஸ்ரீ எம். எல். சபரிராஜன் மொழிபெயர்த்தது.

உண்ண எண்ணினன். ஒரு ஹோட்டலில் தங்கி, தேநீர் கொண்டு வரும்படி ஹோட்டல் காரனிடம் சொல்லிவிட்டு, வாத்தியத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்.

திடீரென்று மணியோசையுடன் ஒரு வண்டி ஹோட்டல் முன் வந்து நின்றது. அதிலிருந்து ஓர் அதிகாரியும் இரண்டு சிப்பாய்களும் இறங்கினர். அதிகாரி அக்ஸினவ் அருகே வந்து, "நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?" என்று வினவினர்.

அக்ஸினவ் கொஞ்சங்கூடத் தயங்காமல் பதில் சொன்னதுமல்லாமல், அவரைத் தேநீர் அருந்தும்படியாகவும் வேண்டினன். ஆனல் அவர் விடவில்லை.

"நேற்றிரவு எங்கு தங்கி இருந்தாய்? தனியாகவே படுத்திருந்தாயா, அல்லது நீயும் ஒரு வியாபாரியும் படுத்திருந்தீர்களா? அந்த வியாபாரியை இன்று காலை பார்த்தாயா? விடியு முன்பே ஏன் புறப்பட்டு விட்டாய்?" என்று பல கேள்விகள் கேட்டார்.

அவர் அம்மாதிரியாகப் பல கேள்விகள் ஏன் கேட்க வேண்டும் என்று அக்ஸினவிற்கு ஆச்சரியம உண்டாயிற்று. அவன் எல்லா விஷயங்களையும் நடந்தது நடந்தது போலச் சொன்னன். பின்பு அதிகாரியை நோக்கி, "இவவாறு என்னை ஏன் கேட்கிறீர்கள்? நான் திருடன் அல்ல, கொலைகாரன் அல்ல. என்னுடைய வேலையாக நான் போகிறேன். என்னிடம் கேள்வி கேட்பதற்குக் காரணம் இல்லையே" என்முன்.

அதிகாரி சொன்னர்: "நான் போலீஸ் இன்ஸ்பெக்டர். நான் கேள்வி கேட்டதற்குக் காரணம் நேற்றிரவு உன்னுடன் தங்கியிருந்த வியாபாரி இன்று காலையில் செத்துக் கிடக்கிறான். உன்னுடைய சாமான்கள் எங்கே? (சிப்பாய்களை நோக்கி) சோதியுங்கள்!"

சிப்பாய்கள் உள்ளே போய் அவனுடைய பெட்டியையும் மூட்டையையும் கொண்டுவந்து திறந்து பார்த்தனர். திடீரென்று, போலீஸ் இன்ஸ்பெக்டர், அவன் மூட்டையிலிருந்து ஒரு கத்தியை எடுத்து, "இது யாருடைய கத்தி?" என்று கேட்டார்.

அக்ஸினவ் பார்த்தான். கத்தியில் ரததம் தோய்ந்திருந்தது. அவனுக்குப் பயம் உண்டாயிற்று.

"இது யாருடைய ரத்தம்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

அக்ஸினவ் பதில் சொல்ல முயன்றான். ஆனல் அவனுடைய நா குழறிற்று. "எனக்கு...... எனக்குத்.......தெரியாது.......... அது......என்...கத்தி...அல்ல..." என்முன்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் சொன்னர்:

"அந்த வியாபாரி இன்று காலையில் குத்துண்டு கிடந்தான். கொலை செய்தது நீயே, வேறு யாரும் அல்ல. ஹோட்டல் உள்ளே தாளிடப்பட்டு இருந்தது. அங்கு உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. இதோ ரத்தம் தோய்ந்த கத்தியும உன்னுடைய மூட்டையில் இருக்கிறது. முகத்தைப் பார்த்தாலே நீ குற்றவாளி என்பது நன்முகத் தெரிகிறது. நீ அவனை எப்படிக் கொன்முய், அவனிடமிருந்து எவ்வளவு பணம் திருடிக் கொண்டாய், சொல்லு!"

அக்ஸினுவ், கொலை செய்தது தானல்ல வென்றும், தேநீர் அருந்திய பின்பு அந்த வியாபாரியைப் பார்க்கவே இல்லை என்றும், அப்பொழுது கைவசம் இருந்த எண்ணுயிரம் ரூபிள் தன்னுடைய சொந்தப் பணம் என்றும், கத்தி தன்னுடையதல்லவென்றும் சத்தியம் செய்தான்.

ஆனல் அவனுடைய குரல் நடுங்கியது. முகம் வெளிறியது. உடம்பு, குற்றவாளி உடம்பைப் போலச் சிலிர்த்தது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் சிப்பாய்களை அழைத்து, அக்ஸினுவைக் கைது செய்து வண்டியில் ஏற்றுமாறு உத்தரவிட்டார்.

அவர்கள் அவனுடைய கையையும் காலையும் கட்டி, வண்டியில் ஏற்றியபோது, அவன் 'ஓ' வென்று அழுதான்.

அவன் வைத்திருந்த சாமானையும் பணத்தையும் பறிமுதல் செய்தபின், பக்கத்து ஊரிலிருந்த சிறையில் அவனைத் தள்ளினர்.

* * *

அதிகாரிகள் விளாடிமிர் நகரத்திற்குச் சென்று அக்ஸினுவின் நடத்தையைப் பற்றி விசாரித்தனர். அக்ஸினுவ் இளமையில் குடிப்பதுண்டு என்றும், ஆனல் வர வர யோக்கியனுகி விட்டான் என்றும் நகர வாசிகள் கூறினர். அப்புறம், அவனுடைய விசாரணை ஆரம்பமாயிற்று. வியாபாரியைக் கொன்று இருபதினுயிரம் ரூபிள் அபகரித்ததாக, கோர்ட்டார் அவனுக்குத் தண்டனை விதித்தனர்.

இந்த நிகழ்ச்சியால் அக்ஸினுவின் மனைவி மிகவும் கலங்கிப் போனுள். என்ன செய்வதென்று அவளுக்குத் தோன்றவில்லை. சிறு சிறு குழந்தைகள். ஒன்று கைக் குழந்தை. குழந்தைகளை அழைத்துக் கொண்டு அவள் புருஷனைப் பார்க்க வந்தாள்.

முதலில் அனுமதி கிடைக்கவில்லை. ஆனல், கடைசியில் ஒருவாறு அனுமதி கிடைத்தது. சிறையில் புருஷனைப் பார்த்தாள்.

அவன் கைதிகள் உடையணிந்து, விலங்கிடப்பட்டு, கொலைஞர்களுக்கு மத்தியில் இருந்ததைக் கண்டதும், அவள் கீழே விழுந்து மூர்ச்சையாஞள். அப்புறம், வெகு நேரத்திற்குப் பின் எழுந்து, குழந்தைகளைச் சுற்றிலும் உட்காரவைத்து, குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசிய பின், "இந்தத் துர்ப் பார்க்கியம் எப்படி நேர்ந்தது, சொல்லுங்கள்!'' என்று கேட்டாள்.

அவன் கதை முழுவதையும் சொன்னுன்.

"முடிவு என்னவாகும்?" என்று அவள் கேட்டாள்.

"மன்னருக்கு மனுச் செய்ய வேண்டும். நிரபராதியைத் தண்டிக்க இயலாது" என்றுன் அக்ஸினுவ்.

ஜார் மன்னருக்கு, தான் ஏற்கெனவே ஒரு மனுவை அனுப்பியதாகவும், ஆனல் அது நிராகரிக்கப் பட்டதாகவும் மனைவி கூறினுள். அக்ஸினுவ் பதில் கூறவில்லை. ஆனல் முன்னிலும் கவலை மிகுந்து தோன்றினுன்.

"நான் அன்று கண்ட கனவை நினைத்துப் பாருங்கள். உங்கள் தலை நரைத்துப் போனதாகக் கண்டதும் அது ஏதோ ஓர் ஆபத்திற்கு அறிகுறி என்று கருதினேன். இந்தத் தொல்லையினுல் இப்பொழுது உங்கள் தலை நரைக்கத் தொடங்கிவிட்டது. அன்று

நீங்கள் வீட்டிலேயே இருந் திருக்க வேண்டும்.''

அவள் தலையில் அடித்துக் கொண்டவாறு, "நாதா, மனைவியிடம் உண்மையைச் சொல்லுங்கள். கொலை செய்தது நீங்களா, அல்லவா?'' என்று வினவினள்.

"ஐயோ, நீயும் என்னை நம்பவில்லையா?'' என்று கைகளைப் பிசைந்தவாறு கண்ணீர் விட்டான் அக்ஸினவ்.

அப்பொழுது அங்கு ஒரு சிப்பாய் வந்து, நேரமாகி விட்டதென்று கூறினன். மனைவியும் குழந்தைகளும் கடைசி முறையாக அவனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றனர்.

* * *

மனைவி போனபின், நடந்தையெல்லாம் அவன் சிந்தித்துப் பார்த்தான். மனைவிக்கும் தன்னிடம் அவநம்பிக்கை தோன்றி விட்டதை எண்ணியபோது அவன் மிகவும் துயரம் அடைந்து "கடவுளைத் தவிர வேறு யாருக்கும் உண்மை தெரியாது போலும்! கருணை காட்டுமாறு அவர் ஒருவரிடமே கேட்கலாம். அவர் ஒருவரிடமிருந்தே கருணையை எதிர்பார்க்கலாம்'' என்று சொல்லிக் கொண்டான்.

அன்றிருந்து, அவன் மனுப் போடுவதை நிறுத்தினன். சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகலாம் என்ற நம்பிக்கையையும் இழந்தான். ஆனல் கடவுளைப் பிரார்த்தனை செய்து வந்தான்.

அவனுக்கு முதலில் கசையடியும், அப்புறம் சைபீரியச் சிறைவாசமும் விதிக்கப்பட்டது.

அவ்வாறே ஒன்றன்பின் ஒன்ருகத் தண்டனை நிறைவேறலாயிற்று.

அவனுக்குக் கசையடி கொடுத்தார்கள். கசையடியால் உண்டான புண் ஆறியதும், மற்றக் கைதிகளுடன் சைபீரியாவிற்கு அனுப்பினர்கள்.

இருபத்தாறு வருஷம் அக்ஸினவ் சுரங்கங்களில் வேலை செய்தான். அவன் தலை மயிர் முழுவதும் நரைத்துவிட்டது. தாடி நீண்டு வளர்ந்தது. அவனுடைய குதூகலமெல்லாம் மறைந்தது.

அவன் கூன் விழுந்து, மெதுவாக நடந்தான். அதிகமாகப் பேசுவதில்லை. சிரிப்பதே அபூர்வம். கடவுள் தியானத்திலேயே பெரும்பாலான நேரத்தைக் கழித்து வந்தான்.

சிறையில் இருந்தபோது பூட்ஸ் தைக்கக் கற்றுக் கொண்டான். அதனல் கிடைத்த பணத்தை வைத்துக்கொண்டு பைபிளில் தேவர்கள் சரிதத்தைக் கூறும் பகுதியுள்ள புத்தகத்தை வாங்கினன். சிறையில் போதுமான அளவு வெளிச்சம் இருந்தபோதெல்லாம் அந்தப் புத்தகத்தை வாசித்து வந்தான். விடுமுறையின்போது, சிறைச்சாலையிலிருந்து கோயிலுக்குப் போய், பைபிளை வாசிப்பான்; பலருடன் சேர்ந்து பாடுவான்.

அவனுடைய பணிவையும் அடக்கத்தையும் கண்ட அதிகாரிகள் அவனிடம் அன்பு பாராட்டினர். இதர கைதிகள் அவனிடம் மரியாதையாக நடந்து கொண்டதுமல்லாமல், 'தாத்தா' என்றும் 'சாமி' என்றும் அவனை அழைத்து வந்தனர். அவர்கள் மனுப்போட விரும்பினல், அக்ஸினவ் மூலமாகவே அதை அதிகாரிகளுக்கு அனுப்புவார்கள். அவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் நேர்ந்தால், அக்ஸினவே தீர்த்து வைப்பான்.

அவனுக்கு வீட்டிலிருந்து ஒரு கடிதமும் வரவில்லை. மனைவியும் குழந்தைகளும் உயிரோடிருக்கிறார்களா என்பதே அவனுக்குத் தெரியாது.

* * *

ஒரு நாள் சிறைச்சாலைக்குப் புதிய கைதிகள் சிலர் வந்தனர். மாலை வேளையில் பழைய் கைதிகள் புதிய கைதிகளைச் சுற்றி உட்கார்ந்து, அவர்கள் ஊர், பேர், செய்த குற்றம் முதலியவற்றை ஓயாது கேட்டனர்.

அக்ஸினவ் தன்னுடைய இடத்திலேயே உட்கார்ந்தவாறு தலை குனிந்து, அவர்கள் சொல்லியதை எல்லாம் கேட்டுக் கொண்டே யிருந்தான்.

புதிய கைதிகளிலே ஒருவன் நெட்டையாகவும் திடகாத்திரனாகவும் தோன்றினன். அவனுக்கு வயது அறுபது இருக்கும். அவன் தன்னுடைய வரலாற்றைச் சொல்லிக்கொண்டு வந்தான். அவன் கூறியதாவது:

"சகோதரர்களே, ஒரு காரணமும் இல்லாமல் என்னை இங்கு அனுப்பிவிட்டார்கள். நான் ஒரு வண்டியில் பூட்டியிருந்த குதிரையை அவிழ்த்தேன். அவர்கள் என்னைப் பிடித்துக்கொண்டு, 'பயலே, திருடப் பார்க்கிறாயா' என்றார்கள். நான் 'இல்லை' என்றேன். வண்டிக்காரன் என்னுடைய நண்பன் என்றும் கூறினேன். அவர்கள் விடவில்லை. ஆனால் நான் எதை, எப்போது திருடி யிருக்கிறேன் என்பது அவர்களுக்குத் தெரியாது. நான் வெகு காலத்திற்கு முன்னாலேயே இங்கு வந்திருப்பதற்கேற்ற பல வேலைகள் செய் திருக்கிறேன். ஆனால், அப்போது என்னைக் கண்டுபிடிக்க யாராலும் முடியவில்லை. இப்போது ஒருவித நியாயமுமில்லாமல் இங்கு என்னை அனுப்பி யிருக்கிறார்கள். ஆனால் இப்போது முணுமுணுத்து என்ன பலன்? முன்னம் ஒருமுறை இங்கு வந்திருக்கிறேன். அவர்கள் என்னை இங்கு வெகுகாலம் வைத்திருக்க முடியாது."

"உனக்கு எந்த ஊர்?" என்று கேட்டான் ஒரு கைதி.

"எனக்கு விளாடிமிர் நகரம். என்னுடைய பெயர் மாகார். தந்தை பெயர் சேமியன்."

அக்ஸினவ் தலையைத் தூக்கி முன்னாலே பார்த்தவாறு, "சேமியனிஷ், அக்ஸினவ் குடும்பத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீரா? அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா?" என்று கேட்டான்.

"ஓ, நன்றாகத் தெரியும். அவர்கள் பணக்காரர்கள், பெரிய வியாபாரிகள். அவர்களுடைய தகப்பன்தான் சைபீரியாவில் கிடக்கிறான். அவனும் நம்மைப் போலப் பாவம் செய்தவன் போலிருக்கிறது. அது சரி தாத்தா, நீர் என்ன குற்றத்திற்காக இங்கு வந்தீர்?"

அக்ஸினவ் தன்னுடைய துர்ப்பாக்கியத்தைப் பற்றிப் பேச விரும்பவில்லை; பெருமூச்சு விட்டவாறு, "என்னுடைய பாவத்தின் காரணமாக, இருபத்தாறு வருஷத்திற்கு முன் இங்கு அனுப்பினார்கள்" என்று சுருக்கமாகச் சொன்னான்.

"என்ன குற்றம்?" என்று கேட்டான் சேமியன்.

"தகுந்த தண்டனையே கிடைத்திருக்கிறது" என்றான் அக்ஸினவ்.

இதைத் தவிர அவன் வேறு எதுவும் சொல்லவில்லை. ஆனால் மற்றக் கைதிகள் அவனுடைய

வரலாற்றைக் கூறினர். போகும் வழியில், யாரோ ஒரு வியாபாரியைக் கொலை செய்து விட்டதாகவும், கொலைஞன் தன்னுடைய கத்தியை அக்ஸினுவின் மூட்டையில் வைத்துவிட்டுச் சென்றதால் அதிகாரிகள் அக்ஸினுவிற்குத் தண்டனை விதித்து விட்டதாகவும் சொன்னார்கள்.

மாகார் இதைக் கேட்டதும், அக்ஸினுவைக் கூர்ந்து நோக்கி விட்டு, "ஆச்சரியம்! தாத்தா, ரொம்பக் கிழவராகிவிட்டீர்!" என்றான்.

இதைக் கேட்டதும் மற்றக் கைதிகள் வியப்படைந்து, "அக்ஸினுவை நீ முன்னே பார்த்ததுண்டா?" என்று வினவினர். ஆனால் அவனே "நண்பர்களே, நாங்கள் இருவரும் மறுபடி ஒருவரையொருவர் பார்ப்பது அதிசயம்!"

அவன் இவ்வாறு கூறியதும், அக்ஸினுவின் மனதில் ஓர் எண்ணம் ஓடிற்று. கொலையைப் பற்றி அவனுக்கு ஏதாவது தெரியுமோ என்பதை அறிய அவன் விரும்பினன். ஆகவே, அவன் சேமியனை நோக்கி, "அந்தக் கொலையைப் பற்றி உமக்கு ஏதாவது தெரியுமா? என்னை இதற்கு முன் பார்த்திருக்கிறீரா?" என்று கேட்டான்.

"என், தெரியாமல் என்ன? ஊர் முழுவதிற்கும் தெரியுமே! அது வெகு காலத்திற்கு முன் நிகழ்ந்த சம்பவம். அப்பொழுது என்ன காதில் விழுந்தது என்பது இப்பொழுது ஞாபகம் இல்லை" என்றான் மாகார்.

"வியாபாரியைக் கொன்றது யார், உமக்குத் தெரியுமா?" என்று கேட்டான் அக்ஸினுவ்.

மாகார் சிரித்தவாறு பதில் சொன்னான்:

"தெரியும். கத்தி யாருடைய மூட்டையில் இருந்ததோ அவனே கொலை செய்திருப்பான். வேறு யாராவது வந்து உம்முடைய மூட்டையில் கத்தியை வைப்பது என்றால், அது நடக்கக் கூடிய வேலையா? உம்முடைய மூட்டையில் வேறொருவன் எப்படிக் கத்தியை வைக்க முடியும்? மூட்டை உம்முடைய தலைமாட்டருகே அல்லவா இருந்தது. அப்படி யாராவது வந்திருந்தால் உமக்கு அந்த ஓசை கேட்டிருக்குமே!"

அக்ஸினுவ் இந்த வார்த்தைகளைக் கேட்டதும், அன்றிரவு கொலை செய்தவன் இவனே என்பது அவனுக்கு உறுதியாக விளங்கிற்று.

எழுந்து வெளியே சென்றான். அன்றிரவு முழுவதும் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவே இல்லை. மனதிலே பெருங் கவலை குடி கொண்டது. அவன் சென்ற காலத்தைச் சிந்தித்துப் பார்த்தான்.

மனைவி கடைசி முறையாகச் சிறைச்சாலைக்கு வந்து தன்னிடம் விடை பெற்றுச் சென்ற போது அவள் இருந்த கோலம் கண்ணெதிரே தோன்றியது. அப்புறம் குழந்தைகள் தோன்றினர். ஒருவன் சிறுவன். மற்றொருவன் கைக் குழந்தை.

அந்தக் காலத்திலே வாலிபனாக சந்தோஷமாக இருந்ததை எண்ணிப் பார்த்தான். அன்று அவர்கள் கைது செய்ய வந்ததற்கு முன்பு, ஹோட்டல் வாசலிலே உட்கார்ந்து குதூகலமாக வாத்தியத்திலே இசை பாடிக் கொண்டிருந்த ஞாபகமும் வந்தது.

கசையடி பெற்ற இடம், அதை நிறைவேற்ற வந்த காவலர்கள், சுற்றிலும் நின்றிருந்த கூட்டம், விலங்குகள், கைதிகள், இருபத்தாறு வருஷச் சிறை வாசம்—எல்லாம் ஒன்றன் பின் ஒன்ருக நினைவிற்கு வந்தன. தற்போதைய கிழப் பருவமும் ஞாபகத்திற்கு வந்தது. தற்கொலை செய்து கொள்ளலாமா என்றுகூட எண்ணினன். அவ்வளவு துக்கம் உண்டாயிற்று.

அப்பொழுது, "எல்லாம் இந்த அயோக்கியன் காரணமாக!" என்ற வார்த்தைகள் அவனுடைய வாயிலிருந்து வெளி வந்தன.

அவனுக்கு மாகார் மீது கோபம் பொங்கி எழுந்தது. வஞ்சம் தீர்க்க வேண்டும் என்ற ஆசை கட்டுமீறி உண்டாயிற்று. அவன் அன்றிரவு முழுவதும் கடவுளைத் தொழுதான். ஆனல் மன அமைதி உண்டாகவில்லை. பொழுது புலர்ந்ததும், மாகார் அருகே அவனைப் பார்க்காதது போல நடந்து சென்ருன்.

இவ்வாருக இரண்டு வாரங்கள் கழிந்தன. அக்ஸினுவிற்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அவனைத் துயரம் பிடித்துக்கொண்டது. என்ன செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை.

ஒரு நாள் இரவு சிறைச்சாலை வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது, மேடைக்கு அடியில் மண் கட்டி புரண்டு வந்ததைக் கண்டான். நின்று பார்த்தான். திடீரென்று, மாகார் மேடைக்கு வெளியே வந்தான். அக்ஸினுவைப் பார்த்ததும் அவன் திகிலடைந்தான்.

அக்ஸினுவ் எதையும் பார்க்காதது போலச் செல்லக் கருதினன். ஆனல் மாகார் அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு சொன்னன்:

"நான் தப்பித்தோடுவதற்காக சுவருக்குக் கீழே குழி தோண்டுகிறேன். கிழவரே, நீர் வாயைத் திறக்காமல் இருந்தால் உம்மையும் தப்பிக்கச் செய்வேன். நீர் என்னைக் காட்டிக் கொடுத்தால், எனக்குச் சவுக்கடி விழும். அப்புறம் உம்மைச் சும்மா விடமாட்டேன், கொன்றுவிடுவேன்."

அக்ஸினுவ் தன் விரோதியை நோக்கினன். கோபத்தினுல் அவன் உடம்பு முழுவதும் நடுங்கிற்று. கையை வெடுக்கென்று இழுத்துக்கொண்டு சொன்னன்: "நான் தப்பித்தோடுவதற்கு என்ன இருக்கிறது? என்னைக் கொல்வதானல், அதனல் எனக்கு ஒரு தீங்கும் விளையப்போவது இல்லை. நீ வெகு காலத்திற்கு முன்னலேயே என்னைக் கொன்றுவிட்டாயே! ஆனல் உன்னுடைய திருட்டுத்தனத்தை நான் சொல்லுவதும் சொல்லாததும் கடவுளைப் பொறுத்திருக்கிறது. நான் என்ன செய்ய வேண்டுமென்று கடவுள் கருதுகிருரோ அதையே செய்வேன்."

மறு நாள் சிப்பாய்கள் கைதிகளை வேலைக்கு அழைத்துச் சென்றபோது, மாகார் தோண்டிய குழியைப் பார்த்துக்கொண்டனர். தலைமையதிகாரி வந்து, "துளை போட்டது யார்?" என்று எல்லோரையும் கேட்டார்.

அனைவரும் மறுத்தனர். அவர்களில் சிலருக்கு உண்மை தெரியும். ஆனல் மாகாருக்குத் தண்டனை கிடைக்குமே என்று எண்ணிப் பேசாமல் இருந்தனர்.

தலைமையதிகாரி, அக்ஸினுவ் அருகே வந்தார். அக்ஸினுவ் யோக்கியன் என்பது அவருக்

குத் தெரியும். ஆகையால், "கிழவரே, நீர் மிகவும் நல்லவர். கடவுள் சாட்சியாகச் சொல்லும், இது யார் வேலை?" என்று வினவினர்.

மாகார் அருகே நின்றிருந்தான். அவனுக்கு மிகவும் பதற்றம் உண்டாயிற்று.

அக்ஸினுவின் கைகளும் உதடுகளும் நடுங்கின. அவன் வாய் திறப்பதற்குக் கொஞ்ச நேரமாயிற்று. அவன் தனக்குள்ளாகச் சொல்லிக் கொண்டான்: "அவனைக் காப்பாற்றினுல்?—அவன் என்னுடைய வாழ்க்கையையே பாழாக்கி யிருக்கும் போது நான் அவனை என் மன்னிக்க வேண்டும்? என்னுடைய கஷ்டங்களையும் துயரங்களையும் அவன் அனுபவிக்கட்டுமே! ஆனல், சொன்னுலோ? அவனுக்குச் சவுக்கடி கிடைப்பது நிச்சயம்......"

"கிழவரே உண்மையைச் சொல்லும்! துளை போட்டது யார்?" என்று கேட்டார் அதிகாரி மீண்டும்.

அக்ஸினுவ் மாகாரைக் கடைக்கண்ணுல் நோக்கிவிட்டு, "எஜமான், நான் சொல்ல முடியாது. கடவுள் தடுக்கிருர்" என்ருன்.

அதிகாரி எவ்வளவோ முயன்றும் அக்ஸினுவ் எதுவும் சொல்லவில்லை. ஆகையால் துளை போட்டவனைக் கண்டுபிடிக்க அவர்களால் முடியவில்லை.

மறு நாள் இரவு அக்ஸினுவ் படுத்திருந்தபோது, யாரோ அங்கு வந்து தன் காலடியில் உட்கார்ந்ததைக் கண்டு அவன் எழுந்தான். இருட்டிலே கூர்ந்து கவனித்தபோது, அவன் மாகார் என்பது தெரிந்தது.

"என்ன வேண்டும் உனக்கு? இங்கு என்ன செய்கிருய்?" என்று கேட்டான் அக்ஸினுவ்.

மாகார் பேசாமல் இருந்தான். அக்ஸினுவ் விடவில்லை. "என்ன வேண்டும்? போகிருயா, அல்லது காவல்காரனைக் கூப்பிடட்டுமா?" என்ருன்.

மாகார் அக்ஸினுவ் அருகே சென்று, மெல்லிய குரலில், "ஐவான்! என்னை மன்னித்து விடும்" என்ருன்.

"எதற்காக?" என்று கேட்டான் அக்ஸினுவ்.

"அந்த வியாபாரியைக் கொன்றுவிட்டு, கத்தியை உம்முடைய மூட்டையில் வைத்தவன் நானே. நான் உம்மையும் கொல்ல முயன்றபோது, வெளியே ஓசை உண்டாயிற்று. அதனுல் கத்தியை உம்முடைய மூட்டையில் வைத்துவிட்டு ஜன்னல் வழியாகத் தப்பியோடினேன்."

அக்ஸினுவ் ஒன்றும் சொல்லவில்லை; என்ன சொல்லுவதென்றும் அவனுக்குத் தெரியவில்லை. மாகார் மண்டி யிட்டவாறு, "ஐவான், என்னை மன்னித்துவிடும். கடவுள் பொருட்டாக வாவது மன்னியும். நான் என்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுகிறேன். அவர்கள் உம்மை விடுதலை செய்துவிடுவார்கள். நீர் வீட்டிற்குப் போகலாம்" என்ருன்.

அக்ஸினுவ் சொன்னுன்: "நீ இலேசாகச் சொல்லி விடுகிருய். ஆனல் அது எப்படி முடியும்? நான் இப்போது எங்கு போவது? மனைவியோ, இறந்திருப்பாள். குழந்தைகள் என்னை மறந்திருப்பார்கள். நான் போவதற்கு இடமே இல்லை."

மாகார் எழுந்திருக்கவில்லை. அவன் தலையைக் கீழே மோதியவாறு, " ஐவான் என்னை மன்னியும். அன்று அவர்கள் என்னைச் சவுக்கால் அடித்தபோது நேர்ந்த வேதனையைக் காட்டிலும் இன்று உம்மைப் பார்ப்பது அதிக வேதனையாயிருக்கிறது. நான் இவ்வளவு கொடுமை செய்த பின்பும், நீர் என் மீது கருணை காட்டுகிறீர். என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. கடவுள் பொருட்டாவது என்னை மன்னியும்! நான் படுபாவியாக இருந்தபோதிலும் என்னை மன்னியும்!" என்றான்.

அவன் விம்மி விம்மி அழலானான்.

அவனுடைய விம்மலையும் பொருமலையும் கண்டு, அக்ஸினுவும் அழுதான். அவன் " கடவுள் உன்னை மன்னிப்பாராக, உன்னைக் காட்டிலும் நான் ஆயிரமடங்கு பாவியாக இருக்கலாம் " என்றான்.

அப்பொழுது திடீரென்று அவனுடைய மனதிலே சாந்தி நிலவியது. வீட்டை நினைத்து அழுவதை நிறுத்தினான். சிறையிலிருந்து வெளியே செல்லவும் விரும்பவில்லை. அந்திய காலத்தைப்பற்றி மட்டுமே சிந்திக்கலானான்.

மாகார், அக்ஸினுவ் சொன்னதைக் கேட்கவில்லை. தன் குற்றத்தை அதிகாரிகளிடம் ஒப்புக்கொண்டு விட்டான். அக்ஸினுவை விடுதலை செய்வதற்காக அதிகாரிகள் வந்தபோது, அவன் இறந்து கிடக்கக் கண்டார்கள்.

*

இரண்டு புத்தகங்கள்

அப்போது நான் தென்னுப்பிரிக்காவில் வசித்துக்கொண்டிருந்தேன். 1904-ல் நான் டர்பனுக்கு ரயிலில் போய்க்கொண்டிருந்தபோது 'இந்த முடிவுக்கு' என்ற ரஸ்கினுடைய புத்தகத்தை வாசித்தேன். அப்போது எனக்கு முப்பத்தைந்து வயது. அந்தப் புத்தகம் என் புற வாழ்க்கை முழுவதையுமே மாற்றிவிட்டது. இதற்குமேல் அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. ரஸ்கினுடைய வார்த்தைகள் என்னை ஆட்கொண்டுவிட்டன. அந்தப் புத்தகத்தை ஒரே மூச்சில் வாசித்து முடித்துவிட்டேன். அதை அடுத்து இரவெல்லாம் கண் விழித்திருந்தேன்......

இதற்கு முன்பு நான் டால்ஸ்டாய் நூலை வாசித்தேன். டால்ஸ்டாய் என் ஆத்ம வாழ்க்கையைத் திருத்தியவர்.

—மகாத்மாகாந்தி

குறைபாடுகள்

உயிரினங்களின் குறைபாடுகளை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். நானும் அந்த உயிரினங்களைச் சேர்ந்தவனே. ஆகவே, குறைபாடுகளின் காரணமாக ஒரு உயிர்ப் பிராணியைத் தொந்தரவு பண்ண நான் இசையேன். குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு, நான் குறைபாடுகளைக் காணும் போதெல்லாம் அவற்றை ஒழிக்க முற்படுவேனே ஒழிய, குறைபாடுகள் உள்ள மனிதனைக் கஷ்டப்படுத்த மாட்டேன். நான் செய்யக்கூடிய தவறுகளுக்காக என்னை யாரும் கஷ்டப்படுத்த நான் விரும்புவதுமில்லை.

—மகாத்மா காந்தி

கூந்தல் வளர்ச்சிக்கு
நீங்கலே தைலம் செய்ய
காஷ்மீர்குஸும்
60 வருஷ
நம்பிக்கை பெற்ற
ஓர் சிக்கன முறை
ஆதித்யா ஏஜன்ஸீஸ்
54. பந்தர் தெரு :: மதராஸ்.

அவசிய குடும்ப-சஞ்சீவி
333
ஸான்டலக்ஸ்
நறுமண சரும-ரக்ஷிணி

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்தியசாலை' நஞ்சன்கூடு
ஜ்வரேக்
எவ்வித ஜ்வரங்களுக்கும்
குழந்தைகளுக்கு
காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
கிர்ஜன்
கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை

சூலெக்ஸ்
உஷ்ண சமன ஸ்நான தைலம்
பல் உபாதைகளை கண்டிக்க
I.D.L. மெடிகேடட்
நஞ்சன்கூடு பல்பொடி

சிறந்த மைசூர் ஊதுவத்திகள்
பிரேமலீலா
அகர், ஜவ்வாது, ஜெயலக்ஷிமி

சோல் ஏஜண்டுகள் :
யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு : மதராஸ்
மதுரை : 42 தெற்காவணி மூலவீதி
கோவை : 234, ராஜா தெரு
பம்பாய் : { 277, தேவதார் / ரோடு மாதுங்கா

யுனிவர்ஸல் கம்பெனியாரின் உயர்தரமான கடிகாரங்கள்.

மலிவான விலை. ஸ்விட்சர்லாந்தில் தயாரானவை
ஒழுங்காக ஓடக்கூடியவை. நீண்ட நாள்
உழைக்கவல்ல இயந்திரங்கள்
ஜுவல்களுடன் கூடியது.
ஒவ்வொன்றும் 3 வருடங்கள் உத்தரவாதம்.

ராஸ்கோப் லீவர் ரவுண்ட்

நெ. 66	நிக்கல் ஸில்வர் கேஸ்	ரூ. 20
நெ. 55	ஷ ஷ	ரூ. 23
நெ. 77	ஷ ஷ	ரூ. 27
நெ. 33	ஷ செண்டர் சகண்ட்	ரூ. 40
நெ. 44	ரோல்ட் கோல்ட் பின்புறம் ஸ்டீல் 10 வருடம் உத்தரவாதம்	ரூ. 55
நெ. 999	ஸ்டெயின்லஸ் ஸ்டீல் வாடர் புரூப் கேஸ் 15 ஜுவல்	ரூ. 90

ரெக்டாங்கிள் அல்லது கர்வ் ஷேப்

நெ. 660	நிக்கல் ஸில்வர் கேஸ் 4 ஜுவல்	ரூ. 38
நெ. 550	ஷ ஷ 5 ,,	ரூ. 40
நெ. 770	ஷ ஷ 7 ,,	ரூ. 45
நெ. 880	ரோல்ட் கோல்ட், ஸ்டீல் பாக் காரண்டி பத்து வருடம்	ரூ. 50
நெ. 440	ரோல்ட் கோல்ட் 5 ஜுவல்கள் காரண்டி பத்து வருஷம்	ரூ. 52
நெ. 220	ஷ 7 ஜுவல்கள் ,,	ரூ. 60
நெ. 110	ஷ 15 ,, ,,	ரூ. 85

பாக்கிங் தபால் செலவு அணா 12. ஒரே சமயத்தில் இரண்டு கடிகாரங்கள் வாங்கினால் தபால் செலவு இனாம். கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

யுனிவர்சல் வாட்ச் கம்பெனி (S)
தபால் பெட்டி 11401 :: கல்கத்தா 6

காந்தி மகாத்மா

●

கொத்தமங்கலம் சுப்பு

இந்தியநாட்டுக்குச் சொந்தமகான்
எல்லாநாட்டுக்குஞ் சொந்தமகான்
சுந்திரமான சுயராஜ்ஜியந்தனைத்
தோன்றச்செய்த காந்திமகான்

ஏழைஎளியவர் போற்றுமகான்
எங்கள் தலைமுறை சாற்றுமகான்
வாழையடி வாழையாக வந்து
வாய்மையுபதேசஞ் செய்யுமகான்

சொத்துகள் எந்நாளும் கைமாறும்
சொல்லெந்த நாளைக்கும் மாறாது
தத்துவம் காந்தி கொடுத்ததெல்லாம்
தாரணிக்கெந்நாளும் செல்வமையா

அரசியல்சண்டைக்குக் காந்திமகான்
ஆயிரங்காரியம் செய்தாலும்
அன்பும் அஹிம்சையும் சத்தியமும்
அளித்த பெருமைக்கீடாமோ

ராமாவதாரம் எனவுரைத்தால்
ராக்ஷசனாயினும் கொல்லவேண்ணான்
கிருஷ்ணாவதாரம் எனவுரைத்தால்
கேலிக்கும்சூழுரை சொல்லவேண்ணான்

புத்தாவதாரம் எனவுரைத்தால்
பூமிசைவாழ்வை வெறுத்தறியான்
பத்தவதாரங்கள் தன்னிலுமே இந்த
பரிபூர்ண ரூபத்தைக் கண்டறியோம்

மண்ணைப்படைத்த இறையவனார்
மானிடர்தம்மைப் படைத்துவிட்டே
பொன்னைப் பொருளைப் படைத்ததனால்
பூமியில் மானிடர் சண்டையிட்டார்

மானிடர்சண்டையைத் தீர்க்கவென்றே
மண்ணி லவதாரந் தானெடுத்து
ஆனவகையில் நெறிமுறைகள்
ஆண்டவன்வந்து எடுத்துரைத்தும்

சின்னமனிதர்கள் வாழ்வினிலே
ஓர்திருத்தமும் காணாமல்
எண்ணியெண்ணி மனம்புண்ணாகி
ஏகாந்தமாகத் தனித்திருந்தது

சண்டைக்கும் பூசற்குங் காரணமாய்
தானுள்ள மாத்சர்யம் போக்கிடவே
அண்டையசலுள்ள பேரையெல்லாம்
அன்புடன் வாழ்பவ ராக்கிடவே

சாந்திசாந்தியென்று நான்முகனார்
ஜபமும்செய்து கைமண்ணெடுத்து
காந்தி காந்தியென்ற ரூபத்தையே
கருவுருவார்த்து கண்மூக்கெழுதி

அன்பைக்குழைத்து புனல்பூசி
அமுதத்தைவாசக மாககிவைத்து
இன்பத்துடன்மக்கள் வாழ்வதையே
இதயத்தில் ஓடிடும்மூச்சாக்கி

தன்னலமற்ற பெருவாழ்வும்
சத்தியபோதனை செய்கைகளும்
எந்திலமக்களும் சரிசமமாய்
எண்ணுமிதயமும் தானமைத்து

தாயிலும்சிறந்த அன்புடையான்
தாரத்திலும்மிக்க காதலுள்ளான்
சேயினும்தெள்ளிய சிந்தையுள்ளான்
தெய்வத்தைகாந்தி மகாத்மாவை

பூமிதிருத்தி மனிதரையே
புத்தியுடன் வாழச்செய்யுமென்று
சாமியருளிய சங்கநிதியான
சாந்தமகாத்துமா காந்தியையே

புண்ணியபூமியில் நாமடைய
புண்ணியந்தானென்ன பண்ணினமோ
கண்ணிமைபோல விந்நாட்டுக்கொரு
காந்திபிறக்குமென் றெண்ணினமோ

கத்தியும் ரத்தமுமில்லாமல்
யுத்தம்நடக்குமென் றெண்ணினமோ
சத்தியமார்க்கத்தில் சண்டையிட்டால்
வெற்றிகிடைக்குமென் றெண்ணினமோ

காங்கிரஸ் மாசபை தன்னருளால்
காந்திமகாத்மாவைக் கண்டுகொண்டோம்
காந்திமகாத்துமா தன்னருளே
காங்கிரசென்பதைக் கண்டுகொண்டோம்

காந்தியின் பொன்னடி போற்றுகிறோம்
காங்கிரஸ்தன்னையும் போற்றுகிறோம்
காந்தியைகாங்கிரஸ் தன்னையுமேஇரு
கண்ணென வணங்கிப் போற்றுகிறோம்

*

செழிப்பான கூந்தல்

ஸ்திரீகளின் எல்லா ஆபரணங்களையும் விடச் சிறந்ததென்று, எக்காலத்திலும், எந்நாட்டிலும், கலைஞர்களால் கற்பனை செய்யப்பட்டும், கவிஞர்களால் பாடப்பட்டும் வந்திருக்கிறது. மேகத்திலிருந்து எட்டிப் பார்க்கும் சந்திரனுக்குக் கரிய கூந்தல் அணைந்த முகத்தைக் கவிஞர்கள் ஒப்பிட்டிருக்கிறார்கள்.

ஜாப்கோ ஹேர் குரோயர்

செழிப்பான கூந்தலை விருத்தி செய்து முகமண்டலத்திற்கு அபார சோபையை அளிக்கிறது

ஜயபாரதம் கோ.,

மதருஸ்—பெங்களூர்—எர்ணாகுளம்

உங்கள் பற்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்

வாயில் ஊறும் துர்நீர் நாசத்திற்குக் காரணமாகிறது. பிலிப்ஸ் டூத்பேஸ்டில் துர்நீரை சமனப்படுத்தும் பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னீஷியா 75% கலந்திருப்பதால் இது வாயில் ஊறும் துர்நீரைபோக்குகிறது. பற்களை பூரணமாகக் காப்பாற்றுவது "பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னீஷியா" டூத் பேஸ்டுதான் என்பதை மறவாதீர்கள். ஏனென்றால், இதில் தான் பரிசுத்தமான பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னீஷியாகலந்திருக்கிறது



பிலிப்ஸை உபயோகித்து
நாசத்தைத் தடுங்கள்

காந்தியடிகளின்
அரிய நூல்கள்

		ரூ.	அ.
அணுகுண்டும் அஹிம்சையும்	....	1	4
நான் மந்திரியானால்	....	1	0
சுயராஜ்யம் வேண்டாமா?	....	1	0
காந்தி வழி 2	....	1	0
மாணவருக்கு	....	5	0
ஹிந்து முஸ்லிம்களுக்கு	....	6	0
சமஸ்தானப் பிரசினை	....	6	0
நமது மொழிப் பிரசினை	....	2	8
காந்தி மகான் கதை	....	5	0
கிராம இயக்கம்	....	3	0
ஏசுநாதர் போதனை	....	0	12

தபால் செலவு தனி

சக்தி காரியாலயம், சென்னை—14

உலகின் அனுதாபங்கள்

கவர்னர் ஜெனரல்
மவுண்ட்பேட்டன் :

அன்பு, சகிப்புத்தன்மை போன்றவை மனித இனத்துக்கு அத்தியாவசியமானவை. அவற்றைப் போதித்த காந்தியின் மறைவு மனித இனத்துக்கு ஒரு பெரிய நஷ்டம். இந்தத் துக்ககரமான சமயத்திலும், என்றும் அழியாப் புகழ்படைத்த ஒரு மகாபுருஷரை உலகத்துக்கு ஈன்றதில் இந்தியா பெருமை அடைகிறது. அவரை வழிகாட்டியாகக் கொண்டு இந்தியா முன்னேறும் என்பதில் இந்தியர்களுக்கு நம்பிக்கை யுண்டு.

வல்லபாய் பட்டேல்:

என் மனம் துக்கத்தால் நிரம்பிவிட்டது. உங்களுக்கு என்ன சொல்லுவதென்றே எனக்குத் தெரியவில்லை. இன்றைக்கு நடந்த இந்தச் சம்பவம் நாமெல்லாம் வெட்கப்படவேண்டிய விஷயம். அவர் உயிரோடு இருக்கும்போது, நாம் அவருடைய புத்திமதிகளைக் கேட்டதில்லை. அவர் இறந்தபிறகாவது அவருடைய புத்திமதிகளைப் பின்பற்றி நடப்போமாக. அப்படி நாம் நடக்காவிட்டால், அது ஒரு பெரிய குறையாகும்.

ஸி. ராஜகோபாலாச்சாரியார் :

நந்தா விளக்கு அணைந்து போயிற்று. அமிழ்தினும் இனிய குரல் ஒடுங்கிப்போயிற்று. காந்தி மகான் வாக்குப்படி எல்லாம் நடக்க வேண்டுகிறேன். தமிழ் நாட்டுக் குழந்தைகளே, விவேகத்துடன் நடந்து கொள்ளுங்கள். பொறுமை வேண்டாம். நேரும் கஷ்டங்களை அனைவரும் பங்கிட்டுக் கொண்டு வாழுங்கள். அன்பும் பக்தியும் தான் பெரும் செல்வம். அதைக் கொண்டு எல்லாம் சாதிக்கலாம்.

திரு. வி. க :

காந்திஜி தமது லட்சியமாகக் கொண்டிருந்த ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை நிலை நாட்ட உறுதி கொள்ளுவீர்களாக.

ஐக்கிய மாகாண கவர்னர்
சரோஜினி தேவி:

மகாத்மா மறைந்துவிட்டார். அவர் மறைந்துவிட்டதால் எல்லாமும் போய்விட்டது என்று நாம் கருதுவோமானல் அது அவரைக் கைவிட்ட செய்கையேயாகும். அவருடைய பூதவுடல் நம்மிடையே யிருந்து மறைந்துவிட்டதால், எல்லாமே போய்விட்டது என்று நாம் கருதுவோமானல் அவர்பால் நாம் கொண்டிருந்த விஸ்வாசமும் நம்பிக்கையும் என்ன ஆகும்? அவருடைய சந்ததியார், அவருடைய ஆத்மார்த்த வாரிசுகள், அவருடைய லட்சியத்தின் பிரதிநிதிகளாக இருக்கிறோம் அல்லவா? சொந்த முறையில் துக்கம் கொண்டாடுவதற்கான காலம் கடந்துவிட்டது......

என் எஜமானரின், என் தலைவரின், என் தந்தையின் ஆத்மா சாந்தியில் மூழ்கிவிடாதிருப்பதாக! சாந்தியில் மூழ்கிவிடக் கூடாது. என் தந்தையே, அமைதியாக இருந்து விடாதீர்

மகாத்மாவின் மரணச் செய்தி உலகை ஸ்தம்பிக்க வைத்தது. உலகத்தலைவர்களும் உலகப் பேரறிஞர்களும் அனுதாபம் தெரிவித்தனர்; சில பிரதிக்ஞைகளும் எடுத்துக் கொண்டனர். அவற்றில் முக்கியமான வற்றை இங்கே கொடுத்திருக்கிறோம்.

கள்! அமைதியாக இருந்துவிட வேண்டாம். எங்கள் பிரதிக்ஞையை நாங்கள் நிறைவேற்றும்படிச் செய்யுங்கள். உங்கள் சந்ததிகளுக்கு, உங்கள் மாணுக்கர்களுக்கு, உங்கள் கனவுகளைக் காத்து வரும் போஷகர்களுக்கு, இந்தியாவின் லட்சியத்தை நிறைவேற்றப் போகிறவர்களுக்கு, எங்களுக்கு, வலிமைதந்து அருள்வீர்களாக!

ஆச்சாரிய கிருப்ளானி:

இன்று மகாத்மாஜியின் பூதவுடல் நம்மோடு இல்லை. ஆனல், அவர் காட்டிய வழியில் அவர் கொள்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகினல் அவருடைய ஆத்மா என்றென்றும் நம்மோடு இருக்கும்.

எஸ். ராதாகிருஷ்ணன்:

காந்திஜியின்மேல் நடந்த இந்தத் திடீர்த் தாக்குதலைக் கேட்டதும் நான் மிக அதிர்ச்சி அடைந்துவிட்டேன். இந்தச் சகாப்தத்தின் மிகப் பெரிய ஞானியை, ஒரு பைத்தியக்காரனின் மூடச் செய்கையால் நாம் இழந்துவிட்டோம். அவருடைய உடலை அழித்துவிட்டாலும், அவரது ஒளி நமக்கு வழி காட்டுமாக.

இந்திய சோஷலிஸ்ட் கட்சிப் பொதுக்காரியதரிசி, ஜெயப்பிரகாஷ் நாராயணன்:

நாடு தந்தையை இழந்த அனுதையாகி விட்டது.

அருணு ஆசப் அலி:

நான் உடனே இந்தியாவுக்குத் திரும்பவேண்டும். இந்தியாவில் மகாத்மா காந்தி இல்லை என்றால், நிலைமை எப்படி இருக்கும் என்று நினைத்தாலே பயமாயிருக்கிறது. நான் சீக்கிரம் திரும்பிப் போக வேண்டும். நான் சீக்கிரம் திரும்பிப்போக வேண்டும்.

சென்னைப் பிரதமர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்:

இந்திய நாடே துக்கத்தில் மூழ்கிவிட்டது.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்:

மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டவுடன் முதலில் நான் அதை நம்பவே இல்லை. அது உண்மை என்று தெரிந்தவுடன் எனக்கு அளவிலா துக்கம் ஏற்பட்டது. அரசியல், மத சம்பந்தமான சச்சரவுகளும் கலவரங்களும் நடைபெருமல் தடுக்க வேண்டியது நமது கடமையாகும். அப்படிச் செய்தால்தான் நாம் உலக சிரேஷ்டருக்கு மரியாதைசெய்தவர்கள் ஆவோம்.

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜின்னு:

"காந்தியின்மேல் நடந்த பேடித்தனமான தாக்குதலைக் கேட்டவுடன் நான் திடுக்கிட்டேன். எங்களுக்குள் அரசியல் கொள்கைகளில் வேற்றுமைகள் இருந்தாலும், அவர் ஹிந்து மதத்தில் தோன்றிய ஒரு பெரிய தலைவர் என்பது உண்மையே. இந்திய டொமினியனுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஈடுசெய்ய முடியாதது. அவருடைய மறைவால் ஏற்பட்ட காலிஸ்தானத்தை நிரப்பவே முடியாது.

பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான்:

காந்திஜியின் மறைவு எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. நம் காலத்திய மிகப் பெரிய மனிதர் அவர். தம் வாழ்நாளெல்லாம் அஹிம்சையையே போதித்தும் கடைப்பிடித்தும் வந்தவர், ஹிம்சையால் கொல்லப்பட்டது எதிர்பாராத சம்பவமாகும்.

கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக் காரியதரிசி பி. சி. ஜோஷி:

ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபடும் பணியில் மகாத்மா காந்தி உயிர் துறந்தார்.

அகில இந்தியத் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். ஏ. டாங்கே:

மகாத்மா காந்தி கொலையுண்டது இந்திய சமாதானத்துக்குப் பெரிய ஆபத்து. ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட்ட மகான் இறந்தது, தொழிலாளர்கள் தங்கள் ஐக்கிய முன்னணி ஒன்றை நிறுவும் மகத்தான பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கிறது.

சரத் சந்திர போஸ்:

நாட்டின் பிதா, ஒரு பாதகனால் சுட்டு வீழ்த்தப்பட்டார் என்ற செய்தி என்னை உலுக்கிவிட்டது. இந்தப் பாதகச் செயலைக் கண்டிக்கத் தகுந்த வார்த்தைகளே இல்லை. நாடு அனாதையாகி விட்டது. மற்றொரு மகாத்மா வருவது எப்போது?

ஸ்ரீமதி மவுண்ட் பேட்டன்:

மகாத்மாவின் மறைவு இந்தியாவுக்கு மட்டுமல்லாமல், உலகத்திற்கே ஒரு பெரிய நஷ்டமாகும். எதையும் கூற முடியாத அளவுக்கு என் மனம் வருத்தம் நிறைந்து கிடக்கிறது. இனிமேல் நாம் செய்ய வேண்டியதெல்லாம், அவர் காட்டிவிட்டுப் போன மார்க்கத்தைக் கடைப்பிடித்து வருவதேயாகும். வேறு ஒன்றும் இப்போது செய்வதற்கில்லை.

சென்னை கவர்னர் ஆர்ச்சிபால்ட் நை:

எப்பேர்பட்ட வார்த்தைகளைச் சொல்லி, என் துக்கத்தை வெளிப்படுத்துவது என்றே எனக்குத் தெரியவில்லை. அவர் அநுஷ்டித்து வந்த கொள்கைகளும், முறைகளும். நமக்கு எதிர்காலத்தில் ஒரு புதுச் சக்தியைத் தரும் என்றே நம்புகிறேன்.

அமெரிக்காவில் இந்தியப் பிரதிநிதி ஆஸப் அலி:

இந்திய சரித்திரத்திலேயே இதுவரை நடந்திராத துக்க சம்பவமாகும். நான் எதுவுமே சொல்ல முடியாத அளவு துக்கம் என்னைத் தடுக்கிறது.

தமிழ் நாட்டு ராஷ்டிரபதி காமராஜ் நாடார்:

மகாத்மா காந்தி இறந்துவிட்டார். நம் நாட்டுக்கும் உலகத்துக்கும் ஒரு பெரிய நஷ்டம்.

வரதராஜுலு நாயுடு:

மகாத்மாவின் மறைவு இந்தியாவுக்கு ஏற்பட்ட ஒரு பெரிய துக்ககரமான சம்பவம்... ......1924-ம் ஆண்டு காந்திஜியும் நானும் வைக்கத்திலிருந்து எர்ணாகுளத்துக்குப் போய்க் கொண்டிருந்த பொழுது காந்திஜி "எனக்கு இயற்கைச் சாவு வராது. எனக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கலாம், அல்லது கல்லெறிபட்டு இறப்பேன்" என்று சொன்னார்.

சுஹ்ராவர்த்தி:

உலகத்தின் உயிர் நாடியே போய்விட்டது. துன்பப்படும் மக்களுக்கு ஆறுதல் கூற இனி யார் இருக்கிறார்கள்? அவர்களுடைய் கண்ணீரைத் துடைக்க இனி யார் இருக்கிறார்கள்? நம்முடைய செய்கைகளை அவர் இனிக் கவனிப்பார். அவருடைய உயிரான கொள்கையான ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகவும், மானிட ஜாதியின் நன்மைக்காகவும்,

நாமும் அவரைப் போலவே பாடு படுவோமாக.

சென்னை அசெம்பிளி எதிர்க்கட்சித் தலைவர் முகம்மது இஸ்மெயில்:

மகாத்மா காந்தியின் மறைவு நமக்கெல்லாம் பேரிடி போல் வந்தது. மனித வர்க்கத்தை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

ஐ. நா. சபையில் பாகிஸ்தான் தூது கோஷ்டித் தலைவர் ஜாபருல்லா கான்:

இந்தக் கொடிய சம்பவத்தைக் கேட்டதும் நான் திடுக்கிட்டேன். இந்தியாவுக்கும் மானிட வர்க்கத்திற்கும் தம்மை அர்ப்பணித்து விட்ட ஒரு மகானை, கொலை பாதகனுடைய அக்கிரமச் செயல் கொன்று விட்டது. இந்த நெருக்கடியான சமயத்தில் அவரை இழந்து விட்டது மிகவும் வருந்தத் தக்கது.

தேவதாஸ் காந்தி:

மற்றெல்லோரும் உணருவது போலவே நானும் இந்தச் சம்பவத்தை ஈடு செய்ய முடியாத நஷ்டமென்றே கருதுகிறேன். இப்பேர்ப்பட்ட வெட்ககரமானதும் பயங்கரமானதுமான ஒரு செய்கையை எந்தத் தனிப்பட்ட மனிதனோ ஒரு கும்பலோ செய்யும் என்று யாரும் கனவுகூடக் காணவில்லை.

மணிலால் காந்தி:

என் தந்தையை இழந்து விட்டேன். என் துக்கத்தை விவரிக்க முடியாது. ஆனால், உலகமே துக்க சாகரத்தில் அமிழ்ந்திருக்கும்போது என் துக்கமும் அதில் அமிழ்ந்து விடுகிறது. மகாத்மாவின் பூதவுடல் மறைந்தாலும் அவரது ஆத்மா நம்மை இனியும் வழி நடத்திச் செல்லுமாக.

வெளிநாட்டுப் பிரமுகர்கள்

பிரிட்டிஷ் மன்னர் ஆறும் ஜார்ஜ்:

காந்தியின் மரணத்தைக் கேட்டு நானும் ராணியும் திடுக்கிட்டோம்.

பிரிட்டிஷ் பிரதமர் ஆட்லி:

மகாத்மா காந்தியின் மரணத்தைக் கேட்டதும் பிரிட்டிஷ் அரசாங்கமே நடுங்கிவிட்டது. தம் முடைய வாழ்நாளெல்லாம் சமாதானத்தையும அஹிம்சையையும் நிலைநாட்டப் பாடுபட்ட அம் மகானின் பிரிவுத் துன்பத்தை, பிரிட்டனும் பகிர்ந்து கொள்ளுகிறது.

மாஜி பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில்:

இந்தக் கொடிய கொலை பாதகத்தைக் கேட்டதும் நான் அதிர்ச்சி அடைந்தேன்.

பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி பெவின்:

இந்தத் திடுக்கிடும் சம்பவத்தால் இந்தியாவும் உலகமும் அடைந்த நஷ்டத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்ல நாக் குழறுகிறது....... காந்தியின் முயற்சிகளை நாங்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தோம். இந்தச் செய்தி எங்களனைவருக்கும் பெரிய தாக்குதலை உண்டாக்கிவிட்டது.......காந்தி நிலை நாட்டப் பாடுபட்ட சமாதானத்தை இந்தியர்கள் காண்பார்களாக.

பிரிட்டிஷ் வரவு செலவு மந்திரி கிரிப்ஸ்:

இந்தியாவுக்கும் உலகத்திற்கும் இது ஒரு பெரிய நஷ்டம். சொல்லிலும் செயலிலும் அஹிம்சையையே கடைப்பிடித்து வந்த அவரை இழந்தது பெரிய நஷ்டமாகும்.

மாஜி இந்தியா மந்திரி பெதிக் லாரன்ஸ் பிரபு:

இந்தியாவின் ஞானசிரியரும், என் நெருங்கிய நண்பருமான காந்திஜி இறந்ததைக் குறித்து வருந்துகிறேன். இந்தச் செய்கையால் பழிவாங்கும் உணர்ச்சி மேலிடாமல், அவருடைய மறைவு இந்த ஆசிய உபகண்ட மக்களுக்கு ஐக்கியப் பாதையைக் காட்டுமாக.

மாஜி உதவி இந்தியா மந்திரி லிஸ்தோவல் பிரபு:

இது ஒரு மிருகத்தனமான செய்கை. உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம், காந்தியின் மரணத்தைக் குறித்துக் கவலைப்படுவார்கள். இந்தச் செய்தியைக் கேட்டதும் என் சிந்தனையே சிதறிவிட்டது.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர் மாரிசன்:

ஒரு உலகப் பெரியாரின் இந்தப் பரிதாபகரமான முடிவு மிகப் பயங்கரமானது.

மாஜி இந்தியா மந்திரி அமெரி:

எல்லா இங்கிலீஷ்காரர்களும், எவ்விதக் கட்சி பேதமும் இலலாமல் காந்திஜியின் மறைவு குறித்து வருந்துகிருர்கள்.

பெர்ஞர்ட் ஷா:

அளவுக்குமீறி நல்லவனயிருப்பது எவ்வளவு ஆபத்து என்பதை இந்தச் சம்பவம் காட்டுகிறது.

போப்பாண்டவர் 12-வது பயஸ்:

சமாதானத்துக்காகவே எப்போதும் பாடுபட்ட மகான், லட்சக் கணக்கான இந்திய மக்களின் தலைவர், மரண மடைந்தது குறித்து நான் மிகவும் வருந்துகிறேன்.

காண்டர்பரி ஆர்ச்பிஷப்:

ஒரு கொலைகாரனின் கையால் காந்தி இறந்தமைக்காக, நான் வருந்துகிறேன். அஹிம்சைக்கும் சகோதரத்துவத்துக்குமே பாடுபட்ட அவர் அமரராகிவிட்டார்.

மாஜி இந்திய வைஸ்ராய் லின்லித்கோ:

பல காலம் கழித்து வரும் இயற்கைச் சாவை, காதகன் தன் கொடூரச் செயலால் துரிதப்படுத்திவிட்டான். காந்தி மரணத்துக்குப் பின் இந்தியாவில் எதுவும் முன் போல் இருக்காது என்பது நிச்சயம். ஆனல் வருங்கால இந்தியா எப்படி இருக்கும் என்று எவராலும் முன் கூட்டிச் சொல்லமுடியாது.

மாஜி இந்திய வைஸ்ராய் வேவல்:

காந்தியின் மறைவு, இந்தியாவின் ஒற்றுமைக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம். அவருக்கு இந்த மாதிரிச்சாவு ஏற்படும் என்று நான் நினைக்கவே இல்லை. அவர் பன்னெடுங்காலம் வாழ்வார் என்றே தோன்றியது. அவருடைய மறைவும், அவருக்கு நேர்ந்த இந்த மாதிரியான சாவும் எனக்குப்பின் பதவியேற்றவரான லூயி மவுண்ட் பேட்டனுடைய பொறுப்பை அதிகமாக்கும்.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர் சோரன்ஸன்:

இந்தியாவில் மட்டுமல்லாமல், இந்த யுகத்திலேயே அவருக்கிருந்த மதிப்பு அளவிட முடியாதது. ஆத்ம பலத்தின் பிரதிநிதியாக விளங்கினர் காந்திஜி. அவருடைய கொள்கைகளை நாம் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளா விட்டாலும், அவருக்கு நாம் எவ்வளவோ கடமைபட்டிருக்கிறோம்.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி:

காந்திஜியைக் கொலை செய்த பாதகமான செயல் இந்தியாவுக்

கும் உலகத்துக்கும் பெரிய அதிர்ச்சியைத் தந்து விட்டது. லட்சக்கணக்கான பிரிட்டிஷ் மக்கள் இந்தத் துயரத்தில் பங்கு கொள்ளுகிறார்கள். வகுப்பு வாதத்தை ஒழிக்கும் புனிதப் போரில் உயிர் துறந்த தியாகி காந்தி. வகுப்பு ஒற்றுமைக்காக அவர் பாடுபட்டதை உலகம் போற்றுகிறது ...... அவருடைய இந்தப் போக்கைக் கண்ட பிற் போக்குவாதிகளும், வகுப்பு வாதத்தை வளர்க்கும் வலது சாரிகளும் அவரை வெறுத்தனர்......காந்தி மேற் கொண்ட திட்டமாகியபரிபூரண சுயராஜ்யமும்,வகுப்புஒற்றுமையும்மேலும் மேலும் வளரவேண்டும்.

அமெரிக்க ஜனதிபதி ட்ரூமன்:

மோகன்தாஸ் காந்தி கொலையுண்டார் என்ற செய்தியைக் கேட்டு மனம் கலங்கி விட்டேன் ...... தலைவராகவும் அஹிம்சா போதகராகவும் இருந்த அவருடைய செல்வாக்கு இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதுமே பரவியிருந்தது. அவருடைய மறைவு சமாதானத்தில் நாட்டமுள்ள மக்களனைவருக்கும் மிகுந்த வருத்தத்தை அளிக்கும்., சமாதானத்துக்கும் சகோதரத்துவத்துக்கும் பாடுபட்ட மற்றொரு பெரியார் இறந்துவிட்டார். எந்த லட்சியத்துக்காக அவர் போராடிசித்தி பெருமல உயிர் நீத்தாரோ, அந்த லட்சியத்தை நிலைநாட்ட, மக்கள் தீவிரமாகப் பாடு படவேண்டும். அவருடைய மறைவு மக்களைத் தட்டி யெழுப்பும் என்று நம்புகிறேன்.

அமெரிக்கக் காரியதரிசி மார்ஷல்

"மகாத்மா காந்தி இறந்தார் என்ற துக்கச் செய்தியைக் கேட்டு ஐக்கிய அமெரிக்கா அதிர்ச்சி அடைந்து விட்டது. இந்தியாவின் துயரத்தையும் அதன் நஷ்டத்தையும் அமெரிக்கா பகிர்ந்து கொள்ளுகிறது.

ஐ. நா. பாதுகாப்புக் கவுன்ஸில் தலைவர் பெர்னுன்ட்வான் லாங்கன்ஹோவ்:

அரும பெரும் சோக்கங்களைச் சாதிக்க அவற்றில் பக்தி பூர்வமான ஈடுபாடு வேண்டும் என்று உலகத்தோருக்கு எடுத்துக் காட்டிய உதாரண புருஷர் காந்தி. அவருடைய வாழ்க்கை நெறியும், உபதேசங்களும் அவருக்குப் பிறகும் உலகத்தில் நிலை பெற்றிருக்கும். காந்தியின் மறைவை நினைவிலிருத்தும் இந்திய மக்களும், உலகத்தின் பல பாகங்களில் உள்ள ஏனைய மக்களும் காந்தியின் நோக்கங்களாகிய அஹிம்சை, சகிப்புத் தன்மை முதலியவற்றை பரப்ப வேண்டும். இத்தகைய கொள்கைகளின் பேரில்தான் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நிறுவப்பட்டிருக்கிறது.

வெள்ளையரல்லாதார் முன்னேற்றச் சங்கம்:

ஜன நாயகத்துக்கும், சிறுபான்மையான மக்கள் அஹிம்சா பூர்வமாக உரிமையோடு வாழ்வதற்கும் அரும்பாடுபட்ட வீரர் இறந்தது குறித்து இந்தச் சங்கம் பெரிதும் வருந்துகிறது. உலகத்திலுள்ள சிறுபான்மையோர் அனைவருக்கும் காந்தி இறந்தது மாபெரும் நஷ்டமாகும்.

நீக்ரோக்கள்:

திடுக்கிடும் செய்தி—நம்ப முடியவில்லை—கேட்ட அதிர்ச்சி இன்னும் அடங்கவில்லை.

ஐ. நா. சபையில் ருஷ்ய தூது கோஷ்டித் தலைவர் கிராமிக்கோ:

இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவராகிய காந்தி

இந்திய சரித்திரத்திலே ஒரு சிறந்த இடம் பெற்றுவிட்டார். தங்களுடைய நாட்டு விடுதலைக்காக இந்தியர் நிகழ்த்திய நீண்ட போராட்டத்தோடு காந்தியின் பெயர் இணைக்கப்படும்

சீனத்தலைவர் சியாங்கே ஷேக்:

சமாதானத்தை நிலைநாட்ட நடந்த புனிதப்போரில்அஹிம்சா பூர்வமாக ஈடுபட்ட தேவபுருஷர் காந்தி, ஹிம்சைக்குப் பலியானது மனத்தைக் கலக்கும் துக்ககரமான விஷயம்

பிரபல சீன எழுத்தாளர் லின்யூ டாங்:

காந்தி ஒருவர்தான் இந்தியாவில் தோன்றிய நவயுகத்தின் ஞானியும் தீர்க்கதரிசியுமாவார். இந்தியாவைப் போன்ற நாட்டிலோ அல்லது ஆசியாவைப் போன்ற கண்டத்திலோதான் தன்னுடைய ஆத்மீக வளர்ச்சியைக் கொண்டே ஒருவன் அரசியல் ஆதிக்கம் செலுத்தமுடியும். மேலை நாடுகளில் காந்தியைப் போன்ற ஒருவரைக் காணமுடியாது. ஆகவே ஆசிய நாட்டு விவகாரங்களில் மேலை நாட்டார் தலையிடக்கூடாது என்பதை இது நன்கு விளக்குகிறது.

ஜப்பானியமன்னர் ஹிராஹிட்டோ:

பெரும் வருத்தத்தைத் தரும் நிகழ்ச்சி.

அயர்லாந்துப் பிரதமர் டிவேலரா:

தாங்க முடியாத துக்கத்தோடு காந்தி இறந்ததைக் கேள்விப்பட்டேன். அயர்லாந்து தேச அரசாங்கம், மக்கள் ஆகியோருடைய மனப் பூர்வமான அனுதாபத்தைத் தெரியப் படுத்துகிறேன்.

இந்த நஷ்டம் இந்தியாவுக்கு மட்டும் சேர்ந்ததல்ல. உலகம், அரும்பெரும் தலைவரை இழந்துவிட்டது. அவருடைய செல்வாக்கு அவருக்குப் பின் நெடுநாட்கள் இருக்கும.

இந்த நஷ்டத்துக்குப் பிறகும் இந்தியா தைரியம் இழக்காமல் காந்தியின் குறிக்கோள்களை அடைய சலியாமல் உழைக்கும் என்று நம்புகிறோம்.

கானடா பிரதமர் மெக்கின்சி கிங்:

ஹிம்சையைப் போக்க தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணம் செய்தவரின் உயிரைப் பலாத்காரம் முடித்து விட்ட செய்தி பெரிதும் வருத்துகிறது.

தென்னாப்பிரிக்கப் பிரதமர்ஜெனரல் ஸ்மட்ஸ்:

மகாத்மாவின் மறைவால் அகில இந்தியாவுக்கும் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தைச் சரிக்கட்டவே முடியாது. மக்கள் ஒற்றுமைக்காகத் தம் உயிரையே கொடுக்கத் தயாராக இருந்த மகாத்மா, இறுதியில் தாம் சொன்ன படியே செய்து விட்டார். இனியாவது மக்கள் மனத்தில் பகைமை ஒழிந்து சமாதானம் ஏற்படுமாக.

பிரெஞ்சுப் பிரதமர் ஷுமன்:

பிரெஞ்சுச் சட்டசபை மகாத்மாவைக் கௌரவிப்பதன் மூலம், பிரெஞ்சு தேசத்தின் ஒரு நண்பரை, ஒரு தேச பக்தரை, எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சிந்தனையாளரைக் கௌரவிக்கிறது. துவேஷத்தைவிட அன்பு சக்தி வாய்ந்தது என்பதை அவருடைய அனுபவத்தின் உதாரணத்தைக் கொண்டு உலகுக்குக் காட்ட முடியும் என்று நம்புகிறோம்.

எகிப்து அரசர் பரூக்:

கீழை நாடுகள் ஒரு தேசபக்தரை இழந்து விட்டன. உலகமும் மனித சமுதாயமும் ஓர் உத்தமரைப் பறிகொடுத்து விட்டன.

டென்மார்க் பிரதமர் ஹான்ஸ் ஹெபிப்ட்ஸ் :

வயதான காலத்தில், காந்தி சமாதானத்தை நிலை நாட்டப் பாடு படும்பொழுது கொல்லப் பட்டது, மக்கள் உள்ளத்தில் சென்ற யுத்தம் ஹிம்சையைப் பதிய வைத்திருக்கிறது என் பதை விளக்குகிறது.

அபிசீனிய சக்கரவர்த்தி ஹெயிலி செலாஸி :

மனித வர்க்கத்துக்கே ஆத்மீகத் துறையில் தலைவராக விளங்கிய பெரிய மனிதரான காந்தி இறந்ததைக் குறித்து இந்தியா மட்டுமல்லாமல் உலகமே துக்கம் கொண்டாடும்.

பர்மியப் பிரதமர் தக்கின் நூ :

மகாத்மாவின் மறைவு பர்மாவுக்கும் ஒரு பெரிய நஷ்டமே. ஆகவே பர்மாவுக்கும் இன்று துக்க நாளே... இந்தியத் தலைவரும், ஞானியுமான காந்தியின் மறைவினால் ஈடு செய்ய முடியாத நஷ்டத்தை அடைந்திருக்கும் இந்தியாவுக்கு எங்களுடைய இதய பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சிலோன் பிரதமர் சேனநாயகா :

இந்தத் துக்ககரமான சம்பவத்தால் இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் அகில உலகத்துக்கே என்ன நேரப்போகிறது என்று நினைத்துப் பார்க்க முடியாமல் மனம் இடிந்து போய்விட்டேன்.

✲

பாதுகாக்க வேண்டாம்

என்னைப் பாதுகாக்க முயற்சி செய்யாதீர்கள். நம் எல்லோரையும் பாதுகாப்பதற்கு, மேலோன் ஒருவன் எப்போதும் தயாராக இருக்கிறான். என் காலம் முடிவுறும்போது உலகிலேயே மிகக் கீர்த்தி பெற்ற ஒருவர் கூட அவனுக்கும் எனக்கும் இடையே வந்து வழி மறிக்க முடியாது என்பதை நிச்சயமாக உணருங்கள்.

—மகாத்மா காந்தி

எனக்குச் செய்யும் கௌரவம்

என் நண்பர்கள் எனக்குச் செய்யக்கூடிய மிகப் பெரிய கௌரவம் இதுதான்: அதாவது நான் எந்தக் கொள்கைகளை ஆதரிக்கிறேனோ, அவற்றைத் தத்தம் வாழ்க்கையில் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரவேண்டும்; அந்தக் கொள்கையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் தங்கள் பரிபூரண சக்தியையும் உபயோகித்து என்னை எதிர்க்கவேண்டும்.

—மகாத்மா காந்தி

அந்தஸ்து வேண்டாம்

நான் அந்தஸ்தை விரும்புகிறவனல்ல. அது ராஜ தர்பார்களுக்கு வேண்டியதுதான். நான் இந்துக்களுக்கு எப்படி ஊழியனோ அதேபோல முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், பார்ஸிகளுக்கும், யூதர்களுக்கும் ஊழியனாக இருக்கிறேன். ஊழியனுக்கு வேண்டியது அன்பே ஒழிய அந்தஸ்து அல்ல. நான் விஸ்வாசமுள்ள ஊழியனாக இருக்கும் வரையிலும் எனக்கு நிச்சயம் அன்பு கிடைக்கும்.

—மகாத்மா காந்தி

கட்டழகி தவமணி தேவி தன் மேனியை
மிருதுவாகவும் மென்மையாகவும் வைத்திருக்க
லக்ஸ் டாய்லட் சோப்பைத்
தான் நம்புகிருர்

அதிரூபவதியான இந்த சினிமா நட்சத்திரத்தின் அழகு படுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப் தான். சருமத்தை சுத்தம் செய்து மிருதுவாக்கு இச்சோப்பின் வெண்ணிறம் கொண்ட சுகந்த நுரை போல் வேறெதுவுமில்லை என்பது அவருக்குத் தெரியும். மென்மை வாய்ந்த பூரணப்பொலிவுள்ள மேனியை விரும்பும் எல்லோரையும் அவர் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து தவருமல் சுத்தம் செய்துகொள்ளும்படி உபதேசிக்கிருர்.

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!

LTS. 174-50 TM

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

★

சாரதி

கைத்தறி நெசவுகள்

★

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சாக இருந்த சுதந்தர வாரத்தில் 'சுரபி'யின் உள்ளத்தில் பெருக்கெடுத்த உணர்ச்சி வெள்ளத்திலே எழுந்த கவிதை அலைகள்

சக்தி பிறக்குது

என்ற சிறு புத்தகத்தில் வெளிவந்திருக்கிறது
அருமையான பதிப்பு

அணா : ஆறு

தபால் செலவுடன் : அணா ஏழு

சக்தி காரியாலயம்
சென்னை — 14.



சாந்தி! சாந்தி !!



லண்டனில் சட்ட மாணவர் காந்தி
(1890)

தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகத் தலைவர்
(1913)



தென்னாப்பிரிக்காவில் வக்கீல் காந்தி
(1905)

தந்தையும் தனயனும் (1886)

தென்னுப்பிரிக்காவில்
'கூலி வக்கீல்'

காந்திஜியின் தந்தை—கரம்சந்த் உத்தமசந்த் காந்தி



‘பிள்ளைக் கனியமுதே’

வட்டமேஜை மகாநாட்டில் காந்திஜி (1931)

சார்லி சாப்ளினுடன் கந்திஜி



புனல் வெள்ளத்தில் கருணைவெள்ளம் (1934)

லு கலகத்தின் போது : இந்திய
ஆம்புலன்ஸ் படையில் காந்திஜி
(1906)

தவயோகி மகாத்மா



ஜின்னுவும் காந்திஜியும்



பிரிட்டிஷ் தூதுகோஷ்டித் தலைவர் பெதிக் லாரன்ஸுடன் காந்திஜி
(1946)



இசைபாடி வரவேற்கின்றனர் ராணுவத்தார்

நவகாளி நெருப்பை அவிக்க, கல்கத்தாவுக்கு அண்ணல் புறப்படுகிறுர்

புன்னகையே புண் ஆற்றும்

இலது பக்கம் : 1933-ல் உண்ணுவிரதத்தின்போது
நிற்பவர்கள் : டாக்டர்கள் அன்சாரியும், பி. ஸி. ராயும்





சேவாகிராமத்தில் மகாத்மாவின் ஆசிரமம்

சென்னையில் மகாத்மா

ரோமன் ரோலந்தும் மகாத்மாவும்



தந்தையும் வாரிசும்

மாளவியாவுடன் மகாத்மா

வலது பக்கம்: பிர்லா மாளிகையில்-அண்ணலின் புனித உடல்





பிர்லா மாளிகைக்கு வெளியே நின்று, மாடியில் வைக்கப்பட்ட காந்திஜியின் திருவுடலை
மக்கள் தரிசிக்கும் காட்சி

பிர்லா மாளிகையை விட்டு அண்ணலின் கடைசி யாத்திரை



ஊர்வலம் புறப்பட்டு வருகிறது

அண்ணலின் சிதையைச் சூழ்ந்து கவர்னர் ஜெனரலின் தம்பதிகள், மௌலானு ஆஸாத், ராஜகுமாரி அமிர்தகௌரி முதலியோர் அமர்ந்துள்ளனர்



அண்ணலின் சிதை

அண்ணலின் அஸ்தியைச் சேகரிக்கின்றனர்

பேழையில் வைத்து சென்னைக்குக் கொண்டுவரப்பட்ட காந்திஜியின் அஸ்தி

சர்க்கார் விருந்து மாளிகையில் மக்களின் தரிசனத்துக்காக
கண்ணாடிப் பேழையில் அஸ்தி வைக்கப்பட்டிருக்கிறது.

தென்னுப்பிரிக்காவில் அண்ணலும் அன்னையும்

'சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை
எடுமினே அறப்போரினை' என்ருன்,
எங்கோ மேதகம் ஏந்திய காந்தி

—பாரதியார்

இந்தியாவில்—



தமிழகத்தில் முதல் சுற்றுப்பிரயாணம்

கிருஷ்ணதாஸ்

1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 15-ம் தேதி...... முதல் முதலாகத் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டுமென்று மகாத்மா காந்தி அன்று சென்னைநகருக்கு விஜயம் செய்தார்.

காலைநேரம்; சூரியோதயம் ஆகிக்கொண் டிருந்தது. நாங்களும் சென்னை நகருக்கு அருகாமையில் வந்துவிட்டோம். சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் மகாத்மாஜி இறங்கினால், ரயிலிலுள்ள மற்றப்பிரயாணிகள் கூட்டத்தைச் சமாளித்து, தங்கள் ஜாகைகளுக்குப் போவது சிரமமாகிவிடும் என்று, சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு இப்பால் உள்ள பேஸின் பிரிட்ஜ் ஸ்டேஷனில் காந்திஜி இறங்கி வேறொரு பிரத்தியேக வண்டியில் ஏறிக் கொண்டார். மகாத்மாஜியுடன் பீகம் முகம்மது அலி, மௌலானா ஆஸாத் ஸோபானி, பிரபுதாஸ் முதலியவர்கள் பிரத்தியேக வண்டியில் சென்றார்கள். நான், ஹையத், ஜம்னாதாஸ் முதலியவர்களுடன் மெயில் வண்டியிலேயே போய் சென்ட்ரலில் இறங்கினேன். மகாத்மாஜி எங்களுக்கு முன்பாகவே அங்கே இறங்கி ஜாகைக்குப் போய்விட்டார். ஜனக்கூட்டமும் அவரைப் பின் தொடர்ந்து சென்றுவிட்டது.

சென்னையில், ஸான்தோம் பகுதியில், ஸல்லிவன்ஸ் சாலையிலுள்ள ராம்ஜி கல்யாண்ஜி என்னும் ஒரு குஜாரத்தி வியாபாரியின் வீட்டில் காந்திஜி இறங்கியிருந்தார். அங்கே நாங்கள் சென்றோம். மதராஸ் மெயில் என்னும் ஆங்கிலோ—இந்தியப் பத்திரிகையின் வெள்ளை நிருபர் ஒருவருக்குக் காந்திஜி பேட்டியளித்துக்கொண் டிருந்தார். மெயில் நிருபர் சென்றபின் டெயிலி எக்ஸ்பிரஸ் என்னும் சென்னைத் தினசரிப் பத்திரிகையின் நிருபர் வந்தார். மௌலானா முகம்மது அலி கைது செய்யப்பட்ட செய்தி சென்னையில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கிவிட்டது.* நாங்கள் சென்னைக்கு வந்தபிறகு மௌலானா ஷவுகத் அலியும், டாக்டர் கிச்சலுவும் கைது செய்யப்பட்டார்கள் என்ற தகவல் கிடைத்தது. 'இது விஷயமாக மகாத்மா என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்

1921—ம் வருஷம் காந்திஜி முதல் முதலாகத் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த விஷயம் இன்றைய வாலிபத் தலைமுறையினருக்கு விபரமாகத் தெரியாது, வாலிபர்களுக்குப் புதிதாக அறிமுகம் செய்வதைப் போலவும், மற்றவர்களுக்கு ஞாபகப்படுத்துவதைப் போலவும் இக் கட்டுரையை வெளியிட்டிருக்கிறோம். மகாத்மா காந்தியுடன் ஏழு மாதங்கள் என்ற புத்தகத்திலுள்ள ஒரு பகுதியின் சாரம்

* காந்திஜியுடன் மௌலானா முகம்மது அலியும் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்; பிரயாணத்தின் நடுவில், வால்டேரில் 14-9-21-ல் கைது செய்யப்பட்டார்.

—ஆசிரியர், சக்தி



ளாரோ?" என்று ஒவ்வொருவரும் பேசிக்கொண்டார்கள். முகம்மது அலி கைது செய்யப்பட்ட விளக்கமான விபரங்களை ஹிந்து பத்திரிகையின் நிருபர் வந்து ஜம்னாதாஸிடம் கேட்டு எழுதிக் கொண்டு போனார். அப்புறம் இரண்டாவது தடவையாக டெயிலி எக்ஸ்பிரஸ் நிருபர் ஒரு ஆங்கிலச் சித்திரக்காரருடன் வந்தார். சித்திரக்காரர் காந்திஜியைப் போல பல படங்கள் வரைந்து கொண்டு சென்றார். சென்னைப் பத்திரிகைகள் பாராட்டக்கூடிய முறையில் பிரமாதமாக நிர்வகித்து நடத்தப்பட்டு வந்தன. சென்னையோடு ஒப்பிட்டால் வங்காளத்தில் பத்திரிகைத் தொழில் மிக மிகப் பின்னடைந்திருந்தது என்றே சொல்லவேண்டும். சுமார் 50 வருஷங்களுக்கு முன்னால் இருந்த நிலையிலேயே வங்காளத்தில் பத்திரிகைத் தொழில் இருந்து வந்தது.

மகாத்மாஜியைப் பார்ப்பதற்காக, தமிழ் நாட்டுத் தலைவர்

களும் ஆந்திரத் தலைவர்களும் வந்திருந்தார்கள். மலையாளத்தில் மாப்பிள்ளைக் கலகம் நடந்து வந்ததால், அங்கிருந்து தலைவர்கள் வெளியே வரவோ அல்லது வெளி மாகாணங்களிலிருந்து அங்கே செல்லவோ முடியாமலிருந்தது. மகாத்மா அங்கே செல்லக்கூடா தென்று சென்னை சர்க்காரும் அப்போது தடை யுத்தரவு பிறப் பித்து விட்டது. மாப்பிள்ளைக் கலகத்தை மிகவும் கொடிய முறையில் நசுக்குவதற்கு அர சாங்கம் முயற்சி செய்து வருவ தாகவும் கேள்விப்பட்டோம்.

சென்னை மாகாணத்தில் கதர் இயக்கம் திருப்திகரமாக இல்லை. ஆகவே கதர்ப் பிரசாரத்தில் மகாத்மா முக்கியமாகக் கவனம் செலுத்தினர். மகாத்மா செல் லும் இடங்களிலெல்லாம் மக்கள் உற்சாகத்தையும், துடி துடிப்பை யும் காட்டி வந்தாலும் கதர் இயக்கம் வெற்றி பெருமல்தான் இருந்தது. இதே சந்தர்ப்பத்தில் ஆந்திராவில் மேய்ச்சல் தரைக் கென்று ஒரு புதிய வரி விதிக்கப் பட்டது. இதனல் பசுமாடுகளுக் குச் சரியானபடி போஷாக்கு அளிக்க முடியவில்லை. கால்நடை கள் மெலிந்தன. பாலுக்குப் பஞ் சம் ஏற்பட்டது. பொது மக்கள் சத்தியாக்கிரகம் செய்வதற்கு காந்திஜியின் அனுமதியைக் கோரினர்.

இதை அடுத்து மற்ெருரு பிரச்னை: மலையாளத்தில் ஹிந் துக்களை மாப்பிள்ளைமார் பல வந்தமாக முஸ்லிம் மதத்துக்கு மாற்றியதாகப் புகார் வந்தது. காந்திஜி, ஹிந்துக்கள் பொறுமை யுடன் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டு மாப்பிள்ளைமாருக்கு நற்புத்தி புகட்டுவதைத் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டு மென்று யோசனை சொன்னர்.

கடைசியாக பிராமண எதிர்ப்பு இயக்க விஷயத்தில் காந்திஜியின் கவனம் சென்றது. 'பிராமணர் கள் ஒழிக!' என்று மகுடமிடப் பட்டு ஒரு சிறு நோட்டீஸும் வெளியிடப்பட்டிருந்தது. அது காந்திஜியின் கைக்கும் வந்து சேர்ந்தது. இந்த இயக்கம் சம்பந்த மாகப் பிரமுகர்கள் சிலருடன் காந்திஜி விவாதித்தார்.

காந்திஜி சென்னையில் இருந்தபோது ஸ்ரீமதி அன்னி பெஸண்டின் இயக்கத்தாரைத் தவிர்த்து பிற அரசியல் கட்சி யினர் யாவரும் காந்திஜியின் ஆலோசனைகளை நாடி வந்து கொண்டிருந்தனர்.

15-ம் தேதி மாலையில் சென்னை கடற்கரையில் கூடிய பிரம்மாண் டமான கூட்டத்தில் காந்திஜி பேசினர். அப்போது 'ஜே' கோஷங்களோ, அரசாங்கத்தை எதிர்த்து 'ஒழிக' 'வெட்கம், வெட்கம்' போன்ற ஆர்ப்பாட் டங்களோ கூடாது என்று காந் திஜி கூறினர். அலி சகோதரர் கள் கைது சம்பந்தமாகவும் பேசினர். சுயராஜ்யம் பெறும் போராட்டத்திலேயே எல்லோ ரும் கவனம் செலுத்தவேண்டு மென்றும், சுயராஜ்யம் பெறும் விதம் எப்படி என்பதைப் பற்றி யும் காந்திஜி கூறினர். சுயராஜ் யத்துக்கு வழிகாட்டும் மூன்று மார்க்கங்களாக அஹிம்சையை யும், ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை யையும் கதரையும் குறிப்பிட் டார் காந்திஜி. எல்லோரும் அந் நியத் துணிகளை ஒழித்து, கதரையே அணியவேண்டும் என வற்புறுத்தினர். மக்கள் கஷ்டப் படக்கூடிய சகல சந்தர்ப்பங் களிலும் ராட்டைதான் உதவி செய்யவல்லது என்றும், வீடு தோறும் ராட்டை இருக்க

வேண்டுமென்றும் கூறி, 'இந்த ஆண்டு முடிவுக் குள்ளாகவே சுதந்திரம் பெறுவதுதான் நமது லட்சியம்' என்றும் கூறினர். இந் தக் கடற்கரைப் பிரசங்கத்தில் கதரைப்பற்றியே முக்கியமாக வற்புறுத்திப் பேசினர் மகாத்மா.

செப்டம்பர் 17-ம் தேதி சென்னையைவிட்டு ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் மூலம் தெற்கே புறப்பட்டோம். சூரியோதயத்துக்கு முன்பாகவே எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போய்விட்டோம். ஸ்டேஷனில் கூட்டம் அதிகமில்லை. சுமார் 11 மணிக்கெல்லாம் விழுப்புரத்துக்கு வந்துவிட்டோம். ஸ்டேஷனில் ஒரே கூட்டம்; எள் போட்டால் எள் விழாது. கூட்டத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக கூட்டத்தி லிருந்த ஒவ்வொருவரும் பொறுப்பெடுத்துக் கொண்டு, 'உக்காருங்கோ' 'சத்தம் போடாதே, சத்தம் போடாதே' என்று கூச்சலிட ஆரம்பிக்கவே ஒரேகூப்பாடாகப் போய்விட்டது. மகாத்மா ரயிலை விட்டுக் கீழே இறங்கி, திலகர் சுயராஜ்ய நிதிக்காக பணம் வசூல் செய்துகொண்டு வந்தார். தமிழ் மக்களுடைய பேச்சிலும், நடமாட்டத்திலும் ஒரே வேகமும், துடிதுடிப்பும் காணப்பட்டன. எனக்குத் தெரிந்த வரையிலும் பிற மகாணத்தவர்கள் இப்படி இல்லை.

பிற்பகல் $1\frac{1}{2}$ மணிக்குப் பரங்கிப் பேட்டைக்கு வந்து, ஸ்ரீமதி பீட்டர்ஸன் என்னும் டச்சுப் பெண்மணியின் விருந்தினராகத் தங்கினேம். ஸ்ரீமதி பீட்டர்ஸன் இந்தியப் பெண்களைப் போலப் புடவை அணிந்து கால்களில் செருப்பில்லாமல் காணப்பட்டார். அத்துடன் அவர் தமிழில் பேசவும் கற்றுக்கொண் டிருந்தார். அவருடைய வீட்டில் ஏராளமாக ராட்டைகள் இருந்தன. ராட்டையில் நூற்கும் விதத்தை இந்தியப் பெண்களுக்கு அவர் கற்பித்துக்கொண் டிருந்தார். அவர் கட்டியிருந்த பாடசாலையை மகாத்மாஜியே திறந்து வைக்கவேண்டும் என்று அவர் விரும்பினர். அவருடன் அந்தச் சமயத்தில் மற்றும் இரு ஐரோப்பியப் பெண்கள் இருந்தனர். அவர்கள் ஐரோப்பிய முறைப்படியே உடை தரித்திருந்தனர்.

ஸ்ரீமதி பீட்டர்ஸனின் பாடசாலையைத் திறந்து வைத்துவிட்டு, அங்கிருந்து சுமார் இருபது மைல் தூரத்திலுள்ள கடலூருக்குக் கார் மூலமாகக் காந்திஜி போகவேண்டியிருந்தது. கடலூரில் ஒரு பிரசங்கம். அவகாசம் மிகவும் குறைவாக இருந்ததால் விரைவில் கடலூருக்குப் புறப்பட முயற்சி செய்துகொண் டிருந்தார். ஆனல் கிறிஸ்தவ மதத்தினரான சில பிரமுகர்களும் சில பெண்மணிகளும் காந்திஜியுடன் மதசம்பந்தமாகப் பேசிக்கொண் டிருந்தனர். காந்திஜி அவர்களிடத்தில், தாம் தென்னப்பிரிக்காவில் கிறிஸ்தவர்களிடையே அதிகமாகப் பழகியதாகவும், ஒரு சமயம் தாம் கிறிஸ்தவராக மாறக்கூடிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது என்றும், ஆனல் கடவுளின் சித்தம் வேறு விதமாக இருந்தது என்றும் குறிப்பிட்டார். அப்போது ஒரு கிறிஸ்தவப் பெண்மணி, இப்போதும் கூட காந்திஜி கிறிஸ்தவராக மாறி விடுவார் என்று தாங்களெல்லாம் நம்பிக்கொண் டிருப்பதாகக் கூறினர். கிறிஸ்துதான்

சாந்திக்கு அரசன்என்றும், மற்ற எவராலும் சாந்தியை அளிக்க முடியாதென்றும், கிறிஸ்தவ மதத்தில் சேராத எவரும் ரக்ஷிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர்கள் கூறவே, காந்திஜி, ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் தங்கள் மதத்தைப் பெருமைப்படுத்தி இவ்வாறே பேசுவதாகக் குறிப்பிட்டார். அத்துடன், ஆராய்ந்து பார்த்தால் எல்லா மதங்களின் நோக்கமும், மனிதனைப் பரிசுத்தவானுக்குவது தான் என்ற உண்மை தெரிய வரும் என்றும், இந்து மதத்தை சாஸ்திரீகமாக உயர்ந்த மதமாகத் தாம் கருதுவதால் தாம் இந்து மதத்தைத் தழுவியிருப்பதாகவும் கூறினர் காந்திஜி.

ஸ்ரீமதி பீட்டர்ஸன் பாடசாலைக்குப் போய்விட்டு காந்திஜி கடலூருக்குப் போனர். நான், பிரபுதாஸ், அன்வார் உத்தீன் ஆகியோருடன் பரங்கிப்பேட்டையிலேயே தங்கிவிட்டேன்.

காந்திஜி இரவு ஒரு மணிக்குக் கடலூரிலிருந்து திரும்பி வந்தார். மறுநாள் காலையில் 6 மணிக்குக் கும்பகோணத்துக்குப் புறப்பட்டோம். ஒரு பார்ஸல் வண்டியில் எங்களுக்காக ஒரு தனிப் பெட்டியை இணைத்தார்கள். அதன் மூலம் 11 மணிக்கெல்லாம் கும்பகோணம் போய்ச் சேர்ந்தோம். அன்றே 5 மணிக்கு கும்பகோணத்திலிருந்து புறப்பட்டுவிடவேண்டும் என்று திட்டம் செய்திருந்தோம். பிற்பகல் 2 மணிவரையிலும் மகாத்மா மௌன விரதம் பூண்டார். பிறகு நெசவாளர்கள் கூட்டத்தில் பேசுவதற்காகப்போனர். அங்கே கதரைப் பற்றிப் பேசிவிட்டு, பொதுக் கூட்டத்துக்கு வந்தார். கூட்டத்தில் ஒரே குழப்பமும் கூச்சலுமாக இருந்தது. எவ்வளவோ முயன்று பார்த்தும் கூட்டத்தில அமைதியை ஏற்படுத்த முடியவில்லை. ஒவ்வொருவரும் 'சத்தம் போடாதே சத்தம் போடாதே' என்று இரைந்து, கூச்சலை அதிகப்படுத்தியதுதான் கண்டபலன். மகாத்மா பேச ஆரம்பித்தாலும் தொடர்ந்து பேச முடியாமல் போய்விட்டது. ஆகவே கூட்டத்திலிருந்து வெளியேறி 5 மணி வண்டிக்காக மகாத்மாஜி புறப்பட்டுவிட்டார்.

செப்டம்பர் 18-ம் தேதியன்று கும்பகோணத்தை விட்டுப் புறப்பட்டோம். அன்று இரவு, 8 மணிக்குத் திருச்சினப்பள்ளிக்கு வந்து சேர்ந்தோம். அன்று ஞாயிற்றுக் கிழமையானதால் சூரியாஸ்தமானத்துக்குப் பிறகு 7 மணிக்கெல்லாம் மகாத்மா மௌன விரதத்தை ஆரம்பித்து விடவேண்டும். ஆனல் 7 மணி கழிந்து சிறிது நேரத்துக்குப் பிறகுதான் மகாத்மா மௌன விரதத்தைத் தொடங்கினர்.

திருச்சினப்பள்ளி ஸ்டேஷனில் பெருங்கூட்டம். ஆனல் கூட்டம் அமைதியாக இருந்தது. காந்திஜி அமைதியோடு ஜாகைக்குப் போக முடிந்தது. திருச்சியில் மாகாணக் காங்கிரஸ் காரியதரிசி டாக்டர் ராஜனுடைய விருந்தினர்களாகத் தங்கினேம். டாக்டர் ராஜனுடைய வீடு அமைதியாகவும், வசதிகளோடும் இருந்தது.

மறுநாள் திங்கட்கிழமை. ஆகவே அனுவசியமாக யாரும் காந்திஜியை வந்து பார்ப்பதற்கு இடமில்லாமல் செய்துவிட்டோம். பிரபுதாஸ் காந்திஜியின் கால்களை அமுக்கிவிட்டார். மத்தியானத்தில் நான் காந்திஜியின்

கால்களில் எண்ணெய் தேய்த்து, கால்களைப் பிடித்துவிட்டேன். நான் காந்திஜியை அப்போது தான் முதல் முதலில் தொட்டேன். சிறிதுநேரத்தில் காந்திஜி உறங்கிவிட்டார்.

இந்தச் சமயத்தில், இந்தியத் துருப்புகளிடத்தில் அதிருப்தியைப் பரவச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு அலி சகோதரர்கள் விசாரணைக்காகக் காராச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளியாயிற்று.

மறுநாள் காந்திஜி செட்டிநாட்டுக்குக் கார் மூலமாகச் செல்ல வேண்டும். ஆனால் செட்டி நாட்டுக்குச் செல்லும் சாலை, புதுக்கோட்டை சமஸ்தானத்தின் வழியாகச் செல்லுவதால், புதுக்கோட்டை தர்பார் தன் சமஸ்தானத்தில் காந்திஜி பிரவேசிக்க கூடாது என்று தடை விதித்து விட்டது. காந்திஜியும் புதுக்கோட்டை வழியே வரப் போவதில்லை என்று தர்பாருக்கு அறிவித்துவிட்டார்.

இரவில் பொதுக் கூட்டம். திருச்சி நகரத்தார் தெருவெங்கும் அலங்காரம் செய்து காந்திஜிக்கு பிரமாதமாக வரவேற்பளித்தனர். கூட்டத்தின் ஒழுங்கையும் அமைதியையும் கண்டு காந்திஜி மிகவும் சந்தோஷம் அடைந்தார். காந்திஜி பொதுக் கூட்டத்தில் பேசும்போது அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்ட விஷயத்தைக் குறிப்பிட்டார். பம்பாய் சர்க்கார் அது சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையில், காராச்சி கிலாபத் மகாநாட்டில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தைக் காட்டி அதன் அடிப்படையில் அலி சகோதரர்களைக் கைது செய்திருப்பதாகத் தெரிவித்திருந்தது. காராச்சி தீர்மானம், முஸ்லிம்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் ராணுவ சேவை செய்வது பாவகரமான காரியம் என்று கூறியது. தாம் காராச்சியில் இருந்திருந்தால் தாமும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்திருப்பார் என்றும், அரசாங்கம் தமக்குச் சுதந்திரம் அளித்தால், ஒவ்வொரு அரசாங்க ஊழியனையும், ராணுவ ஊழியனையும தத்தம் உத்தியோகங்களை உதறிவிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருப்பார் என்றும் கூறினார் காந்திஜி. பிறகு கதரின் அவசியத்தைப் பற்றிப் பேசினார்.

மறுநாள் காலையில் (செப்டம்பர் 20) மகாத்மா ஸ்ரீரங்கத்துக்குப் புறப்பட்டார். அங்கே நகர சபையினரால் வரவேற்பு அளிக்கப்பட்டது. பிறகு பொது மக்கள் சார்பில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு பனை ஓலையில் அச்சடிக்கப்பட்ட ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. அப்போது காந்திஜி தமிழிலோ, இந்தியிலோ அந்தப் பத்திரத்தை எழுதியிருக்க வேண்டுமென்று கூறினார். பிரசங்கம் முடிந்ததும் திருச்சிக்கு 10 மணிக்குத் திரும்பினோம்.

21-ம் தேதி காலையில் திருச்சிராப்பள்ளியை விட்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டோம். 11 மணிக்குத் திண்டுக்கல்லுக்கு வந்து விட்டோம். அநேகமாக அந்த நகரத்திலுள்ள எல்லோருமே மகாத்மாஜியை வரவேற்பதற்காக ஸ்டேஷனுக்கு வந்து விட்டார்கள். அங்கே இறங்கி எங்கள் ஜாகைக்குப் போய்ச் சேர்ந்தோம். மாலை 4 மணிக்கு நாங்கள் மதுரைக்குப் புறப்பட்டு விடவேண்டும். அதற்குள்ளாக முனிசிபாலிடியினரால் வர

வேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப் பட்டது. பிறகு பொதுக் கூட்டத்துக்கு மகாத்மா புறப் பட்டார். திண்டுக்கல்-லில் நடந்த கூட்டமும் கும்பகோணம் கூட்டம்போல ஒரே இரைச்சலும் சந்தடியுமாக இருந்தது. இரைச்சலின் நடுவே மகாத்மா ஏதோ கொஞ்சம் பேசினர். எல்லோரும் காந்திஜியின் பேச்சைக் கவனியாது, அவரைப் பார்ப்பதிலேயே ஆர்வம் காட்டினர். பிறகு மௌலானு ஆஸாத் ஸோபானி பேச எழுந்தார். நான் ஒரு தொண்டருடன் ஸ்டேஷனுக்குப் போய்விட்டேன். மகாத்மாஜியும் சிறிது நேரத்தில் அங்கு வந்துவிட்டார்.

ரயிலில் எதையோ எழுதி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரிடம் காந்திஜி கொடுத்தார். வழி நெடுக ஸ்டேஷன்கள் தோறும் கூட்டம்தான். மதுரை வந்து சேர்ந்தோம். ஸ்டேஷனில் இறங்கியதும் காந்திஜி நேராகப் பொதுக்கூட்டத்திற்கே போனர். மதுரைக் கூட்டம் மிகவும் பிரம்மாண்டமான கூட்டம். கூட்டம் ஒழுங்காக நடைபெறவில்லை. காந்திஜி பிரசங்கம் செய்யாமலேயே திரும்பிவிட்டார்.

செப்டம்பர் மாதம் முடியப் போகும் சந்தர்ப்பம். இன்னும் கதர் விஷயத்தில் மக்கள் பரிபூரணமாகக் கவனம் செலுத்தாததைக் கண்டு மகாத்மா மிகவும் வருந்தினர். மக்கள் கட்டுப்பாடுடன் நடந்து கொள்ளாவிட்டால் பொதுஜன சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பது முடியாத காரியம் என்றும், கதர்த் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதன் மூலம் பொதுஜனங்களுக்கு ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கற்பிக்க முடியும் என்றும் கருதினர் காந்திஜி. இந்த நிலையில் கதரை மக்கள் பொருட்படுத்தாததற்காக காந்திஜி தமக்குத்தாமே ஒரு தண்டனையை விதித்துக்கொண்டார். இது சம்பந்தமாகத் திண்டுக்கல்லில் ரயிலிலேயே ஒரு அறிக்கை தயாரித்திருந்தார் காந்திஜி. அதில், இனி ஒரு மாதத்துக்குத தாம் முழு வேஷ்டியையோ மேல் உடுபையோ, குல்லாயையோ அணியாமல், அரையில் ஒரு துணியைமட்டும் சுற்றிக்கொண்டு, உடம்பில் மற்றொரு துணியைப் போர்த்திக் கொள்ளப் போவதாகத் தெரிவித்திருந்தார். அதே அறிக்கையில், ஏழைகளாக உள்ளவர்களெல்லாம் கதரை வாங்கி அணிய வேண்டுமென்றும், தம்மைப் போல் குறைந்தபக்ஷ உடையை, பக்கிரி உடையைப் பூணவேண்டுமென்றும், காங்கிரஸ் தொண்டர்கள் யாவரும் தங்களுடைய மற்றக் காரியங்களை யெல்லாம் ஒத்தி வைத்து விட்டு ஒரு மாத காலத்துக்குக் கதர்த் திட்டத்தை நிறைவேற்றுவதிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

மதுரையில் தங்கியிருந்த போது, இரவில் மகாத்மாஜியைப் பார்ப்பதற்கு அநேகர் வந்திருந்தார்கள். சில ஹிந்துப் பெண்கள் வந்து, மகாத்மாஜியைப் பாராட்டி சில சமஸ்கிருதப் பாடல்களைப் பாடினர்கள். இரவு 10 மணிக்கு மகாத்மாஜிக்குத் தலை க்ஷவரம் செய்வதற்கு ஒரு நாவிதரை வரவழைத் திருந்தோம். அவர் வந்து மகாத்மாஜியின் பாத தூளியை எடுத்துக் கொண்டு, க்ஷவரம் செய்து விட்டார். க்ஷவரம் செய்ததற்குக் கூலியாக எங்களிடம் பணம் வாங்கிக் கொள்ளவும் அவர் அடியோடு மறுத்துவிட்டார்.

மாத்மாஜி இந்தப் புது மாதிரி உடை யணிந்து, முக வாட்டத்துடன் இருப்பதைக் கண்டு அவர் சந்நியாசியாக மாறிவிட்டார்என வும் பலர் கருதினர்.

மகாத்மாஜி மறு நாள் காரைக் குடிக்குப் புறப்பட்டார். இந்தப் பக்கிரி உடையில் போக வேண்டாம் என்று ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும், டாக்டர் ராஜனும் எவ்வளவோ தடுத்துப் பார்த்தார்கள். ஆனால் அதற்கு மகாத்மா சம்மதிக்கவே இல்லை. சந்நியாசியாக வேண்டும் என்ற உத்தேசம் எதுவும் தமக்குக் கிடையாதென்றும், தாம் அணிந்துள்ள இந்தப் புதுமாதிரி உடை; திறந்த மார்புடன் திரியும் சென்னைவாசிகளுக்கு அதிசயமாகத் தோன்றக் காரணமில்லையென்றும் மகாத்மா கூறினர். தவிரவும் சென்னை மாகாணவாசிகள் கதரில் அக்கரை காட்டாததற்குத் தாம் மிகவும் மனம் வருந்துவதால், இந்தப் புது மாதிரி உடை தம் மன வருத்தத்தைக் காட்டக் கூடியதாக இருக்கிறது என்றும் கூறினர். மகாத்மாஜி மிகவும் தீர ஆலோசித்தே இந்த முடிவுக்கு வந்திருப்பதால், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரிடம் "உங்களுக்கு நான் கூறும் சமாதானம் ஏற்படாமல் இருக்கலாம். ஆனால் நான் கொண்ட முடிவு முற்றிலும் சரியானது என்று நான் தெளிவாக உணருகிறேன்" என்று கூறினர்.

காலையில் மகாத்மாஜி, பிரபுதாஸை அழைத்துக் கொண்டு, பக்கிரி உடையிலேயே காரைக்குடிக்குப் போய்விட்டார்.

மறுநாள் (செப்டம்பர் 23-ம் தேதி) மத்தியானம் 12 மணிக்கு நாங்கள் மதுரையை விட்டுத் திருநெல்வேலிக்குப் புறப்பட்டோம். மகாத்மா காரைக்குடியிலிருந்து திரும்பி நேராக மதுரை ஸ்டேஷனுக்கே வந்திருந்தார்.

மாலை நேரம். திருநெல்வேலிக்கு முந்தியிருக்கும் ஒரு ஸ்டேஷனில் திருநெல்வேலியிலிருந்து சில தலைவர்கள் வந்து மகாத்மாஜியை எதிர்கொண்டழைத்தார்கள். அங்கிருந்தே திருநெல்வேலிக்கு மகாத்மாஜியைக் காரில் அழைத்துச் சென்றார்கள். மகாத்மாவின் வருகையின் காரணமாக திருநெல்வேலிக்கு வெளியூர் ஜனங்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். திருநெல்வேலியில் பொதுக் கூட்டம் மிகவும் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்ததைக் கண்டு மகாத்மாஜி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அதைப் பாராட்டி வெளிப்படையாகவே மகாத்மாஜி தம் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். மக்கள் மிகவும் அமைதியாகவும், ஒழுங்காகவும் நடந்து கொண்டால்தான் தம்மால் இயக்கத்தை ஆரம்பிக்க இயலும் என்றும் கூறினர். அஹிம்சை, சுதேசித் துணி, ராட்டை முதலிய விஷயங்களை வற்புறுத்திக் கூறினர். கூட்டம் இரவு 10 மணிக்கு முடிந்தது.

மகாத்மா தம் உடையை மதுரையில் மாற்றிக் கொண்டதைக் கண்டு மௌலானா ஆஸாத் ஸோபானி திருநெல்வேலிக்கு வந்ததும் தம்முடைய உடையையும் இஸ்லாம் மதம் அனுமதிக்கும் அளவுக்கு மிகவும் குறைத்துக் கொண்டு பக்கிரியைப் போலவே காணப்பட்டார். அவர் அந்நியத் துணிகளை யெல்லாம் எல்லாரும் களைந்தெறிய வேண்டும் என்று கூறியதும், அநேகர் தம் சட்டைகளையும் கோட்டுகளையும் கழற்றி ஓரிடத்தில் கொண்டு வந்து குவியலாகக் குவித்தார்

கள். இது எங்களுக்கு அதிசயமாக இருந்தது.

திருவாங்கூரிலிருந்து மகாத்மாஜியைக் காண ஒரு ஹரிஜனத் தலைவர் வந்திருந்தார். அவருடன் மகாத்மாஜி தீண்டாமை சம்பந்தமான பல விஷயங்களை விவாதித்துக்கொண்டிருந்தார். ஹரிஜனத் தலைவர், தீண்டாமையை ஒழிப்பதுடன் பலாத்காரமாக ஆலயப் பிரவேசம் செய்வதும், கட்டாயமான முறையில் சமபந்தி போஜனம் பண்ணுவதும் கலப்பு விவாகம் செய்வதும் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனல் இந்த விஷயங்களில் பலாத்காரத்தையும் வலுக் கட்டாயத்தையும் மகாத்மாஜி ஆதரிக்கவில்லையாதலால், அந்த ஹரிஜனத் தலைவர்எதுவும் பேச முடியாமல் திரும்பினர்.

காலையில் 9 மணிக்கு ரயில் திருநெல்வேலியை விட்டுப் புறப்படுகிறது. ஆகவே அவசர அவசரமாக மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு ரயிலுக்குப் போனேம்.

வண்டி 3 மணிக்கு மதுரை வந்து சேர்ந்தது. அங்கே வண்டி மாற்றி மெயில் வண்டியில் ஏறிக் கொண்டோம். திருச்சினப்பள்ளிக்கு இரவு 8 மணிக்கு வண்டி வந்து சேர்ந்தது. அங்கேயும் வண்டி மாற்றினேம். ஈரோட்டுக்கு காலை 3½ மணிக்கு வந்து சேர்ந்தோம். ஈரோடு, கோயமுத்தூர், சேலம் முதலிய இடங்களைப் பார்ப்பதுடன் மகாத்மாஜியின் தமிழ் நாட்டுப் பிரயாணம் முடிவடைகிறது.

ஈரோடு ஸ்டேஷனில் மக்கள் திரளாகக் கூடி வரவேற்றனர். மகாத்மாவை எதிர்பார்த்து இரவெல்லாம் மக்கள் ஸ்டேஷனில் காத்திருந்திருக்கிருர்கள்.

> **தைரியவான் யார்?**
>
> "யாரைத் தைரியவான் என்றும், சக்தி வாய்ந்தவன் என்றும் நீங்கள் கருதுகிறீர்கள்?" என்று தீர்க்கதரிசியான நபிகள் நாயகம் கேட்டார்.
>
> "மக்களைச் சாய்த்து வெற்றி கொண்டவன்தான்" என்ருர்கள் அவருடைய சீடர்கள்.
>
> "இல்லை. கோபம் வந்தபோது தன்னைக் கட்டுப்படுத்தி அடக்குகிறவன்தான் தைரியவான்" என்ருர் நபிகள் நாயகம்.

மகாத்மாஜிக்கு ஓய்வு வேண்டியிருந்ததால், மகாத்மாஜி வந்த (ரயில்) பெட்டியிலேயே படுக்கைக்கு வசதி செய்யப்பட்டிருந்தது. அந்தப் பெட்டியைக் கழற்றி ஈரோடு ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே நிறுத்தி விட்டார்கள். மகாத்மாவுடன் பிரபு தாஸும் ஜம்னு தாஸும் இருந்தனர். நான் மற்றவர்களுடன் ஈரோட்டில், பிரமுகரான ஸ்ரீ ராமசாமி நாயக்கரின் வீட்டில் வந்து தங்கினேம். காலையில் மகாத்மா அங்கே வந்து சேர்ந்தார். ஈரோட்டில் டாக்டர் பிரபுல்ல சந்திர ரேக்கும், ஒரு பிரபல காங்கிரஸ் தலைவருக்கும் இரண்டு கடிதங்கள் எழுதி தபாலில் சேர்த்தார் காந்திஜி.

ஈரோட்டில், ஓர் ஓடையின் பக்கத்தில் பெரிய ஆலமரம் ஒன்றின் அடியில் பொதுக் கூட்டம் நடந்தது. மகாத்மா தமக்கு மக்களால் அளிக்கப்பட்ட வெள்ளிப் பேழையையும் மற்ற சாமான்களையும் ஏலம் போட்டு, அந்தப் பணத்தைத் திலகர் சுயராஜ்ய நிதியில் சேர்த்துவிட்டார். கதரைப் பற்றியும், தீண்டாமை, இந்து - முஸ்லிம் ஒற்றுமை,

அஹிம்சை முதலியவற்றைப் பற்றியுமே மகாத்மாஜி முக்கியமாகப் பேசினர். ஈரோட்டை விட்டுப் பிற்பகல் 2 மணிக்குக் கோயமுத்தூருக்குப் புறப்பட்டோம்.

கோயமுத்தூர் வருவதற்கு இரண்டு ஸ்டேஷன்களுக்கு முன்னடியே மகாத்மாஜி இறங்கி கார்மூலமாக கோயமுத்தூருக்குப் போனர். போகிற வழியில் கிராமத்து மக்கள் வந்து மகாத்மாஜியைத் தரிசித்தனர்.

கோயமுத்தூரில் எங்கள் ஜாகையை நோக்கி கார் சென்று கொண்டிருந்தபோது, வழியை மறித்துக்கொண்டு ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. முனிஸிபாலிடியினர் வரவேற்பளிக்க அங்கே காத்திருந்தார்கள். மகாத்மாஜி காரை விட்டு இறங்கி மேடைக்குச் செல்ல வழியே இல்லை. ஆஜானுபாகுவான ஒருவர் வந்து மகாத்மாஜியைத் தம் முதுகில் வைத்து மேடைக்கு எடுத்துச் செல்லுவதாக கூறினர். ஆனல் மகாத்மாஜியோ 'நானே கூட்டத்தில் இறங்கிச் செல்லுகிறேன்' என்று கூறிவிட்டு இறங்கினர். கூட்டம் வழி விலகிக் கொடுத்தது; மேடைக்குப் போய் அமர்ந்து விட்டார்.

முனிசிபாலிடியினரின் வரவேற்புப் பத்திரத்தில் மகாத்மாஜியின் தியாகத்தைப் பாராட்டியிருந்ததுடன் பள்ளிக்கூடங்களையும், காலேஜுகளையும், கோர்ட்டுகளையும் பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்று மகாத்மா கூறியிருப்பதை வன்மையாகக் கண்டித்தும் இருந்தார்கள். மனதில் நினைத்ததை ஒளிவு மறைவில்லாமல் இப்படி நேர்மையாகத் தெரிவித்ததற்காக மகாத்மாஜி முனிசிபாலிடியினரை மிகவும் பாராட்டினர். அதற்குப் பதில் கூறும்போது தேசத்தின் நலனுக்காக மேற் கூறியவற்றைப் பகிஷ்கரிக்கத்தான் வேண்டும் என்றும், அவற்றைப் பகிஷ்கரிக்கும் வரையில் சுயராஜ்யம் அடைவதென்பது வெறும் கனவாகத்தான் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

பிறகு எங்கள் ஜாகைக்குப் போனேம். அங்கே தொழிலாளர்கள் வந்து கூடியிருந்தார்கள். அந்தக் கூட்டம் மிகவும் அமைதியாகவும் அழகாகவும் கூடியிருந்தது. அங்கு சிறிது தாமதித்து விட்டு மகாத்மாஜி பொதுக் கூட்டத்திற்குப் புறப்பட்டார். நான் மிகவும் களைத்துப் போயிருந்ததால் கூட்டத்துக்குப் போகவில்லை.

மறு நாள் (செப்டம்பர் 26-ம் தேதி) திங்கட்கிழமை; மகாத்மா மௌன விரதம் பூணும் நாள். ஆகவே அவர் ஓய்வு எடுத்துக் கொண்டார். மௌன விரதம் கொள்ளும் திங்கட்கிழமைதான் நூற்பதற்கு மிகவும் வசதியான நாள் என்று மகாத்மாஜி கூறுவார். அன்று முற்பகலில் ஒரு அரைமணி நேரம் நூற்கத் தவறி விட்டால் மகாத்மாஜி மத்தியானச் சாப்பாடு சாப்பிட மாட்டார். ஆனல் ரயிலில் பிரயாணம் செய்யும் போதுமட்டும் இந்தக் கட்டுப்பாட்டுக்கு விதிவிலக்கு உண்டு.

26-ம் தேதி இரவு எட்டு மணிக்குக்கோயமுத்தூரைவிட்டு சேலத்துக்குப் புறப்பட்டோம். நாங்கள் சேலம் ஸ்டேஷனை அடைந்த போது இரவு $1\frac{1}{2}$ மணி. ஆனல் நாங்கள் 3 மணிக்குத்தான் எங்கள் ஜாகைக்குப் போய்ச்சேர முடிந்தது. காலையில் மகாத்மாஜி பொதுக் கூட்டத்துக்

குப்போய்விட்டார். எங்களுக்கு வீட்டிலேயே கொஞ்சம் வேலை இருந்தது. சேலத்தில் நிறைய வேலைகள் இருந்தமையால் மகாத்மாஜியால் மாஜி காங்கிரஸ் தலைவராகிய ஸ்ரீவிஜயராகவாச்சாரியாரைப் போய்ப்பார்க்க அவகாசம் இல்லாமல் போய்விட்டது.

சேலத்தில் முனிஸிபாலிடியினர் தங்கள் வரவேற்புப் பத்திரத்தை சந்தனக் கட்டையினால் செய்யப்பட்ட ஒரு பேழையில் வைத்துத் தந்தனர். இது சென்னைக் கவர்னர் வெல்லிங்டனுக்காக செய்யப்பட்டதென்றும், ஆனால், காந்திஜிக்கு அதை அளிப்பதே முறை என்று கருதிக் கொடுத்ததாகவும் ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் எங்களிடம் கூறினார்.

மாலைப் பொழுது கழிந்ததும் சேலத்தை விட்டுப் புறப்பட்டோம். ஸ்தலத்திலுள்ள தலைவர்களில் ஒருவராகிய டாக்டர் வரதராஜுலு நாயுடு தம் மனைவி மக்களுடன் மகாத்மாஜியைத் தரிசிக்க வந்தார். அவருடைய மகள் தன் கைகளில் தங்க வளையல்களைப் போட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டதும் காந்திஜி வேடிக்கையாக, அதைத் திலகர் சுயாராஜ்ய நிதிக்குக் கொடுத்தால் என்ன, என்று கேட்டார். மகாத்மாஜி கேட்டதைத் தமிழில் மொழி பெயர்த்துத் தம் மகளிடம் டாக்டர் வரதராஜுலு நாயுடு கூறியதும், அந்தப் பெண் கொஞ்சம்கூடத் தயங்காமல் கைவளையல்களைக் கழற்றி மகாத்மாஜியின் கையில் கொடுத்து விட்டாள். மகாத்மாஜியோ தாம் விளையாட்டுக்காகத் தான் கேட்டதாக மாறி மாறிக் கூறினார். ஆனாலும், ஏழு அல்லது எட்டு வயதே நிரம்பிய அந்தச் சிறுமி, தான் கொடுத்த வளையல்களைத் திரும்ப வாங்க மறுத்து விட்டாள்.

சுற்று வட்டாரங்களிலிருந்து தேசியத் தொண்டர்கள் மகாத்மாவைக் காண்பதற்காகச் சேலத்துக்கு வந்திருந்தார்கள். அவர்களிடம் காந்திஜி, கூட்டங்கள் கூட்டிப் பேசிக்கொண்டிருந்த காலம் மலையேறி விட்டதென்றும், இப்போது காரியாம்சமே பிரதானம் என்றும், நன்கு உழைத்து வேலை செய்யக்கூடிய தொண்டர்களே இப்போது தேவை என்றும், அவசியம் நேர்ந்தால் மனதில் யாதொரு வருத்தமும் கொள்ளாமல் தூக்கு மேடை ஏறுவதற்குக் கூடத் தொண்டர்கள் தயாராக இருக்க வேண்டுமென்றும் கூறினார். மற்றொரு தேசியத் தொண்டரிடம், தாம் குஜராத்திலிருந்தே தகுந்த சந்தர்ப்பத்தில் பொது ஜன சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாக மகாத்மாஜி கூறினார்.

27-ம் தேதி இரவு தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு, சேலத்தை விட்டு ஆந்திர ஜில்லாக்களை நோக்கிப் புறப்பட்டோம்.

சேவையிலே மரணம்

இந்தியாவுக்கும் மனிதவர்க்கத்துக்கும் ஊழியன் என்று நான் என்னை உரிமை பாராட்டிக் கொள்ளுகிறேன். என் சேவையிலேயே சாவதற்குத்தான் நான்விரும்புவேன்.

—மகாத்மா காந்தி

அவளுடைய பொக்கிஷம்

சூதக வியாதியினின்று விடுதலையளித்து, புத்திர பாக்கியத்திற்கு உதவிய அருண டானிக்கை தன் அருமைக் குழந்தையைப் போல் பொக்கிஷமாகவும், வரப்ரசாதமாகவும் கருதுகிறாள்.

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

அருண

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

வெளியாகிவிட்டது!

ஆங்கிலம் - தமிழ் அகராதி

ENGLISH - ENGLISH & TAMIL

DICTIONARY

தொகுத்தவர்:

தி. நா. சுப்பிரமணியன்

500க்கு மேற்பட்ட பக்கங்கள். வெள்ளைக் காகிதம்.
கலிகோ பைண்டு. அருமையான பதிப்பு.

ரூபாய் ஐந்து

தபால் செலவுடன் ரூ. 5-8

வியாபாரிகளுக்கு 15% கமிஷன்

சக்தி காரியாலயம்

சென்னை - 14

சுயராஜ்யத்தில்

88871

மகாத்மா காந்தி

உணவுக்கும் உடைக்கும் ஒருவருமே திண்டாடாதபடி, பொருளாதார அமைப்பை இந்தியாவிற்கு மட்டுமன்றி உலகம் முழுதுமே மாற்றியமைக்க வேண்டுமென்பது என் அபிப்பிராயம். வேறு வழியாகப் பார்த்தால், இந்த இரண்டு இலட்சியங்களும் கைகூடிவரும் வகையில் ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு வேலை இருக்க வேண்டும். அடிப்படை வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்து தரும் சாதனங்கள் பொதுஜன ஆதிக்கத்தின் கீழ் இருந்தால்தான் இது சாத்தியமாகும். சிருஷ்டியில் காற்றும் தண்ணீரும்கிடைப்பதைப்போல், இந்தப் பொருள்களும் எளிதாகவும் தாராளமாகவும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது, கிடைப்பதற்கு ஏற்ற வழிகளைச் செய்யவேண்டும். மற்றவர்களைச் சுரண்டுவதற்காக, அடிப்படைத் தேவையான பொருள்களை வியாபாரச் சரக்காகச் செய்து விற்றல் கூடாது. ஒரு கூட்டத்தினரையோ, தேசத்தினரையோ, அல்லத் சமுதாயத்தையோ தனியுரிமைப்படுத்தி ஆளுவது அநீதியாகும். இந்த எளிய தத்துவத்தைக் கைவிட்டதன் காரணமாகவே, துரதிர்ஷ்டம் பிடித்த இந்த நாட்டிலும் உலகிலுள்ள வேறு பல நாடுகளிலும் வறுமைபிடுங்கித் தின்பதைக் கண் கூடாகக் காண்கிறோம். இந்தத் தீமையைப் போக்கும் பொருட்டே, கதர் இயக்கம் தோன்றி இருக்கிறது. நான் குறிப்பிட்டுக் காட்டிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஏற்பட்ட பின்னரும், சேவிங்ஸ் பாங்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளும் இருக்கும். ஆனால், அவற்றின் அமைப்பில் அடிப்படையான மாற்றங்கள் உண்டாகலாம். இந்தியாவில் உள்ள சேவிங்ஸ் பாங்குகள் பயன்தரத் தக்கனவாய் இருந்தபோதிலும், மிகவும் ஏழைகளாய் இருப்பவர்களுக்கு இன்று அவை பயன்படுவனவாயில்லை. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் ஏழைகளுக்கு எந்த விதத்தி

சுயராஜ்யம் வந்தபின் தேசத்தில் சில விஷயங்கள் என்னென்ன மாறுதல்களை அடைய வேண்டும் என்பதைக் காந்திஜி இந்தச் சிறு கட்டுரையில் அழகாகக் கூறியிருக்கிறார். புதுமைப் பதிப்பகத்தாரின் மாணவருக்கு என்னும் நூலிலிருந்து,

லும் உபயோகமாய் இல்லை. இலட்சிய முறையில் திருத்தி யமைக்கப்படும புதிய அமைப்பில் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் நிலைமை யாதா யிருக்கு மென் பதை, மேலே சொன்னதைவிட விளக்கமாகச் சொல்லுவதற் கில்லை. ஏழை மக்கள் அரும் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பணத்தைச் சேமித்து வைப்பதற் குத் தகுந்த இடமாயும், அப்படிச் சேமித்ததை, தேச நலத்திற்குப் பயன் படக்கூடிய முறையில் செய்யத் தகுந்த இடமாயும் சேவிங்ஸ் பாங்குகள் இருக்க வேண்டும். நான் முன்பு சொல் லியது போல், பெரும்பாலான அரசாங்க நிலயங்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. சேவிங்ஸ் பாங்குகளைப் பொறுத்தவரை ஓரளவு பரவாயில்லை. துரதிர்ஷ்ட வசமாக இன்று அவை கிராம வாசிகளுக்குப் பயன்படுவனவா யில்லை. நகரத்தில் வசிப்பவர்க ளுக்கே இப்போது அவற்றால் பிரயோஜன மிருந்து வருகிறது. தங்கச் சேமிப்பு இந்தியாவுக்கு வெளியே இருக்கும்வரை, சேவிங்ஸ் பாங்குகளைக்கூட, நம் பத்தக்க தொரு நிலயங்களாக எண்ணக்கூடாது. யுத்த நெருக் கடி ஏற்பட்டுவிட்டால், அரசாங் கத்தார் இவற்றில் இருந்துவரும் பணங்களை, பணம் போட்டு வைத்திருப்பவர்களின் விருப்ப மின்றியே, கையாள முடியும். இதனால் சேவிங்ஸ் பாங்குகள் உபயோகமற்றனவாய்ப் போய் விடுவதோடு, ஜனங்களுக்கே கேடு பயப்பனவாயும் மாறிவிடு கின்றன. ஜனங்களால் நடத்தப் படாமலும், ஜனங்களின் ஆதிக் கத்தின்கீழ் இல்லாமலும் இருந்து வருகிற அரசாங்கங்களை, எப் போதுமே நம்ப முடியாது. அவ சரமான சந்தர்ப்பங்களில் அப்ப டிப்பட்ட அரசாங்கங்கள் ஜனங் களின் நலத்தைக் கவனிக்கும் என்று சொல்வதற்கில்லை. எனவே பொதுஜன ஆதிக்கம் என்ற நிபந்தனை இல்லாது நடை பெறும் சேவிங்ஸ் பாங்குகளால் மனிதர்களை அடிமைப்படுத்தும் சங்கிலி அதிகமாகிறதே யன்றி வேறில்லை. அவை இருப்பதனா லும் குற்றமில்லை. சாதாரண மான இந்த நிலயங்களைப் பொறுத்த அளவிலுங்கூட நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என் பதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டே இதைச் சொன் னேன்.

*

திறந்த புத்தகம்

என்னுடைய வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். என்னிடத்தில் ரகசி யங்கள் கிடையா; ரகசியங்களை நான் விரும்புவதும் இல்லை.

—மகாத்மா காந்தி

அபிப்பிராயபேதம்

அபிப்பிராய பேதம் என்றால் பகைமை என்று அர்த்தமல்ல. அது பகைமை என்றால், நானும் என் மனைவியும் பெரும் பகைவர்களாகி விடுவோம். உலகத்தில் அபிப்பிராயபேதம் இல்லாத இரண்டு மனிதர்களை நான் பார்த்ததில்லை. நான் கீதையைப் பின்பற்றுகிறவனாதலால், என் னோடு அபிப்பிராயபேதம் கொண்டிருப்பவர்களையும், என் மிக நெருங்கிய நண்பர்களைப்போலப் பாவிக்க, எப்போதும் முயன்றிருக் கிறேன்.

—மகாத்மா காந்தி



டால்டாவில் வறுத்த உருளைக்கிழங்கு வடைகள்

எச்சமயத்திலும் சுவைமிகுந்தவை!

உருளைக்கிழங்கை கழுவி தோலுடன் வேகவைக்கவும். கிழங்கு பதமானதும் தோலை அகற்றி சிறிது பால்விட்டு பொடி செய்யவும். ருசிக்குத்தகுந்தபடி உப்பும், மிளகுபொடியும், நறுக்கின கொத்தமல்லி இலையும்சேர்த்துக்கொள்ளவும். தட்டை வடைகளாகச் செய்து முட்டையின் வெள்ளைக்கருவிலோ அல்லது கரைத்த அரிசிமாவிலோ தோய்த்து, ரொட்டித்தூளிலோ மைதாமாவிலோ பிரட்டவும். பரந்த வாணலியில் டால்டாவை சூடாக்கி அதில் வடையின் இருபக்கங்களும் சிவக்கும்வரை வறுக்கவும். வடைகளை சுடச்சுட சாப்பிடுங்கள் — நீங்கள் அவைகளை மிகவும் விரும்புவீர்கள்! டால்டா, அதனால் செய்யப்பட்ட எல்லா பதார்த்தங்களின் சுவையையும் எடுத்துக் காட்டுகிறது.

உண்பதற்கு விருபபத்தையூட்டுவதும், சத்தைத்தருவதுமான பதார்த்தங்கள் தயாரிப்பது எப்படி, சரியானமுறையில் சமைப்பது எங்ஙனம், மிகுதியான தின்பண்டங்களை பாழாக்காமல் உபயோகிப்பது எப்படி, இதுபோன்ற கேள்விகளுக்கு தக்க ஆலோசனைகளை இலவசமாகப்பெற கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

தி டால்டா
அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 74-50 TM

கலியாண விசேஷங்களுக்கும்,
திருவிழா விசேஷ நாட்களிலும் அணியத் தகுந்த

எங்கள்



"போட்டோ மார்க்"

சேலைகள்

கெட்டியான சாயத்திற்கும்
உறுதியான உழைப்பிற்கும்
கியாரண்டி தரக்கூடியது

தயாரிப்பவர்கள்:

ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள்:

1. ஸ்ரீ முருகன் அண் கோ, மால் 2-வது தெரு, மதுரை
2. M/s பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை
3. M/s R. M. H. S. மூர்த்தி கம்பெனி. லக்ஷிமிபுரம் குறுக்குத் தெரு, மதுரை
4. ஸ்ரீ பால முருகன் அண் கோ. 166, தெற்கு மாசி வீதி, மதுரை
5. M/s M. S. T. சுப்பய்யர் அண் சன்ஸ். 119 சந்தை ரோடு, நாகல்நகர், திண்டுக்கல்
6. கஸ்தூரி ரெங்கய்யர், நாகையர் அண் கோ. ஸௌராஷ்ட்ர தெரு, வத்தலகுண்டு
7. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் அண்டு N. A. Dt.
8. M. R. சுப்பையா செட்டியார், ஜவுளி வியாபாரம், 150, ராஜாமில்ரோடு, பொள்ளாச்சி.

(N. B.) *40, 60, 80 நெ. ஜவுளி தினுசுகளுக்கும்,*
பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளுக்கும்,

சரஸ்வதி வீவிங் கம்பெனி

நாகல் நகர், திண்டுக்கல்

32, லக்ஷிமிபுரம் 3-வது தெரு, மதுரை

காந்தியடிகளின் சரிதை

* * *

> காந்தியடிகளின் வாழ்க்கை ஒரு தியாக வாழ்க்கை. உடம்பை வளைத்து வேலை செய்யக் கூடிய பிராயம் வந்தது முதல், வாழ்நாளின் கடைசி நிமிஷம் வரைக்கும் மனித சமூகத்துக்குத் தொண்டாற்றுவதையே வேலையாகக் கொண்டுவிட்ட வாழ்க்கை அது. தினமணியிலிருந்து.

மகாத்மா மோகனதாஸ் கரம்சந்திர காந்தி, 1869-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி, மேற்கு இந்தியாவில் கத்தியவார் என்ற தீபகற்பத்தில் போர்பந்தர் என்னும் துறைமுகப் பட்டணத்தில் பிறந்தார். காந்திஜி சொன்னபடி போர்பந்தர் கடலிலிருந்து கிளம்பியது போன்றே இருக்கிறது. அதைச் சுற்றி இருக்கும் கடல் அலைகளின் ஒலி எப்பொழுதும் கேட்டுக் கொண்டே இருக்கும். மற்றொரு பக்கத்தில் பாலைவனம்; அது அருகிலேயே இருக்கிறது.

காந்திஜி பனியா (வைசிய) சமூகத்தினர். உயர் நிலையி லிருந்த குடும்பம். காந்திஜியின் பாட்டனார் உத்தமசந்திர காந்தி, இவரை ஒடா காந்தி என்றும் அழைப்பதுண்டு. இவர் கத்தியவார் சமஸ்தானங்களில் ஒன்றில் திவானாக இருந்தார். அவர் பேரப்பிள்ளையே இந்த ஒடா காந்தியைப் பற்றி ஒரு ருசிகரமான விவரத்தைக் கூறியிருக்கிறார். இவர் தமது சொந்த போர்பந்தர் சமஸ்தானத்தின் வேலையிலிருந்து சிறிது காலம் நீக்கப்பட்டார். ஜூனாகாத் என்ற மற்றொரு சமஸ்தானத்தில் வேலைக்கு அமர்ந்தார். தமது புது எஜமானரைப் பார்த்ததும் ஒடா காந்தி தமது இடது கையினாலேயே சலாம் வைத்தார். உடனே அந்த மன்னர், "ஏன் எனக்கு இடது கரத்தால் சலாம் செய்கிறீர்?" என்றுகேட்டார். "என் வலதுகரம் போர்பந்தருக்கு அர்ப்பணஞ்செய்யப்பட்டு விட்டதனால்தான்" என்று ஒடாகாந்தி பதிலளித்தார்.

குழந்தைப் பருவம்

கரம் சந்திர காந்தியே மகாத்மாவின் தந்தை. இவர் ராஜகோட்டைத் திவானாக இருந்தார். இவரைப் பற்றி காந்திஜி "என் தந்தை தம் ஜாதியினரிடம் அதிக அபிமானமுள்ளவர். சத்திய வந்தர். தீவிரமும் தயாளமும் மிகுந்தவர். ஆனால், முன் கோபி" என்கிறார். மகாத்மாவின் தாயார் தெய்வ பக்தி மிகுந்தவர். காந்திஜியின் ஒழுக்கத்திற்கு இவரே காரண பூதரா யிருக்கவேண்டும். தமது தாயாரைப் பற்றிக் கூறுகையில் காந்திஜி, "என் தாயாரைப்பற்றி என்மனதில் மறையாமல் இருந்து வரும் ஞாபகமெல்லாம், தெய்வீகத் தன்மை ஒன்றே" என்கிறார்.

காந்திஜி குழந்தைப் பருவத்தில் போர்பந்தரிலேயே இருந்தார். 12-வது வயதில் அவரை அவ்வூர் ஹைஸ்கூல் ஒன்றில் சேர்த்தார்கள். பள்ளிக்கூடத்தில் அவர் அதிக சங்கோஜப்படும் மாணவனாக விளங்கினார். தமது புத்தகங்களைத் தவிர அவருக்கு வேறு எதுவுமே வெளி உலகத்தைப் பற்றித் தெரியாது. படிப்பு முடிந்ததும் யாருடனும் சேராமல்

வீட்டுக்கு ஓடிவிடுவார். சிறு வயதிலும் சத்தியம் தவறுதிருந்தார். பரமசாது.

இளமையில் விவாகம்

அக்காலத்திலிருந்த ஹிந்து வழக்கப்படி அவருக்கு 13-வது வயதிலேயே விவாகமாகி விட்டது. இதைப் பற்றிக் கூறும் காந்திஜி ''கல்யாண மென்றுல் உடுக்க நல்ல ஆடை, மேள முழக்கம், கல்யாண ஊர்வலங்கள், ஆடம்பரமான விருந்துகள், கூட விளையாடக் கிடைக்கும் முன் பின் தெரியாத ஒருபெண் - கல்யாணத்தைப் பற்றி அப்பொழுது எனக்குத் தெரிந்ததெல்லாம் இவ்வளவுதான்'' என்கிருர்.

மத சகிப்புத் தன்மைக்கு அடிப்படை

இளம் வயதில் காந்திஜி, தமது தந்தையின் முன்பு துளசி தாஸ் ராமாயணததை உரக்கப் படிப்பது வழக்கம். அவருடைய மனத்தில் இது நன்கு ஊன்றி விட்டது. ''பக்தி ரசமான நூல்களில் துளசி ராமாயணமே சிறந்தது'' என்று காந்திஜி கருதலானுர். பிறகு அவர் தந்தை ராஜ கோட்டைக்குச் சென்றதும் அதிக பிரபலஸ்தரானுர். ஹிந்துக்களே யன்றி முஸ்லிமகளும் ஜைனர்களும் அவரைப் பார்க்க அடிக்கடி வருவார்கள். அவர்களுடன் சிநேக முறையில் பழகியதுடன் மத சம்பந்தமான பேச்சுக்களும் அடிக்கடி நடக்கும். ''ராஜ கோட்டையிலேயே ஹிந்து மதத்தின் பல பிரிவுகள் சம்பந்தமாகவும் மற்ற சகோதர மத விஷயத்திலும் சகிப்புத் தன்மைக்குரிய அடிப்படையை நான் அடைந்தேன்'' என்று காந்திஜியே கூறியிருக்கிருர். காந்திஜிக்கு அப்பொழுதெல்லாம் கடவுள் நம்பிக்கை அதிகம் வந்துவிடவில்லை; ''ஆனுல் ஒன்று மாத்திரம் என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. எல்லாவற்றிற்கும் ஒழுக்கம் ஒன்றே அடிப்படை என்பதுதான் அது. எல்லா ஒழுக்கங்களுக்கும் அஸ்திவாரம் சத்தியம். ஆகவே சத்தியம் ஒன்றே எனது ஏக லட்சியமாயிற்று. சத்தியம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. அதற்குப் பிறகு சத்தியத்திற்கு நான் கொள்ளும் கருத்தும் விசாலமாகிக் கொண்டே வந்தது'' என்கிருர் காந்திஜி.

இந்தச் சமயத்தில் மற்ெருரு தர்மமும் அவர் மனத்தை அதிகமாகக் கவர்ந்தது. ''தீங்கு இழைப்பவருக்கும் நன்மையையே செய்'' என்பதே அத்தருமம். பிற்காலத்தில் காந்திஜி பெற்ற பெருமைகளின் வித்தை நாம் இங்கு காண்கிறோம்.

இங்கிலாந்துப் பயணம்

பிரவேசப் பரீட்சையில் தேறியதும் பவநகர் சாமலாதாஸ் கல்லூரியில் சேர்ந்தார். ஆனுல் இங்கு அவர் அதிக காலம் தங்கவில்லை. இவரும் திவானுவதற்குச் சௌகரியமாயிருக்குமாகையால் இங்கிலாந்திற்குச் சென்று சட்டம் படிப்பதே சரி என்று கருதப்பட்டது. இங்கிலாந்தில் குடிப்பதும், மாமிசம், தின்பதும், பிற மாதரைத் தீண்டுவதுமில்லை என்று சத்தியம் செய்து கொடுத்த பின்னரே இவர் இங்கிலாந்திற்குப் போக இவருடைய தாயார் அனுமதித்தார். அப்பொழுது இவருக்கு வயது 18.

மாமிசம் சாப்பிடுவதில்லை என்ற விரதத்தைக்காப்பதற்காக இங்கிலாந்தில் இவர் பல கஷ்டங்களை அநுபவிக்க நேர்ந்தது. இவருடைய நண்பர்கள் சச்சர

விட்டனர். முதலில் சைவச் சாப்பாடு நல்லதாகக் கிடைக்கவுமில்லை என்றாலும் அவர் தமது விரதத்தை விடவில்லை. தாயாருக்குத் தாம் அளித்து வந்த சத்தியத்தைக் காக்க தமக்கு அருள் புரிய ஆண்டவனைப் பிரார்த்தித்து வந்தார். ஓர் அறையை அமர்த்திக் கொண்டு எளிய வாழ்வை நடத்தினர். கஷ்டப்பட்டு படிக்க வேண்டியிருந்த சமயம் அது என்றாலும் சமாளித்து வந்தார். "என் வாழ்க்கை வாஸ்தவத்திலேயே உண்மையுள்ளதாயிற்று. இதைக் குறித்து என் மனத்தில் உண்டான ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை" என்றார் காந்திஜி.

இந்தியாவில் பாரிஸ்டர்

சட்டப் பரீட்சையில் தேறியதும் இந்தியாவுக்குத் திரும்பினர். அவர் வந்ததும் அவருடைய ஜாதிக்காரர்கள் அவரை ஜாதிப் பிரஷ்டம் செய்துவிட எண்ணினர். அவருடைய உறவினர்கள் அவரோடு ரகசியமாகச் சாப்பிட்டு வந்தார்களேயன்றி பகிரங்கமாகச் சாப்பிடத் தைரியம் கொள்ளவில்லை.

காந்திஜி பம்பாய் ஹைகோர்ட்டில் பாரிஸ்டராக இருந்தார். பிறகு கத்தியவாருக்குச் சென்றார். ஆனால் அவரிடம் அதிக வழக்குகள் வரவில்லை. அவருடைய கட்சிக்காரரில் ஒருவருக்குத் தென் ஆப்பிரிக்காவில் வியாபாரமிருந்தது. அங்கு ஒரு வழக்கை நடத்துவதற்காக அவர் காந்திஜியை வக்கீலாக அமர்த்தினர்.

1893-லிருந்து *1914*-வரை காந்திஜி தென் ஆப்பிரிக்காவிலிருந்தார். அங்கு அவர் *20* வருஷங்களாக நடத்திய போராட்டம் அதிக மானக் கேடுகளுக்கு ஆளாகியிருந்த இந்தியரின் அந்தஸ்தை உயர்த்தியது மாத்திரமல்ல. ரோமெய்ன் ரோலந்து கூறுவதைப்போல, தேவையான கடுமையான தியாகத்தினல் மாத்திரமின்றி முடிவான வெற்றியினாலும் தம் நாளில் இணையற்றதான ஒரு ஆத்மீகச் சக்தியையும் காந்திஜி பெற்றார். காந்திஜியின் வாழ்க்கை உருப்பெறும் சமயம் அது. சேவை என்ற தம் மதத்தை அனுபவ பூர்வமாகப் பரீட்சிக்கலானர். ஒரு முக்கியமான வழக்குக்காகக் காந்திஜி தென் ஆப்பிரிக்காவுக்குவந்தார். ஆனல் மற்றொரு துறையிலேயே அவருடைய உழைப்பெல்லாம் ஈடுபட்டிருந்தது.

தென்னாப்பிரிக்காவில் அவதி

தென் ஆப்பிரிக்காவுக்கு வந்த இரண்டொரு தினங்களில் தம் இந்தியச் சகோதரர்கள் எவ்வளவு கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்பதைக் கண்டு கொண்டார். ரயிலில் வெள்ளைக்காரருடன் சேர்ந்து பிரயாணம் செய்ய இவருக்கு அனுமதியில்லை. அடித்து, ரயிலுக்கு வெளியில் தள்ளப்பட்டார். ஹோட்டல்களில் சேர்ப்பதில்லை. வெள்ளைத் தோல் இல்லை என்ற காரணத்திற்காக நடைபாதையிலிருந்து உதைத்தும் தள்ளப்பட்டார். தென் ஆப்பிரிக்காவில் எல்லா இந்தியரும் "கூலிகள்." இவரோ கூலி பாரிஸ்டர்!

புது வகையான அநீதிகளுக்கும் தென் ஆப்பிரிக்க சர்க்கார் ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். காந்திஜியால் உண்டாக்கப்பட்ட எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இந்தியரின் வோட்டுரிமையைப் பறிக்கும் சட்டத்தைச் செய்தார்கள். இந்தியர் கொதிப்படைந்தனர். செய்வது இன்னதென்று தெரியாமல்

காந்திஜியை அங்கேயே கேட்டால் சுப்ரீம் கோர்ட்டு வக்கீலாக இருக்கும்படி கேட்டுக் கொண்டனர். இவர் வெள்ளையரல்லாததால் அப்படி வக்கீலாவதற்குப் பல கஷ்டங்களிருந்தன. எனினும் முடிவில் வக்கீலானார். "வருஷ முடிவில் இந்தியாவுக்குத் திரும்பிவிடுவதாக இருந்தேன். ஆனால் கடவுள் வேறு விதமாக எண்ணிவிட்டார்" என்கிறார் காந்திஜி. சேவையையே தம் மதமாக்கிக் கொண்டார். "சேவை என்பது எனக்கு இந்தியாவின் சேவையே. நான் தேடாமலேயே அந்த விருப்பம் எனக்கு உண்டாயிற்று" என்கிறார் மகாத்மா.

வெள்ளையர் வயிற்றெரிச்சல்

மனைவியையும், குழந்தைகளையும் அழைத்துச் செல்லுவதற்காக 1896-ல் அவர் இந்தியாவுக்குத் திரும்பினர். தென் ஆப்பிரிக்காவில் இந்தியர் அனுபவித்து வரும் கொடுமைகளைக் குறித்து இந்தியாவில் பிரசங்கங்கள் செய்ததுடன் பத்திரிகைகளுக்கும் எழுதினர். இந்தியாவில் பலமான பொதுஜன எதிர்ப்பையும் கிளப்பினர். இதைப் பற்றிய செய்திகளை 'ராய்ட்டர்' கொஞ்சம் மிகைப்படுத்தி தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பிற்று. அதைப் படித்துவிட்டு, அங்கிருக்கும் வெள்ளைக்காரர்கள் ஆத்திரமடைந்தனர். இனி இந்தியக் கூலிகள் கிடைப்பது கஷ்டமாகி, வெள்ளைக்காரத் தோட்டங்களுக்குச் சங்கடமாகிவிடும் என்று எண்ணினர். இதற்குமத்தியில் காந்திஜியை உடனே திரும்பி வரும்படி கூறிஒரு தந்தி வந்தது. காந்திஜி தமது குடும்பத்துடன் "கோர்லாண்டு" என்ற கப்பலில் பிரயாணமானர். அக் கப்பலில் 300 அல்லது 400 இந்தியப் பிரயாணிகளிருந்தனர். அநேகமாக அதே தொகையுள்ள இந்தியருடன் மற்றோர் கப்பலும் தென் ஆப்பிரிக்காவுக்குப்புறப்பட்டது. இது கேட்டால் வெள்ளைக்காரர்களுக்குத் தெரிந்ததும், அதிக பரபரப்பை அடைந்தனர். டர்பனில் இவர்கள் இறங்காதபடி தடுத்துவிட வேண்டுமென்று கூட்டம் போட்டு தீர்மானங்களையும் நிறைவேற்றினர்கள். 1896-ல் இந்தியாவில் பெரிய பிளேக் நோய் கண்டது. இக் கப்பல்கள் டர்பானுக்கு வந்ததும், 'குவாரண்டைன்' தடை முறைகளை வெள்ளைக்காரர்கள் தங்களுக்கு சாதகமாக உபயோகித்துக் கொண்டனர். நியாயமான கால அளவிற்கு அதிகமாக 23 நாள் வரை அக்கப்பல்களிலிருந்த இந்தியப் பிரயாணிகள் குவாரண்டைனில் வைக்கப்பட்டனர். ககாந்திஜியையும் மற்ற பிரயாணிளையும் இறங்க அனுமதித்தால் அந்தக் கப்பல் கம்பெனிகளின் வியாபாரத்திற்கே ஆபத்தை விளைவித்து விடுவதாகவும் பயமுறுத்தினர்கள்.

மகாத்மாவுக்கு அடி, உதை

ஆனல், இந்தியக் கப்பல் கம்பெனிக்காரர்களும் அவர்களுடைய ஏஜெண்டுகளும் திடமாயிருந்தனர். வெள்ளைக்காரர் ஆத்திரமடைந் திருக்கிருர்கள் என்றும் இந்தியப் பிரயாணிகள் இறங்கினல் அவர்களைக் கடலில் தூக்கிப் போட்டு விடுவார்களென்றும் பிரயாணிகளுக்கு நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டன. இந்த மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சாமல் அங்கு இறங்க பிரயாணிகள் தயாராயிருந்தனர். கப்பல்களும் துறைமுகத்தை அடைந்தன. அட்டர்னி ஜெனரல் காந்திஜிக்கு

ஒரு செய்தியை அனுப்பினர். மற்ற பிரயாணிகளுடன் இப்பொழுது அவர் இறங்கவேண்டாமென்றும் மாலையில் போலீஸ் பாதுகாப்புடன் இறங்கும்படியும் அதில் அவர் காந்திஜிக்கு யோசனை கூறியிருந்தார். அனுவசியமான சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக காந்திஜி முதலில் சம்மதித்துவிட்டார்; தாம் வரும் வரையில் ருஸ்தும்ஜியின் வீட்டில் தங்கியிருக்கும்படி கூறி தமது குடும்பத்தினரை அனுப்பினர். ஆனால் ருஸ்தும்ஜி கம்பெனி வக்கீல் ஸ்ரீ லாடன் அங்கு வந்திருக்கும் நிலைமையை முன்னிட்டு காந்திஜி உடனே வர வேண்டியது அவசியம் என்று கூறவே, காந்திஜி தமது தலைப்பாகையை எடுத்து வைத்துக் கொண்டு புறப்படத் தயாராகி விட்டார். அப்பொழுது மாலை 4-30 மணி. வானம் மப்பு மந்தாரமாயிருந்தது. ஒரு மணி நேரம் நடந்தால் ருஸ்தும்ஜி வீட்டை அடைந்து விடலாம்: காந்திஜி தெருவில் போனதும் அவர் தலைப்பாகையைக் கொண்டு அடையாளம் கண்டுகொண்டனர். உடனே சில வெள்ளைக்கார வாலிபர்கள், "இதோ காந்தி! இதோ காந்தி! வளைத்துக் கொள்ளுங்கள்! அடியுங்கள்" என்று கூச்சல் போட்டனர். சில கற்களையும் வீசினர். விஷமிகளின் கூட்டமும் அதிகரித்து விட்டது.

ரிக்ஷாவில் ஏற்றிக் கொண்டு போய் விடலாமென்று எண்ணி ஸ்ரீ லாடன் ரிக்ஷாக்காரனை கூப்பிட்டார். விஷமிகள் அவனை மிரட்டவே அவனும் வரமறுத்து விட்டான். காந்திஜியிடமிருந்து ஸ்ரீலாடனைத் தூர இழுத்து விட்டார்கள். கூட்டத்தினர் காந்திஜியைத் திட்டினர். அவரது தலைப்பாகையைத் தட்டி வீசினர். ஒரு தடியன் அருகில் வந்து காந்திஜியின் கன்னத்தில் ஓங்கி அறைந்ததுடன் காலாலும் உதைத்தான். காந்திஜி கீழே விழுந்திருப்பார்; ஆனால் பக்கத்திலிருந்த ஒரு வீட்டின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டார்.

வீட்டின் முன்பு அமளி

அன்றிரவு அவர் வீட்டின் முன்பு ஒரு பெருங் கூட்டம் சேர்ந்து விட்டது. காந்திஜியைத் தங்களிடம் ஒப்படைத்து விட வேண்டுமென்றார்கள். அங்கு வந்த போலீஸ் சூப்பரின்டென்டு கூட்டத்தினிடம சென்றார்.

'உங்களுக்கு அவர் என்ன தீங்கைச் செய்தார்?' என்று கேட்டார்.

'இந்தியாவில் எங்கள் முகத்தில் கரி பூசி விட்டார். அதோடு நேட்டாலில் கூலிகளைக் குவிக்கப் பார்க்கிறார்' என்றனர்.

'அவர் வெளியே வரா விட்டால் அவர் வீட்டையே கொளுத்திவிடுவோம்' என்றனர்.

ஆனால் போலீஸ் சூப்பரிடென்டு மற்றொரு வழியாக ரகசியமாகக் காந்திஜியை வெளியே அனுப்பி விட்டார்.

இத்தகைய காரியங்களெல்லாம் காந்திஜியின் கௌரவத்தையும் இந்திய சமூகத்தின் கௌரவத்தையுமே அதிகரித்தன. இரு தரப்பினரும் தங்கள் தங்கள் பலத்தைப் பரீட்சித்துக் கொண்டனர்.

'அந்தத் தினத்தை நினைக்கும் போதெல்லாம் சத்தியாக்கிரகத்தை அநுசரிக்க என்னைக் கடவுள் தயார் செய்தார் என்ற உணர்ச்சியே எனக்கு உண்டாகிறது' என்கிறார் காந்திஜி.

பிரிட்டிஷ் சர்க்காரின் வற்புறுத்தலின் பேரில், காந்திஜியை அடித்தவர்கள் மீது வழக்குத் தொடர, நேட்டால் சர்க்கார் தயாரா யிருந்தனர். அடித்தவர்களை அடையாளம் சொல்லும்படி காந்திஜியைக் கேட்ட போது, யார் மீதும் வழக்குத் தொடர அவர் மறுத்து விட்டார். இது தென் ஆப்பிரிக்க வெள்ளைக்காரருக்கு ஒரு திகைப்பை உண்டாக்கிற்று.

போயர் யுத்தத்தில் பங்கு

அவர்கள் திகைப்படைய இன்னும் பல காரணங்களிருந்தன. 1890-ல் போயர் யுத்தம் மூண்டது. இந்திய சமூகத்தின் தலைவர் என்ற முறையில் காந்திஜி பிரிட்டிஷ் கட்சிக்கு உதவத் தயார் என்று முன் வந்தார். இதில் காந்திஜியின் கருத்து இது தான்: இந்தியர் பிரிட்டிஷ் பிரஜைகள் என்ற முறையிலேயே தென் ஆப்பிரிக்காவில் குடியேறியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் பிரஜைகள் என்ற முறையிலேயே தங்களது நியாயமான உரிமைகளுக்காகவும் போராடிவருகின்றனர். ஆகையால் பிரிட்டிஷ் பிரஜைகள் என்ற முறையில் இந்தியர் தங்கள் கடமையையும செய்தாக வேண்டும். காந்திஜியின் தலைமையில் இந்தியர்கள் அப்போரில்எந்த வேலைக்கும் வரத் தயாரா யிருந்தார்கள். யுத்த ஆஸ்பத்திரிகளின் தோட்டி வேலைக்கும் தயார். அதன் பேரில் இந்திய வைத்தியப் படை ஒன்றை அமைக்க அனுமதி கிடைத்தது. 1100 இந்தியர் காந்திஜியின் தலைமையில் யுத்த அரங்கத்திற்குச் சென்றனர். இவர்களுக்கு அதிகக் கஷ்டமான வேலைகளே தரப்பட்டன. 7, 8 மைல்களும், சில சமயங்களில் அதற்கு அதிகமாகவும் காயம் பட்டவர்களைத் தூக்கிக்கொண்டு போக வேண்டியிருந்தது. பிறகு பீரங்கி முழங்கும் போர் முனையிலும் சென்று சேவை செய்தனர். இந்தியர் பாராட்டப்பட்டனர். இந்தியரின் கௌரவமும் உயர்ந்தது

பிளேக் கண்டவர்களுக்கு சிகிச்சை

போயர் யுத்தத்தில் காந்திஜி தமது வீரத்தைக் காட்டினார். பெருந் தன்மையோடு கூடிய தமது தீரத்தைக் காட்டும் சந்தர்ப்பம் 1904-ம் வருஷத்தில் அவருக்குக் கிடைத்தது. அந்த வருஷத்தில் கொடிய "கறுப்பு பிளேக்" ஜோகன்ஸ்பர்க்கில் உண்டாயிற்று. 23 இந்தியருக்கு இந்நோய் கண்டது. ஒரு காலியான குடிசையில் இந்நோயாளிகள் தனியாக வைக்கப்பட்டனர். காந்திஜி தமது ஆபீஸ்குமாஸ்தாக்கள் நால்வருடன் அந்நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யும வேலையை மேற்கொண்டார். இதிலிருந்த ஆபத்து சாமான்யமல்ல. அதில் 20 பேர் மாண்டனர். மூவர் வேறு இடத்திற்குக் கொண்டுபோகப்பட்டனர்.

இதே சமயத்தில் காந்திஜி தென் ஆப்பிரிக்காவில் போனிக்ஸ் குடியேற்றம் என்ற ஓர் ஆசிரமத்தை நிறுவினார். "இந்த முடிவுக்கு" என்ற ரஸ்கினின் புஸ்தகத்தைப் படித்ததின் பேரிலேயே காந்திஜிக்கு இந்த யோசனை வந்தது. உடலை உழைத்து உழுது வாழ்பவனே, அதாவது ஒரு தொழிலாளியின் வாழ்வே வாழ்வு என்பதை ரஸ்கின் அப்புத்தகத்தில் போதிக்கிறார். அங்கே குடியேறுகிறவர்கள் யாவரும் உழைத்து எல்லோரும் ஒரே மாதிரி ஊதியத்தையே பெற வேண்டும் என்பதே திட்டம். வக்கீல் தொழிலை விட்டுவிட்டு

அங்கே போய்க் குடியேறிவிட வேண்டும் என்பது தான் காந்திஜி கொண்டிருந்த அபிப்பிராயம். ஆனால், இடையிடையே சிறிது காலந்தான் அவர் அங்கு தங்கினார்.

பிரமச்சாரியானார்

பின்னர் 1906-ம் வருஷம் ஜுலு கலகம் கிளம்பியது. அப்பொழுதும் ஒரு சிறு இந்திய கோஷ்டியினருடன் வைத்தியப் படை வேலையில் ஈடுபட்டார். காயமடைந்த ஜுலுக்களுக்குச் சிகிச்சை செய்வது இவர்கள் வேலை.

ஜுலு பிரதேசத்தில் குடிகொண்டிருந்தவகாந்தத்தின்வழியாகப் போய்க்கொண்டிருக்கையில், அவர் மனம் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டதாகக்காந்திஜி கூறுகிறார். பிரமச்சரியத்தைப் பற்றி யோசிக்கலானார். மனித சமூகத்திற்குச் சேவை செய்ய விரும்பினால், விவாகமாகாதவர்களுக்கேயன்றி விவாகமானவர்களுக்கும் பிரமச்சரியம் எவ்வளவு அத்தியாவசியம் என்பதைச் சிந்தித்தார். ஒரு பக்கம் சடலத்தையும் மற்றோர் பக்கம் ஆத்மார்த்தீகத்தையும் நாடுவதென்பது எவ்வளவு அசாத்தியமென்பதையும் எண்ணிப் பார்த்தார். அது முதல் காந்திஜி பிரமச்சாரியானார்.

சாத்விக எதிர்ப்பு

தமது சாத்வீக எதிர்ப்பைத் தென் ஆப்பிரிக்காவில் பரீட்சித்துப் பார்க்க வேண்டிய சமயம் ஒன்று உண்டாயிற்று. வெள்ளைக்காரர்கள் தென் ஆப்பிரிக்காவை வெள்ளைக்கார நாடாக வைத்திருக்க முயன்றனர். இதனால் ஆசியாக்காரர்கள் குடியேறுவதற்கு அங்கு எதிர்ப்பு அதிகரித்தது. 1906-ம் வருஷம் ஆசியாக்காரர்கள் பதிவுச் சட்டம் ஒன்று வந்தது. அதன்படி கைதிகளைப் போல இந்தியர் எல்லோரும் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டனர். காந்திஜியின் தலைமையில் இந்தியர் இதற்கு உடன்பட மறுத்து சிறைப்படவும் தயாராயினர். கட்டாயப்படுத்தும் சட்டத்தை ரத்து செய்து விடுவதானால் வலியப் பதிவு செய்து கொள்ளத் தயார் என்றனர்.

சட்டத்தை ரத்து செய்வதாக முதலில் சர்க்கார் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் பிறகு மறுத்து விட்டனர். சாத்வீக எதிர்ப்பு பலப்பட்டது. காந்திஜி சிறை சென்றார். மற்றும் பலரும் அவரைப் பின்பற்றினர். கொடுமைகள் அதிகமாயின. இந்தியரின் விவாகங்களெல்லாம் சட்ட விரோதம் என்ற சட்டத் தீர்ப்பு ஒன்றும் பிறந்தது. கூலிகள் தங்கள் 'காண்டிராக்டு' தீர்ந்த பிறகும் இருக்க விரும்பினால் ஆளுக்கு 3 பவுன் வரி என்ற தலை வரியும் வந்தது. சாத்வீக சட்ட மறுப்பு விஸ்தாரமாயிற்று. சிறைகள் நிறைந்தன. ஸ்ரீமதி காந்தியின் தலைமையில் பலபெண்களும் சந்தோஷமாகச் சிறை சென்றார்கள். சட்டத்தை மீறுவதற்காக, தடுக்கப்பட்டிருந்த ஒரு பிரதேசத்திற்குப் பெண்களும் குழந்தைகளும் உள்பட 2000 பேர் ஊர்வலமாகச் சென்றனர். பலாத்காரமில்லை. அமைதிக்கும் பங்கம் கிடையாது. கரும்புத் தோட்டத்தில் வேலை செய்த கூலிகள் வேலை நிறுத்தஞ் செய்தனர். அவர்களில் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடைசியாக ஆசியாக்காரர் பதிவுச் சட்டம் ரத்தாயிற்று. தலை வரியும் ஒழிந்தது. இந்திய விவாகங்களும் ஒப்புக்கொள்ளப்பட்டன.

இது சத்தியாக்கிரகத்தின் வெற்றி. இதனால் உண்டான ஆத்மார்த்திக பலன் அளவு கடந்தது. இது இந்தியரின் சுய மதிப்பை உயர்த்தியது. வெள்ளைக்காரர்கள் இந்தியரை, பாராட்டும் மனோபாவத்துடன் கவனிக்கும்படியும் செய்தது. மிருக பலத்தைவிட ஆத்ம பலத்திற்கு அதிக சக்தியுண்டு என்பதையும் இது நிரூபித்தது. எல்லாவற்றையும்விட, சத்தியாக்கிரகத்தின் விசேஷத்தைக் காந்திஜியும் தெரிந்து கொண்டார்.

டால்ஸ்டாய் பாராட்டு

டால்ஸ்டாய் காந்திஜிக்குப் பின்வருமாறு எழுதினார்:"டிரான்ஸ்வாலில் நீங்கள் மேற்கொண்ட காரியங்கள் உலகத்தில் நடந்து வரும் மற்றெல்லா வேலைகளையும் விட மிக முக்கியமானவைகளாகும் என்றே உலகத்தின் இப்பகுதியிலுள்ள நாங்கள் கருதுகிறோம். கிறிஸ்தவ நாடுகளேயன்றி உலகம் முழுவதுமே அதில் ஈடு படவேண்டியது அவசியம்.'

'இந்தப் போராட்டத்தில் காந்திஜியின் மற்றோர் உயர்ந்த குணமும் வெளிப்பட்டது. யூனியன் ரயில்வே வெள்ளைக்கார தொழிலாளர்களின் பெரிய வேலை நிறுத்தம் ஆரம்பமாயிற்று. சர்க்கார் அதிக சங்கடமான நிலைமையிலிருந்தார்கள். "வேலை நிறுத்தஞ் செய்கிறவர்களுக்குப் பதிலாக உதவி செய்து சர்க்காரிடம் உங்கள் சௌகரியத்தைத்தேடிக் கொள்ளுங்கள்" என்று சிலர் சொன்னார்கள். காந்திஜி இதற்கு உடன்பட மறுத்துவிட்டார். நியாயமற்ற முறையில் சௌகரியத்தை அடைய அவர் தயாராயில்லை. காந்திஜியின் இந்த முடிவு கட்டாயம் ஒரு நல்ல அபிப்பிராயத்தையே உண்டாக்கிற்று. காந்திஜியுடைய வாழ்க்கையின் இரண்டாவது அம்சம் இவ்விதம் முடிந்தது.

இந்தியாவில் சேவை ஆரம்பம்

1914-ல் காந்திஜி இந்தியாவுக்குத் திரும்பினார். இதற்குள் மகாயுத்தம் ஆரம்பமாகிவிட்டது. பிரிட்டிஷ் ஆட்சித் தத்துவத்தில் அப்பொழுதும் அவருக்கு நம்பிக்கை இருந்தது. யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு முழு மனதுடன் உதவி செய்ய வேண்டும் என்பதே அவருடைய கொள்கை. "இந்த நெருக்கடியான சமயத்தில் இந்தியா தனது வலுவுள்ள மக்களையெல்லாம் சாம்ராஜ்யத்திற்குத் தியாகஞ் செய்யும்படிப் பண்ண நான் தயார்" என்று காந்திஜி சொன்னதோடு "இக்காரியத்தால் இந்தியா பிரிட்டனின் அதிக சலுகை வாய்ந்த பங்காளி யாவதோடு நிறத்துவேஷமெல்லாம் பழைய சங்கதியாகிவிடும் என்பதையும் நான் அறிவேன்" என்றார்.

1915-லிருந்து 1919-க்குள் சர்க்காரிடம் வைத்திருந்த நம்பிக்கை நாளா வட்டத்தில் காந்திஜிக்குக் குறையலாயிற்று. 1919-ல் அவருடைய போக்கு பலப்பட்டு அஹிம்ஸா பூர்வமான ஒத்துழையாமையாக மாறிற்று.

தாய் நாடு திரும்பியதும் அவர் செய்த முக்கியமான காரியம் சபர்மதியில் சத்தியாக்கிரக ஆசிரமத்தை ஆரம்பித்ததே.

ஆசிரமத்தின் கொள்கை இன்னதென்பதை அதன் கீழ்க்கண்ட விதிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:

நோக்கம்: தாய் நாட்டுக்கு எப்படிச் சேவை செய்வதென்பதை அறிந்து சேவை செய்வதே நோக்கம்.

பிரதிக்ஞைகள் :

1. சத்திய விரதம்: ஒருவர் பொதுவாகப் பொய்பேசுவதில்லை என்று மாத்திரம் பிரதிக்ஞை செய்து கொண்டால் போதாது. தேசத்திற்கு நன்மையான தாகவே இருந்தாலும் பொய்யை உபயோகிக்கலாகாது. ஒருவருடைய பெற்ருேர், முதியோரைச் சத்தியத்திற்காக எதிர்க்கவும் நேரலாம்.

பிரஹலாதனின் உதாரணத்தைக் கவனிக்கவும்.

2. அஹிம்ஸா பிரதிக்ஞை: உயிர் வாழ்வனவற்றைக் கொல்லுவதில்லை என்பது மாத்திரம் போதாது. அக்கிரமக்காரனுயிருந்தாலும், அவனுக்கும் இப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டவர்கள் தீங்கிழைக்கலாகாது. அத்தகையவர்கள் மீது கோபங் கொள்ளாமல் அவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். இவ்விதக் கொடுமை பெற்ருேரிடமிருந்தாலும், சர்க்காரிடமோ அன்றி பிறரிடமோ இருந்தாலும் எதிர்க்க வேண்டும்; ஆனல் கொடியவனை ஹிம்சிக்கலாகாது. சத்தியத்தையும் அஹிம்சையையும் பின்பற்றுகிறவர்கள், கொடியவர்களையும் அன்பினுலேயே வெல்லலாம். கொடுமைப் படுத்துகிறவனின் இஷ்டத்துக்குப் பணிந்துவிடக் கூடாது. அத்தகையவனை அன்பினல் வெல்லும் வரையில் சாவே வந்தாலும் அவன் கொடுமைகளுக்கு உடன்படமறுத்தே ஆக வேண்டும்.

இந்தியாவில் சத்தியாக்கிரகம்

தென் ஆப்பிரிக்காவில் வெற்றிகரமாக அனுஷ்டிக்கப்பட்ட சத்யாக்கிரக முறையை உபயோகிக்க 1917-18-ல் மூன்று சந்தர்ப்பங்கள் வாய்த்தன. பீஹாரில் சாம்பரான் என்ற இடத்தில் அவுரி தோட்டக்காரர்கள் "டின் காதியா" முறையைக் கையாண்டபோது அதை எதிர்த்ததும், கைராவில் விளைவே இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டபோது குடியானவர்களுக்கு உண்டான பிரச்னையுமே இதில் முக்கிய இரு சந்தர்ப்பங்களாகும். மூன்ருவது ஆமதாபாத் மில்காரர்களுக்கு விரோதமாக காந்திஜி உண்ணுவிரதத்தையே ஆரம்பித்துத் தொழிலாளருடைய குறைகளை நிவர்த்தித்தது.

சர்க்காவைத் திரும்பவும் புகுத்தி, அதை எல்லோரும் கைக்கொள்ள வேண்டுமென்று காந்திஜி உபதேசித்தது, இந்தியாவைக் காக்கவந்ததோர் சிறந்த உபாயமாகும். 1919-லிருந்து 1922-வரையில் குறிப்பிட வேண்டிய முக்கிய சம்பவங்கள், ரௌலட் சட்டம், பாஞ்சாலக் குழப்பம், கிலாபத் இயக்கம் ஆகியவைகளாகும்.

ரௌலட் சட்டத்தில், எவரையும் விசாரணையின்றிச் சிறை வைக்கலாம் என்ற விதி இருந்தது. அதற்காகக் காந்திஜி அதை எதிர்த்தார். ரௌலட் சட்டத்திற்குப் பிறகு ஏற்பட்ட குழப்பங்களைத் தொடர்ந்து பாஞ்சால குழப்பங்களும் நிகழ்ந்தன. அதன் விளைவே ஜாலியன் வாலாபாக் படுகொலை. இப் படுகொலையைக் காந்திஜி பலமாக எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார். சமாதான ஒப்பந்தத்தில் துருக்கிக்கு அளித்த விதிகளில் அதிருப்தி கொண்ட முஸ்லிம்களால் கிலாபத் இயக்கம் எழுந்தது. இதற்குக் காந்திஜி ஆதரவு அளித்ததுடன், தமது முஸ்லிம் தேச மக்களுடன் நெருங்கிய சிநேக பாவத்தோடும் வாழ விரும்பினர். சர்க்காருக்கு

விரோதமான கிளர்ச்சி எங்கும் எழுந்தது. ரௌலட் சட்டம் ரத்தாகும் வரையில் சாத்வீக முறையில் அச் சட்டத்திற்கு உடன்பட மறுத்துவிட வேண்டுமென்று தேச மக்களைக் கேட்டுக் கொண்டார். எங்கும் பொதுக்கூட்டங்கள், ஹர்த்தால்கள், ஆரவாரங்கள் நடந்தன. அரசியல் சீர்திருத்தக் கவுன்ஸில்கள் உள்பட ஒத்துழையாமைப் பிரகடனஞ் செய்தன. 1920-ல் கல்கத்தாவில் நடந்த விசேஷக் காங்கிரஸில் பட்டத்தைத் துறப்பது, அந்நிய நாட்டுத் துணி பகிஷ்காரம், பள்ளிக்கூடம் கோர்ட்டு கவுன்ஸில் பகிஷ்காரம் போன்ற காந்திஜியின் ஒத்துழையாமைத் திட்டம் நிறைவேறியது.

ஒத்துழையாமை இயக்கம்

தடை உத்தரவை மீறிய வங்காளிகள் ஆயிரக்கணக்கில் சிறைப்படுத்தப்பட்டனர். 1921 நவம்பர் 17-ம் தேதி வேல்ஸ் இளவரசர் பம்பாயில் இறங்கினார். எங்கும் வேலைநிறுத்தங்களும் கலகங்களும் கிளம்பின. பலாத்காரத்தில் ஈடுபட வேண்டாமென பொது ஜனங்களைத் திருப்ப காந்திஜி உண்ணாவிரத மிருந்தார். ஆனால் சர்க்கார் அனுஷ்டித்த கடுமையான அடக்குமுறைகளைக் கண்டித்து, சட்ட மறுப்பை ஆரம்பிக்கப் போவதாகக் காந்திஜி கூறியதுடன் வைசிராயிக்கும் ஒரு பகிரங்க கடிதத்தை வெளியிட்டார். 1922 பிப்ரவரி 14-ம் தேதி நடந்த சௌரிசௌரா சம்பவம், அவருக்கு ஒரு தெய்வீக எச்சரிக்கையாக ஆயிற்று. சட்ட மறுப்பை நிறுத்திவிட்டு கதர் சேவை ஒன்றிலேயே ஈடுபட்டார். இக் கலகங்களுக் கெல்லாம் காந்திஜியே பொறுப்பு என்று கூறி சர்க்கார் அவரை 1922 மார்ச்சு 10-ம் தேதி கைது செய்தனர். 6 வருஷ வெறுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டார்.

காந்திஜியின் சிறை வாழ்க்கையின் இரண்டாவது வருஷ முடிவில் குடல் நோய்க்காக ரண சிகிச்சை நடந்ததுடன் பிறகு நிபந்தனையின்றியும் விடுதலை யடைந்தார்.

உப்பு சத்தியாக்கிரகம்

1924-ல் ஹிந்து-முஸ்லிம் தகராறுகள் முற்றவே காந்திஜி செப்டம்பர் 4-ம தேதி டில்லியில் 21 நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இதன் பலனாக சமூக ஒற்றுமை உணர்ச்சி மிகுந்தது. 1927-ல் நடந்த சென்னை காங்கிரசிலும் அதற்குப் பிறகும் பூரண சுயேச்சைக்கு ஆதரவு மிகுந்தது. 1929-ல் தொழிற் கட்சியினர் அதிகாரத்துக்கு வந்தும் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து உண்டு என்றார்கள். அவர்கள் நடத்த முயன்ற வட்டமேஜை மகாநாட்டுக்குப் போவதில்லையென லாகூர் காங்கிரஸ் முடிவு செய்தது. சர்க்காருக்கும் காங்கிரசுக்கும் மனக்கசப்பு மிகுந்துகொண்டே வந்தது. காந்திஜி வைசிராய்க்கு ஒரு கடிதம் எழுதி 13 காரியங்கள் உடனே செய்யப்பட வேண்டுமென்றார். இதற்குச் சர்க்கார் உடன்படாததினால் மற்றொரு சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பமாயிற்று. உப்பு சத்தியாக்கிரகம் முக்கியமாயிருந்தது. 1930 மார்ச்சு 12-ம் தேதி காந்திஜியே இயக்கத்தைத் தமது ஆசிரமத்திலிருந்து ஆரம்பித்தார். தண்டிக்குச் சென்று ஏப்ரல் 5-ம் தேதி மகாத்மாவே உப்புச் சட்டத்தை மீறினார். நாடெங்கும் பல்லாயிரக் கணக்கானவர்கள்

சட்டமறுப்பில் ஈடுபட்டு சிறை புகுந்தனர். மே. 4-ம் தேதி நடுநிசியில் 20 ஆயுதந் தாங்கிய போலீஸார் காந்திஜியைக் கைது செய்தனர். ஆனால் சட்ட மறுப்பு தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

காந்தி-இர்வின் ஒப்பந்தம்

சர் சப்ரூவும் ஸ்ரீ ஜெயகரும் வைசிராயுடனும் காந்திஜியுடனும் சமரசம் பேசியதன் பலனாக காந்திஜியும் காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் விடுதலையடைந்தனர். பிறகு பிப்ரவரி 13-ம் தேதி வைசிராயைக் காந்திஜி பார்த்தார். மார்ச்சு 5-ம் தேதி காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. சட்டமறுப்பு நின்றது. பிறகு மகாத்மா காங்கிரஸின் ஏகப் பிரதிநிதியாக லண்டன் வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றார். இந்திய மக்களில் 100-க்கு 95 பேரின் பிரதிநிதியாகவே தாம் அங்கு பேசுவதாகக் கூறினார். இதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. சமரசத்திற்கு முயன்றார். ஆனால் இம் மகாநாடெல்லாம் வெறும் ஏமாற்று வித்தை என்பதைக் கண்டுகொண்டார். என்றாலும், தீண்டாதாருக்கு தனி வாக்காளர் தொகுதி அமைப்பதென்பது அக்கிரமம். உயிரைக் கொடுத்தாயினும் அதை எதிர்த்தே தீருவது என்ற முடிவுக்கு வந்தார். காந்திஜி முடிவில் வெறும் கையுடனேயே இந்தியாவுக்குத் திரும்பினார்.

சர்க்காரின் போர்

திரும்பியதும், காங்கிரஸ்மீது சர்க்கார் மீண்டும் போர் தொடுத்துவிட்டது என்பதைக் கண்டார். அவசரச் சட்டங்கள் பல பிறந்தன. பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்கள். பிரபல காங்கிரஸ் தலைவர்கள் கைதியாயினர். அவர் இந்தியாவில் இறங்கிய மறுதினம் 1931 டிசம்பர் 28-ம் தேதி சர்க்கார் போர் முறைகளைக் கண்டித்து வைசிராயைக் கண்டு பேச விரும்பினார். ஆனால், இரு தினங்களுக்குப் பிறகு வைசிராய் பேட்டிதர மறுத்துவிட்டார். இதனால், காந்திஜி விரும்பவில்லை யெனினும் இயக்கத்தை ஆரம்பித்து விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பிறகு 18 மாத காலம் இயக்கம் நடந்ததுடன் லட்சம் பேருக்குமேல்சிறைசென்றார்கள்

பிறகு உபவாசமும், 1933-ம் வருஷம் ஜூலை மாதத்தில் காங்கிரஸ் தலைவர்களின் அந்தரங்க மகாநாடுகளும் நடை பெற்றன. அதன் விளைவாக, காந்திஜி, பேட்டி கோரி வைசிராய்க்குத் தந்தியடித்தார். சத்யாக்கிரகம் வாபஸ் வாங்கப்பட வேண்டும் என்று வைசிராய் பிடிவாதம் செய்தார். கௌரவமான சமரசத்துக்கு வழி இல்லாததினால் எதிர்ப்பைத் தொடர்ந்து நடத்த வேண்டியதாயிற்று. மகாத்மா பிறகு சர்வஜன சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிட்டு, தனிப்பட்டோர் சத்தியாக்கிரகத்தை பிரகடனப்படுத்தினார். அவரே ஆமதாபாததிலிருந்து ராஸ் என்ற இடம் வரை சத்தியாக்கிரக யாத்திரை நடத்துவது என்று திட்டம் போடப்பட்டிருந்தது. ஆனால், ஜூலை 31-ம் தேதி அதாவது யாத்திரையின் முன் தினம் அவர் கைது செய்யப்பட்டார். ஆனால் அவர் மீண்டும் உபவாசம் தொடங்கவே ஆகஸ்டு 23-ம் தேதி விடுதலை செய்யப்பட்டார்.

காங்கிரஸில் சட்டசபை நாட்டம் அதிகமாகவே, 1934 மார்ச்சு

3-ம் தேதி அவர் இயக்கத்தை நிறுத்தி அதைத் தம்முடைய சொந்த ஹோதாவில் நடத்துவதற்கு மட்டும் வரம்பு படுத்திக் கொண்டார்.

ஹரிஜன சேவை

அதன்பின் நிர்மாண திட்டத்தைப் பலப்படுத்துவதிலும் புரட்சிக்காரர்களின் மனதை மாற்றுவதிலும் ஈடுபட்டார். இந்த சமயத்தில் தான் பிரிட்டிஷ் சர்க்கார் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதி அளிக்கும் வகுப்புத் தீர்ப்பை வெளியிட்டனர். அவரது உள் மனம் உபவாசத்தை நாடியது; இந்தத் தீர்ப்பை எதிர்த்துத் தமது உயிரையே பணயமாக வைத்துப் போராடப் போவதாக லண்டனில் அறிவித்தார். உபவாசம் செப்டம்பர் 20-ம் தேதி ஆரம்பமாகி, செப்டம்பர் 26-ம் தேதி முற்றுபெற்றது. ஜாதி ஹிந்துப் பிரதிநிதிகளும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் காந்திஜியின் மனதுக்கு உகந்தபடி சமரச ஒப்பந்தம் செய்துகொண்டனர். புனா ஒப்பந்தம் விசேஷத் தொகுதிகளை ரத்து செய்தது. உபவாசம் முடிவடைந்ததும் 'தீண்டாமை குறிப்பிட்ட கால வரம்புக்குள் ரத்து செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால் மறுபடியும் உபவாசத்தை மேற் கொள்ளுவேன்' என அறிவித்தார். ஹரிஜன சேவா சங்கம் 1933-ம் வருஷம் பிப்ரவரி மாதம் ஆரம்பிக்கப் பட்டது. அதோடு ஹரிஜன் பத்திரிகையும் பிரசுரமாயிற்று.

1933-ம் வருஷம் மே மாதம் அதாவது கைது செய்யப்பட்டு 16 மாதங்கள் கழித்து மகாத்மா 21 நாள் உபவாசத்தை மேற்கொண்டார். தம்மையும் சகாக்களையும் புனிதப்படுத்துவதே இதன் நோக்கம். பிறகு மூன்று மாதங்கள் கழித்து மீண்டும் 1934 ஆகஸ்டில் உபவாசம் இருந்தார். சனாதனத் தலைவரைச் சீர்திருத்தவாதிகள் தாக்கியதற்குப் பிராயச்சித்தமாக ஒரு வாரத்துக்கு இதை மேற்கொண்டார். தனிப்பட்டோர் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டதும் காந்திஜி கைது செய்யப்பட்டு 4-ம் தேதி விடுதலை செய்யப்பட்டார். எரவாடாவை விட்டு வெளியேறி புனாவில் சென்று வசிக்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டது. உடனே கைது செய்யப்பட்டு ஒரு வருஷ சிறைத் தண்டனை அளிக்கப்பட்டார். முன்பு அவருக்குச் சிறையிலிருந்தே 'ஹரிஜன்' பத்திரிகை நடத்த அளிக்கப்பட் டிருந்த வசதி ரத்து செய்யப்பட்டது. இதைச் சகிக்கமுடியாது. இவர் இரு முறை இப் பிரச்னை மீது உபவாசம் இருந்தார். அபாயகரமான நிலையில் இவர் புனா ஆஸ்பத்திரிக்குளடுத்துச் செல்லப்பட்டார். நிபந்தனை இல்லாமல் 23-ம் தேதி விடுதலை செய்யப்பட்டார். சுதந்திரமிருந்தும் அவர் அரசியலிலிருந்து விலகிவிட்டார். பிறகு மூன்று வருஷங்கள் கிராமக் கைத் தொழில்கள், தீண்டாமை ஒழிப்பு, கஷ்ட நிவாரணம் முதலிய காரியங்களில் ஈடுபட்டிருந்தார்.

சமஸ்தான மக்களுக்குச் சேவை

1937-ம் வருஷம் எட்டு மாகாணங்களில் காங்கிரஸ் பதவிக்கு வந்து அவரது கண்காணிப்பில் உழைத்தது. மாகாண சுயாட்சி சமஸ்தான மக்களிடையே பொறுப்பாட்சி வேட்கையைக் கிளப்பியது. காந்திஜியும் கலந்துகொள்ள வேண்டியதாயிற்று. அதில் அவர்

ஜாக்கிரதையாகவே இயக்கத்தை கவனித்தார். 1939-ம் வருஷம் ராஜகோட்டை சமஸ்தானக் கிளர்ச்சியில் நேரடியாகக் கலந்து கொண்டார். தாக்கூர் சாஹேப் தமது வாக்குறுதிகளை மதித்து நிறைவேற்றும்படி செய்விக்க, அவர் மேற்கொண்ட உபவாசம் அவரது பொறுப்புணர்ச்சியையும் உயர்ந்த குணசீலத்தையும் காட்டுகிறது. இதற்கிடையில் ஸ்ரீ சுபாஷ் போஸ் காங்கிரஸ் தலைமைப் பதவிக்காக முயன்றதை ஆட்சேபித்தார். அதன் விளைவாக ஸ்ரீ போஸ் அவ்வருஷ மத்தியில் ராஷ்டிரபதி பதவியை ராஜிநாமாச் செய்தார்.

காந்திஜி நடத்திய ஹிந்து-முஸ்லிம் சமரச முயற்சிகள் பலனளிக்காமல் போயின. ஸ்ரீஜின்னா 1940-ல் தமது இருதேசக் கொள்கையைப் பிரகடனம் செய்தார். மூன்றாவதுகட்சியாகியபிரிட்டிஷ் சர்க்கார் இருப்பதுதான் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறதென்று காந்திஜி கருதலானார்.

இரண்டாவது உலக யுத்தம் மூண்டது. பிரிட்டனின் யுத்த நோக்கங்கள் என்ன? இந்திய சுதந்திரத்திற்கு அவை எப்படி பிரயோகிக்கப்படப் போகின்றன? என்பவற்றைச் சொல்லும்படி காந்திஜி பிரிட்டனைக் கேட்டார். பிரிட்டிஷ் சர்க்கார் வழக்கம்போல் குடியேற்ற நாட்டு அந்தஸ்தே தங்கள் இறுதி லக்ஷியமென்ற பல்லவியைப் பாடி பிரதான கட்சிகளடங்கிய ஒரு ஆலோசனைக் கமிட்டியை நியமிப்பதாகச் சொன்னார்கள். காந்திஜிக்கு இது மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது.

இதன்பேரில் யுத்தத்தில் பிரிட்டனுக்கு எவ்வித உதவியையும் அளிப்பதில்லை என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்தது. இதற்கு முதல் நடவடிக்கையாக காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜினாமாச் செய்தன.

இதற்கிடையில் ஜின்னாவின் பாகிஸ்தான் பிரசாரம் வலுத்து வகுப்புநிலைமை மேலும் மோசமாயிற்று.

1940 ஜூனில் பிரான்ஸ் வீழ்ச்சிக்குப்பின் நேசநாட்டினர் நிலைமை மோசமாகிவிடவே இரண்டு நிபந்தனைகளின் பேரில் யுத்த முயற்சிகளில் ஒத்துழைப்பதாகக் காங்கிரஸ் சொல்லிற்று: அதாவது உடனடியாக சுதந்திரப் பிரகடனம் செய்து தேசிய சர்க்கார் அமைக்க வேண்டுமென்பது. ஆனால் நிர்வாக சபை விஸ்தரிப்புக்கு மேல் ஒன்றும் முடியாது என்று சொல்லிவிட்டார் வார்டு லின்லித்கோ.

காங்கிரஸ் பம்பாயில் கூடி காந்திஜியிடம் தலைமையை ஒப்புவித்து சுதந்திரப்போரில் அவருடன் ஒத்துழைப்பதெனத் தீர்மானித்தது.

1940-ல் காந்திஜி தனிப்பட்டோர் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார். இதன் மூலம் யுத்தத்தை எதிர்க்க மக்களுக்குள்ள உரிமை ஸ்தாபிக்கப்பட்டது.

1942-ம் வருஷ ஆரம்பத்தில் ஜப்பானுக்கு மள மளவென்று வெற்றிமேல்வெற்றிகிடைத்ததும் சர்ச்சில் சர்க்கார் சில பிரேரணைகளுடன் சர் கிரிப்ஸை அனுப்பினர். காந்திஜி இதை "ஒரு பின் தேதியிட்ட செக்" என்று சொல்லி நிராகரித்துவிட்டார்.

கிரிப்ஸ் பேச்சு முறிந்த பின் நாட்டில் அரசியல் நெருக்கடி உக்கிரமாயிற்று. ஸ்ரீ சுபாஷ் சந்

திர போஸ் தப்பிச் சென்றார். ஜப்பான் இந்தியாவை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது. தேசிய சர்க்கார் இருந்தால்தான் பயமுறுத்திக்கொண்டிருந்த ஜப்பானியப் படையெடுப்பை எதிர்க்க முடியும் என்று காந்திஜி கருதினார். இந்தப் பகைப் புலனில்தான் "வெள்ளையனே வெளியேறு" என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற கோஷம் தோன்றியது.

இந்தியாவின் நிலைமையை விளக்கிக் காந்திஜி சீனத் தலைவர் சியாங்கே ஷேக்குக்கும் அமெரிக்கருக்கும் கடிதங்கள் எழுதினார்.

திடீரென்று ஆகஸ்டு 9௳ காலை காந்திஜியும் காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். அடக்குமுறைகள் தலைவிரித்தாடின. அவ்வளவுக் கவ்வளவு மக்களின் புரட்சி வேகம் ஓங்கிற்று. அப்போது ஏற்பட்ட கலவரங்களுக் கெல்லாம் காங்கிரஸ் தலைவர்கள்தான் காரணம் என்று பிரிட்டிஷ் சர்க்கார் பழி சுமத்திற்று. சர்க்காரின் பலாத்காரம்தான் காரணம் என்று சொல்லி காந்திஜி மறுத்தார்.

சர்க்காரின் கொள்கையைக் கண்டு வேதனையடைந்து 1943 பிப்ரவரி 10௳ முதல் மூன்று வாரங்களுக்கு உபவாசமிருந்தார்.

தலைவர்களை விடுதலை செய்யும்படி கேட்ட பொதுமக்களின் கோரிக்கைக்கு அதிகாரிகள் செவி சாய்க்க வில்லை.

காந்திஜியை விடுதலை செய்ய லார்டு லின்லித்கோ மறுத்ததை ஆட்சேபித்து நிர்வாக சபையிலிருந்துமோடி, சர்க்கார், ஆனே மூவரும் ராஜினாமாச் செய்தனர்.

லின்லித்கோவுக்குப் பதில் 1943 அக்டோபரில் வேவல் வைஸ்ராயாக வந்தார். ஆனால் சர்க்கார் கொள்கை மாறவில்லை. முட்டுக்கட்டை நீடித்தது.

ஆகாகான் அரண்மனையில் காவலில் வைக்கப்பட்டிருந்த போது காந்திஜிக்கு இரண்டு துயரங்கள் ஏற்பட்டன. அவருக்கு வலது கை போலிருந்த ஸ்ரீ மகா தேவ தேசாயும், வாழ்க்கைத் துணைவி ஸ்ரீமதி கஸ்தூரி பாயும் பிரிந்தனர்.

காந்திஜியின் தேக நிலை மோசமானதும் 1944 ஆகஸ்டு 6௳ விடுதலை செய்யப்பட்டார். ஆனால், காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் மற்றவர்களும் சிறைகளுக் குள்ளேயே இருந்தனர்.

காந்திஜி வெளியே வந்ததும், பிரசித்தி பெற்ற ஸி. ஆர். திட்டத்தின் மீது ஜின்னாவுடன் சமரசப் பேச்சுகள் நடத்தினார். இது பலனளிக்கவில்லை. வேவல் 1945 ஜூலை 29-ம் தேதி, முதல் சிம்லா மகாநாட்டைக் கூட்டினார். காந்திஜியின் சொற்படி காங்கிரஸ் எவ்வளவோ விட்டுக் கொடுத்தும் ஜின்னா இணங்கவில்லை. அந்த மகாநாடும் பலனளிக்கவில்லை.

பொதுத் தேர்தல்கள் நடந்தன. சிந்து, வங்காளம் இரண்டு நீங்கலாக மற்றெல்லா மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டன. பஞ்சாபில் கூட்டு மந்திரி சபை ஏற்பட்டது.

இந்தியாவிடம் அதிகாரத்தை மாற்றிவிட பிரிட்டன் திடசங்கல்பம் கொள்ளாதென்று 1946 பிப்ரவரியில் பிரிட்டிஷ் மந்திரி ஆட்சி பிரகடனம் செய்தார். இதைத் தொடர்ந்து மந்திரி சபை தூது கோஷ்டி ஒன்று வந்தது. இந்தப் பேச்சுவார்த்தைகளில் காந்திஜி முக்கியப் பங்கெடுத்துக்

கொண்டார். தூதுகோஷ்டித் திட்டம்பற்றி வியாக்கியானத் தகராறு ஏற்பட்டது. கடைசியில் வேவல் நேருவை அழைத்து இடைக்கால சர்க்கார் அமைக்கச் சொன்னார். ஜின்னா ஒத்துழைக்க மறுத்துவிட்டார். நேரு சர்க்கார் அமைப்பை எதிர்த்து முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கைத் தினம் கொண்டாடியது. இதன் விளைவாக கல்கத்தா, நவகாளி, பீஹார் ஆகிய இடங்களில் கோர சம்பவங்கள் நிகழ்ந்தன. இவைகளைக் கண்டு பெரும் வேதனை அடைந்த மகாத்மா நவகாளியிலும் பீஹாரிலும் சமாதான யாத்திரை செய்து அற்புதமாகச் சமாதானம் நிலவச் செய்தார்.

இதற்கிடையில் லீகை சர்க்காருக்குள் நுழைக்க வேவல் யுக்தி செய்தார். இதன் விளைவாக சர்க்கார் இரண்டுபட்டது.

வேவலுக்குப் பதிலாக மவுண்ட்பேட்டன் வைஸ்ராயாக வந்தார். 1948 ஜூனில் அளிப்பதாகச் சொன்ன சுதந்திரத் தேதியை மாற்றி 1947 ஆகஸ்டு 15-ம் தேதியே அளித்து விடுவதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் பிரகடனம் செய்தது.

காந்திஜியும் காங்கிரஸ் தலைவர்களும் மனக் கஷ்டத்துடனேயே பிரிவினைக்கு ஒத்துக்கொண்டனர். பிரிவினைக்குப் பின்னராவது அமைதி நிலவுமென்று நினைத்தனர். ஆனால் நடந்ததோ வேறு.

இந்திய சுதந்திரத்திற்காக தமது வாழ்க்கையையே அர்ப்பணஞ்செய்த காந்திஜி ஆகஸ்டு 15உ பிரிட்டிஷ் ஆட்சி ஒழிவதைக் கண்ணுற்றும் தேசத்திலுள்ள வகுப்புவாத நிலைமையைக் கண்டு மிகவும் கவலை கொண்டார்.

எத்தனை தடவைகள் மன்னிக்கவேண்டும்?

"தீர்க்கதரிசியவர்களே! ஒரு வேலைக்காரனை நான் எத்தனை தடவைகள் மன்னிக்கவேண்டும்?" என்று ஒருவன் நபிகள் நாயகத்திடம் கேட்டான். "வேலைக்காரனை ஒருநாளைக்கு எழுபது தடவைகள் நீ மன்னிக்கவேண்டும்" என்றார் நபிகள் நாயகம்

பஞ்சாபிலும் அதைத் தொடர்ந்து டில்லியிலும் வட இந்தியாவின் வேறு சில இடங்களிலும் கோர சம்பவங்கள் நிகழ்ந்தன.

செப்டம்பரில் தமது உபவாசத்தினால் காந்திஜி ஆச்சரியகரமாக கல்கத்தாவில் சமாதானத்தை நிலைநாட்டினார். உலகமே இதைக் கண்டு வியந்தது.

பிறகு டில்லிக்கு வந்தார் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு ஆளான பஞ்சாப் அகதிகள் டில்லியில் வந்து குவிந்ததின் விளைவாய் முஸ்லிம்கள் அபாயகரமான நிலைமையி லிருந்தனர். இங்கு சௌஜன்யத்தை நிலைநாட்ட காந்திஜி அரும்பாடு பட்டார். அன்றாடம் பிரார்த்தனைப் பிரசங்கங்களில் உபதேசங்கள் செய்தார். பாகிஸ்தானின் போக்கைக் குறித்தும் எச்சரித்தார். கடைசியில் தீவிர வைராக்கியத்துடன் வகுப்பு சௌஜன்யத்தை ஏற்படுத்த காலவரையறையில்லா உபவாசத்தை ஜனவரி 13உ மேற்கொண்டார். எல்லா வகுப்புத் தலைவர்களும் சேர்ந்து உத்தரவாதம் அளித்ததின் பேரில் ஆறும் நாள் உபவாசத்தை நிறுத்தினர்.

> **ஆத்மாவின் சஞ்சாரம்**
>
> சரீரத்தில் வசிக்கும் ஆத்மா எப்படி குழந்தைப் பருவத்திலும், வாலிபத்திலும், வயோதிகத்திலும் பயணம் செய்கிறதோ, அதே போல, ஆத்மா ஒரு சரீரத்திலிருந்து மற்றொரு சரீரத்துக்குப் பயணம் செய்கிறது. இதற்காக அறிஞர்கள் உள்ளத்தில் வருத்தமடைவதில்லை.
>
> —பக்வத் கீதை

உலகமே கவலை நீங்கிப் பெருமூச்சு விட்டது.

26-ம் தேதி பிரார்த்தனைக் கூட்டத்தில் ஒரு புத்திகெட்ட இளைஞன் ஒரு எறிகுண்டை வீசினான். இது காந்திஜிக்கு ஒருகெஜத் திற்கப்பால் வெடித்தது. காந்திஜி இதை பொருட்படுத்தவில்லை. அந்த இளைஞனின்பால் கருணை காட்டுமாறு கேட்டுக் கொண்டார். தாம் ஆண்டவன் கையி லிருப்பதால் உயிரைப் பற்றித் தமக்குக் கவலையே இல்லை என்றார் காந்திஜி. ஆனால் ஜனவரி 30-ம் தேதியன்று மாலை 5-10க்கு பிரார்த்தனைக்காகக் காந்திஜி பிர்லா மாளிகையை விட்டு வெளியே வந்துகொண்டிருந்த போது ஒரு வெறி பிடித்த மராத்திக்காரன் அவரை நான்கு முறை கைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டான். ஸ்தலத்திலேயே மயங்கி விழுந்த மகான் 5.40க்கு அமரராய்விட்டார்.

இவ்வளவு சீக்கிரம் இத்தகைய பேரிடி விழுமென்று யாரும் நினைக்க வில்லை.

மகாத்மா வாழ்க்கையில் சில முக்கிய சம்பவங்கள்

1869

அக்டோபர் 2-ம் தேதியன்று மகாத்மா காந்தி அவதரித்தார்.

1893

தென் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார்.

1902

மூன்றும் முறையாகத் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார்.

1906

ஆசியாக்காரருக்கு எதிரான சட்டத்தை சாத்வீகமாக எதிர்க்கப் பிரதிக்ஞை செய்து கொண்டார்.

1913

செப்டம்பரில் 3 பவுன் அபராதமும் மீண்டும் ஒத்துழையாமை ஆரம்பமும்.

அதே வருஷத்தில் காந்தி-ஸ்மட்ஸ் ஒப்பந்தம்.

1916

ஆமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆசிரமம் ஸ்தாபித்தார்.

1918

பிப்ரவரி 28-ம் தேதியன்று ரௌலட் மசோதாவை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்யப் பிரதிக்ஞை செய்துகொண்டார்.

1919

ஏப்ரல் 18-ம் தேதியன்று சத்தியாக்கிரகத்தை நிறுத்தி உபவாசம் ஆரம்பித்தார்.

1918—1919

கிலாபத்தையும் பஞ்சாப் சம்பவங்களையும் எதிர்த்துக் கிளர்ச்சி.

1920

கெய்சரி ஹிந்த் மெடலைத் திருப்பிக் கொடுத்துவிட்டு ஆகஸ்ட் முதல் தேதியன்று ஒத்துழையாமை ஆரம்பித்தார்.

1921

மே மாதத்தில் லார்ட் ரீடிங்குடன் சந்திப்பு.

1922

லார்டு ரீடிங்குக்கு இறுதிக் கடிதம்.

பிப்ரவரி 14-ம்தேதி யன்று சௌரி சௌரா சம்பவம்.

மார்ச் 10-ம் தேதியன்று ஆமதாபாத்தில் காந்திஜி கைது.

அதே மாதத்தில் காந்திஜி விசாரணையும் சிறைத் தண்டனையும்.

1924

பிப்ரவரியில் சிறையி லிருந்து விடுதலை.

எப்ரலில் "யங் இந்தியா" பத்திரிகையின் ஆசிரியர் பதவியை மீண்டும் ஏற்ருர்.

செப்டம்பர் 11-ம் தேதி உபவாசமும் டில்லி மகாநாடும்.

டிசம்பரில் பெல்காம் காங்கிரஸ் தலைவரானுர்.

1929

டிசம்பரில் லாகூர் காங்கிரசும், சுதந்திரப் பிரேரணையும்.

1930

பிப்ரவரி 15-ம் தேதி மகாத்மா காந்தியை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி சர்வாதிகாரியாக நியமித்து அவருடைய ஒத்துழையாமைத் திட்டத்தை அமல் நடத்தத் தீர்மானித்தது.

மார்ச்சு 4-ம் தேதி யன்று லார்டு இர்வினுக்கு காந்திஜி கடிதம் எழுதினுர்.

மார்ச்சு 12-ம் தேதி தண்டி மஹா யாத்திரை.

எப்ரல் 6-ம் தேதி யன்று தண்டியில் உப்புச் சட்டத்தை மீறினுர்.

1931

ஜனவரி 26-ம்தேதி கைதியானுர்.

மே 5-ம் தேதி விடுதலையடைந்தார்.

ஆகஸ்டு 29-ம் தேதி இங்கிலாந்துக்குப் பயணம்.

டிசம்பர் 28-ம் தேதி இந்தியா திரும்பினுர்.

1932

ஜனவரி 4-ம் தேதி யன்று மீண்டும் கைதியானுர்.

செப்டம்பர் 20-ம் தேதி நடுப்பகலில் உபவாசம் ஆரம்பித்தார். நிபந்தனையின் பேரில் விடுதலையடைய மறுத்துவிட்டார்.

செப்டம்பர் 26-ம் தேதி மாலை 5 மணிக்கு உபவாசத்தை நிறுத்தினுர்.

நவம்பர் 5-ம் தேதி தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் சம்பந்தமாக முதல் அறிக்கை விடுத்தார்.

1933

மே மாதம் 8-ம் தேதி பகல் 12 மணிக்கு 21 நாள் உபவாசம் ஆரம்பம். அன்று இரவு 9 மணிக்கு விடுதலை.

மே 29-ம் தேதி பகல் 12-30 மணிக்கு உபவாசம் நின்றது.

ஜுலை 26-ம் தேதி சபர்மதி ஆசிரமத்தைக் கலைக்கத் தீர்மானித்தார்.

ஜுலை 31-ம் தேதி மற்றும் 33 பேரோடு காந்திஜி கைது செய்யப்பட்டு சபர்மதி சிறையில் வைக்கப்பட்டார்.

ஆகஸ்டு 4-ம் தேதி யன்று காந்திஜி விடுதலை செய்யப்பட்டு, தடையை மீறியதாக மீண்டும் கைது செய்யப்பட்டார்.

ஆகஸ்டு 16-ம் தேதியன்று மகாத்மா காந்தி உபவாசம். 21-ம் தேதி ஸாஸுன் ஆஸ்பத்திரிக்கு அகற்றப்பட்டார். ஆகஸ்டு 23-ம் தேதி நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார். ஒரு வருஷத்துக்குக் காந்திஜி தீவிர சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைத்தார்.

1934

பீகாரில் பூகம்பப் பிரதேசத்துக்குக் கஷ்ட நிவாரண வேலைக்

காக காந்திஜி விஜயம் செய்து சுற்றுப் பிரயாணம் செய்தார்.

ஏப்ரல் 7-ம் தேதி சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைப்பதாக காந்திஜி அறிக்கை விடுத்தார்.

ஜுன் 25-ம் தேதி காந்திஜி மீது வெடிகுண்டு வீசப்பட்டது. தெய்வாதீனமாகத் தப்பினார்.

ஆகஸ்டு 7-ம் தேதி மகாத்மா காந்தி ஒருவார உபவாசத்தை ஆரம்பித்தார்.

செப்டம்பர் 4-ம் தேதியன்று காங்கிரசி லிருந்து காந்திஜி விலகினார்.

1935

மார்ச் 23-ம் தேதி மகாத்மா காந்தி 4 வார மௌன விரதம் ஆரம்பித்தார்.

1936

ஏப்ரில் 30-ம் தேதி சேவாகிராமத்தில் மகாத்மா வாசம். டிசம்பர் 27-ந்தேதியன்று காந்திஜி பெய்ஸ்பூர் காங்கிரஸில் பிரசங்கம் செய்தார்.

1937

இந்தியப் பிரச்னை பற்றி லார்டு ஜெட்லண்ட் ஏப்ரல் 9-ம் தேதி பார்லிமெண்டில் அறிக்கை சமர்ப்பித்தார்.

ஜுலை 17-ம் தேதி காங்கிரஸ் மந்திரிசபை பற்றிக் காந்திஜி ஒரு அறிக்கை விடுத்தார்.

1938-39

சமஸ்தானப் பிரச்னைகளில் காந்திஜி சிரத்தை காட்டினார் 1939 ஜனவரி மாதம் சுபாஷ் போஸ் காங்கிரஸ் அக்ராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை ஆட்சேபித்து காந்திஜி அறிக்கை.

மார்ச்சு மாதம் ராஜகோட்டை மன்னர் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று உபவாசமிருந்தார். வெற்றி பெற்றார்.

யுத்தப்பிரச்னையில் சமரசமேற்படாததால் அக்டோபர் மாதத்தில் காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமாச் செய்தனர்.

1940

சட்ட மறுப்பு இயக்கம் அக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1941

ஏப்ரல்: சட்ட மறுப்பு இயக்கத்தை வாபஸ் பெற முடியாதென்றும் அஹிம்சா தர்மத்தில் தமக்குப் பரம நம்பிக்கை இருக்கிறதென்றும் மகாத்மா அறிக்கை விடுத்தார்.

மே 6: ஹிந்து-முஸ்லிம் கலகத்தைக் கண்டு வருந்தி அறிக்கை விடுத்தார்.

டிசம்பர் 30: காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து காந்திஜி விலகினார் எனக் காரியக் கமிட்டி தீர்மானம்.

1942

1942 ஜனவரி 8: காந்திஜி காங்கிரஸை விட்டுவிலகியது ஏன் என்பதை ஆஜாத் விளக்குகிறார். ஜனவரி 15-ம் தேதி நேருதான் தம்முடைய வாரிசு என்று காந்திஜி அறிவித்தார்.

பிப்ரவரி 15: 'ஜெர்மனியர் ஜெயித்தால்?' என்ற கட்டுரையை ஹரிஜனில் காந்திஜி எழுதினார்: பிப்ரவரி 18: கல்கத்தாவில் சீன சேனாதிபதி சியாங்கே ஷேக்கை மகாத்மா சந்தித்தார்.

மார்ச்சு 11: இந்தியாவுக்கு கிரிப்ஸ் தூது கோஷ்டி வருமென்று காமன்ஸ் சபையில் ஸ்ரீ சர்ச்சில் அறிவித்தார்: 27-ம் தேதி: புதுடில்லியில் சர் கிரிப்ஸை மகாத்மா சந்தித்தார். 29: பாஷாவாரி மாகாணப் பிரிவினைத் தீர்மானம் காங்கிரஸில் நிறைவேறிய

தற்குத் தாம் காரண பூதரென்று காந்திஜி கூறுகிறார்.

29 : கிரிப்ஸ் திட்டம் வெளியானது. 30 : கிரிப்ஸ் ரேடியோப் பிரசங்கம்.

ஏப்ரல் 2 : கிரிப்ஸ் தூது முறிந்ததென்று ஆஜாத் சொன்னார். 11 : கிரிப்ஸ் திட்டம் வாபஸ் பெறப்பட்டதென்று சர் கிரிப்ஸ் அறிவிப்பு.

மே 1 : யுத்தம் பற்றி அ.இ.கா.க. தீர்மானம் நிறைவேறியது.

ஜூன் 9 : "இந்தியாவைவிட்டு வெளியேறு" இயக்கம்—அமெரிக்க நிருபர் லூயி பிஷருக்கு காந்திஜி விளக்கம்.

ஜூலை 26 : "ஒவ்வொரு ஜப்பானியனுக்கும்" என்ற அறிக்கையை காந்திஜி விடுத்தார்.

ஆகஸ்டு 6 : பக்கிள் அறிக்கை —காந்திஜி அம்பலப்படுத்தினார். 7 : சீனாவுக்குக் காந்திஜியின் செய்தி. பம்பாயில் அ. இ. கா. க. கூட்டம். 8 : "காரியம செய். அல்லது உயிரை விடு" என்ற காந்திஜியின் சங்கநாதம் ; 9: காந்திஜி கைது செய்யப்பட்டு ஆகாகான் அரண்மனைக்குக் கொண்டு போகப்பட்டார். காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டு எங்கோயோ கொண்டு போகப்புட்டனர். லைவஸ்ராய் மீது காந்திஜியின் குற்றச்சாட்டு; 14 : ஆகாகான் அரண்மனையில் ஸ்ரீ மகாதேவ தேசாய் காலமானார்.

1943

1943 பிப்ரவரி 10: காந்திஜி உபவாசம் ஆரம்பம் ; 11 : காந்தி—வைசிராய் கடிதப் போக்குவரத்து பிரசுரம் ; 13: டாட்டன் ஹாம் துண்டுப் பிரசுரம் வெளியாதல் ; 15 : மத்திய அசெம்பிளியில் உபவாசம்பற்றி தீர்மானிக்கப்பட்டது. 17 : மோடி, சர்க்கார், ஆனே முதலியோர் காந்திஜி உபவாச விஷயமாக சர்க்கார் காட்டிய மனப் பான்மையை ஆட்சேபித்து ராஜிநாமாச் செய்தனர். 26 : காந்திஜியை ராஜாஜி சந்தித்தார்.

மார்ச்சு 3 : காந்திஜி உபவாசம் நின்றது.

மே 4: ஸ்ரீ ஜின்னாவுக்கு காந்திஜி கடிதம் எழுதினார் ; அது அனுப்பப்படவில்லை. காந்திஜியை விடுதலை செய்ய வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்காருக்கு பெர்னார்ட் ஷாவின் வேண்டுகோள். 18 : காந்திஜியின் கடிதம் பற்றி ஜின்னாவின் சாரசாரமான அறிக்கை.

1944

பிப்ரவரி 22 : ஆகாகான் அரண்மனைச் சிறையில் கஸ்தூரி பாய் காந்தி காலமானார்.

மே 8: தேக நிலைமையை உத்தேசித்து காந்திஜி நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்.

ஜூன் 17 : காந்திஜிக்கும் சர்க்காருக்கும் நடந்த கடிதப் போக்குவரத்துகள் பிரசுரம்.

ஜூலை 13 : கெல்டர் பேட்டி ; ஸி. ஆர். காந்தி திட்டம் ; 18 : ஜின்னா—ஸி. ஆர். கடிதப்போக்குவரத்துப் பிரசுரம்.

ஜூலை 14 : சர்ச்சிலுக்குக் காந்திஜி கடிதம்; செப்டம்பர் 9: ஜின்னாவைக் காந்திஜி சந்திக்கிறார்.

1946

பிப்ரவரி—சென்னையில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு மெம்பர்களைக் காந்திஜி சந்திக்கிறார். 19 : பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூது கோஷ்டி வருமென்று அறிவிப்பு.

ஏப்ரல் 24: ஸ்ரீ. ஹெர்பர்ட் ஹூவரை காந்திஜி சந்தித்தார்.

ஜூன் 2 : மே 16-ம் தேதி பிரிட்டிஷ் திட்டத்தைக் காந்திஜி புகழ்கிருர்.

25: இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்ட காங்கிரசைப் பின்பற்று மாறு ஜனங்களுக்குக் கட்டளை.

செப்டம்பர் 1 : லீக் இல்லாமல் இடைக்கால சர்க்கார் அமைக்கப்பட்டது.

அக்டோபர் 28 : இடைக்கால சர்க்காரில் லீகும் சேர்ந்தது.

1945 டிசம்பரிலும், 46 ஜனவரியிலும் வங்காளத்திலும், அஸ்ஸாமிலும் காந்திஜி சுற்றுப் பிரயாணம்.

1946 ஜனவரிலும் பிப்ரவரியிலும் தென்னிந்தியாவில் காந்திஜியின் சுற்றுப் பிரயாணம். பிப்ரவரி 3: மதுரை ஸ்ரீ மீனுக்ஷி ஆலயத்துக்கு மகாத்மா விஜயம்; பழனிக்கு விஜயம் ; 10 : ஹரிஜன் பத்திரிகை ஆரம்பம்; 17: பட்டினியைப் போக்க காந்திஜியின் 8 அம்சதிட்டம்.

அக்டோபர் 18 : வங்க மாதர்களுக்கு மகாத்மா புத்திமதி; அதே மாதத்தில் நவகாளி சுற்றுப் பிரயாணம்.

நவம்பர் 21 : கலகப் பிரதேசங்களில் ஒண்டியாக வேலை செய்ய மகாத்மா தீர்மானம்.

டிசம்பர் 11 : கால் நடையாக கிராமங்களில் யாத்திரை.

1947

ஏப்ரல் 16 : வகுப்பு ஒற்றுமைக்கு காந்தி-ஜின்ஞு கூட்டறிக்கை.

ஆகஸ்டு 15 : இந்தியா சுதந்திரமடைந்தது. காந்திஜி கல்கத்தாவில் உபவாசம்; 18 : 'என் வாழ்நாளில் பாக்கி காலத்தை நான் பாகிஸ்தானில் கழிப்பேன் என்ருர் மகாத்மாஜி.

செப்டம்பர் 1: கல்கத்தாவில் காந்திஜி உபவாசம். 4: உபவாசம் நின்றது.

நவம்பர்-டிசம்பர்:கண்ட்ரோல்களை எதிர்த்து காந்திஜி பிரசாரம்.

1948

வகுப்பு ஒற்றுமையை வற்புறுத்தி ஜனவரி 13-ம் தேதியன்று காலை 11 மணிக்கு காலவரையறையின்றி உண்ணு விரதம் ஆரம்பித்தார்.

17-ம் தேதி உண்ணுவிரதத்தை நிறுத்த 7 நிபந்தனைகள் விதித்தார்.

18-ம் தேதியன்று பகல் 12-40 மணிக்கு உபவாசம் நின்றது. மௌலானு ஆஜாத் கையினல் ஆரஞ்சுப் பழரசம் வாங்கி அருந்தினர்.

20-ம் தேதியன்று காந்திஜியின் பிரார்த்தனைக்கூட்டத்தில் யாரோ ஒருவன் அவரை நோக்கி நாட்டு வெடி குண்டு ஒன்றை வீசினன்.

21-ம் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசுகையில், குண்டு வீசியவனிடம் கருணை காட்டும்படியும் அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்குமாறு பகவானைப் பிரார்த்திப்பதாகவும் கூறினர்.

1948 ஜனவரி 30-ந் தேதி இறைவன் திருவடி அடைந்தார்.

பிப்ரவரி முதல் தேதி அல்லது 2-ம் தேதி சேவாக்கிராமத்திற்குச் சென்று ஒரு மாதம் தங்கியிருந்து உடம்பைத் தேற்றிக் கொள்ளத் திட்டம் போட்டிருந்தார். ஆனல் கடவுள் சித்தம் வேறு விதமாக இருந்தது.

சக்தி

மாதப் பத்திரிகை.

○

தனிப் பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0	10
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	8	0
2 வருஷம்	15	0

○

சக்தி காரியாலயம்

சென்னை 14

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்

அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்.

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

353. A. E.

கேசரி குடீரம் லிட. மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள்

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத் பெஜவாடா, மதுரை.

For the Delightfully Refreshing Soap

KERALA SOAP INSTITUTE, CALICUT

F&S-193

கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்

கள்ளிக்கோட்டை

மருந்து சாப்பிட ஆரம்பித்ததுமே கபத்தைக் கலைத்து, மூச்சுத் திணறலை மட்டுப்படுத்துவதுடன், மலச் சிக்கலை மாற்றி ஜீரண சக்தியைக் கொடுத்து, உடலுறுதி பெற வேலை செய்கிறது. புரோகித் ஸ்வாஸஹரிதான் இந்த நோய்க்கு கைகண்ட மருந்து. நுரையீரலை வலுவாக்கி, ஆஸ்த்மாவை அறவே தீர்க்கிறது. ஈரல் கோளாறு, மலச் சிக்கல், பித்தாசயக் கோளாறு, மூச்சுத் திணறல், இருமல், சுவாஸாசயக் கோளாறு முதலியவற்றிற்கு ஸ்வாஸஹரி ப்ளெயின் (நீலப்பாக்கிங்) சிறந்தது.

சிவப்பு பாக்கிங் உள்ள ஸ்வாஸஹரி காம்பௌண்ட் நீடித்த கடுமையான வியாதிகளை குணப்படுத்தும்.

3, 6, 12 அவுன்ஸ் ஸைஸ்களில் கிடைக்கும். விலை முறையே ரூ. 3-6-0 ரூ. 5-12-0, ரூ. 10-0-0. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸ்டாகிஸ்ட்டுகள் :

மெஸர்ஸ். அப்பா அண்ட் கம்பெனி
கெமிஸ்ட்ஸ், சைனபஜார், சென்னை.

Customers are requested to Communicate in English

ஆஸ்த்மா, சுவாஸாசய
நோய்களுக்கு டாக்டர்கள்
விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR.

காந்தியாருக்கு ஞாபகச் சின்னம்

ஈ. வெ. ராமசாமி

காந்தியாருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது அவசியம். அது நிரந்தரமானதாகவும், அதிசயமான பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும். அதற்கு என் தாழ்மையான யோசனை :

1. இந்தியாவுக்கு ஹிந்துஸ்தான் என்கிற பெயருக்குப் பதிலாக காந்தி தேசம் அல்லது காந்திஸ்தான் என்று பெயரிடப் படலாம்.

2. இந்து மதம் என்பதற்குப் பதிலாக காந்தி மதம் அல்லது காந்தினிசம் என்பதாக மாற்றப் படலாம்.

3. இந்துக்கள் என்பதற்குப் பதிலாக மெய்ஞ்ஞானிகள் அல்லது சத்ஞானஜன் என்று பெயர் மாற்றப்படலாம்.

4. காந்தி மதக் கொள்கையாக இந்தியாவில் ஒரே பிரிவு மக்கள் தான் உண்டு. வர்ணாஸ்ரம தர்ம முறை அநுசரிக்கப்பட மாட்டாது. ஞானமும் (அறிவும்) பக்ஷமும் (அன்பும்) அடிப்படையாகக் கொண்டது, சத்து, அதாவது சத்தியமே நித்தியமானது என்பதான சன்மார்க்கங்களைக் கொண்டதாகும் என்பதாக ஏற்படுத்தி, கிறிஸ்து ஆண்டு என்பதற்குப் பதிலாகக் காந்தி ஆண்டு என்று துவக்கலாம்.

இப்படிப்பட்ட காரியங்கள் செய்வதனால்தான் காந்தியார், புத்தர், கிறிஸ்து, மகம்மது முதலிய பெரியார்களுக்கு ஒப்பானவராகவும், இன்றைய நிலைமைக்குத் தோன்றிய ஒரு சீர்திருத்த மகான் ஆகவும் உலகமே கருதும் படியான நிலை ஏற்படும். உலக மக்களால் நாம் நன்கு மதிக்கப் படுவோம். இந்தியாவுக்கு சாபக் கேடு என்று எது எது சொல்லி வரப்பட்டதோ அதெல்லாம் மறைந்துவிடும். ஆர்ய சமாஜ், சீக் சமாஜ், பிரம்ம சமாஜ் என்பது முதலிய எத்தனையோ புதிய மார்க்கங்கள் (கொள்கைகள்) ஏற்பட்டும் ஒன்றும் இந்தியாவை வெற்றி கொள்ளவில்லை. ஆனால் பௌத்த மதம், கிறிஸ்து மதம், முகம்மதிய மதம் ஆகியவை வெற்றிபெற்றுவிட்டன. இதன் காரணம், இவை அரசாங்க மதங்களாய் இருந்து வருவதேயாகும். ஹிந்துஸ்தான் முப்பது கோடிக்கு மேற்கொண்ட மக்களைக் கொண்டது. அதன் அரசியல் திட்டமாக காந்தீயம் ஏற்பட்டுவிடுமானால், கண்டிப்பாக வெற்றிபெறறே தீரும். இன்றைய முட்டாள் தனமும் மூர்க்கத்தனமும் ஆன கொலை பாதகப் பேயாட்டங்கள் இனி நடைபெற முடியாமலும் போகும்.

பெயர் மாறுதல்கள் காரணமாய் மதங்களுக்கும் தேசங்களுக்கும் கொள்கை, பெயர் மாற்றங்கள் ஏற்படுவது சகஜமாகவே இருந்து வந்திருக்கிறது. உதாரணமாக புத்தர், அசோகர்

மகாத்மா காந்திக்கு எப்படிப்பட்ட ஞாபகச் சின்னம் ஏற்படுத்தினால் பொருத்தமாக இருக்கும் என்பது குறித்து அறிஞர் பலர் இன்று யோசித்து வருகின்றனர்; பெரியார் கூறும் இந்த ஆலோசனையை எல்லோரு[ம்] வரவேற்பார்கள். இந்த யோசனை பண்[டித] நேரு முதலிய தலைவர்களுக்கும் அறி[வி]க்கப் பட்டிருக்கிறது.

காலத்தில் ஏற்பட்ட மதக் கோட்பாடு மாறுதல்களும், ருஷ்யா, ஸயாம் முதலிய நாடுகளுக்கு ஏற்பட்ட சோவியத் லேண்ட், தாய் லேண்ட் போன்ற பேர்களும் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். மற்றப்படியாக சிறு ஊர்களுக்குப் பெயர் மாற்றுவதும் பெருந் தொகையாகப் பணம் வசூல் செய்து அதன் மூலம் சில பொதுநலக் காரியங்கள் செய்வதும் காந்தியாருக்கு நாம் ஏதோ நன்றி காட்டுவதாகத்தான் வந்து முடியுமே தவிர காந்தியாரால் உலகத்துக்கு, நம் நாட்டுக்கு அதாவது மற்ற நாட்டாரால் தாழ்மையாகக் கருதப்பட்ட சரித்திரப் பிரசித்தமுள்ள நாட்டுக்கு ஏற்பட்ட மகா மேன்மையான காரியம் என்னவென்பதற்கு நல்ல ஆதாரம் இல்லாமல் போய்விடுகிறது. ஒருவரை மகான், க்ரேட் மேன் —Great Man—என்றால் அவரால் ஏற்பட்ட ஸ்திரமான பெரிய காரியம் ஒன்று இருந்தாக வேண்டுமே ஒழிய அவர் காலத்தில் இன்னின்ன காரியம், அற்புதம், அதிசயம் நடந்தன என்பவை பிற்கால மக்களுக்கு பயன்படுவதானதாக ஆகிவிடாது. இது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். கொள்ளவும் தள்ளவும் திருத்தவும் மாற்றவும் உங்களுக்குப் பூரண உரிமை உண்டு.

இதற்கு இது ஒரு நல்ல சமயம். நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்தியாவின் ஒரு பாகமாகிய சிந்துவுக்கு இன்று பாகிஸ்தான் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறதுபோல் இந்தியாவின் பெயரும் மாற்றப்படலாம். இந்து என்பதும் இந்தியா என்பதும் அந்நியர்கள் நமக்கும் நம் நாட்டிற்கும் கொடுத்த பெயர், (அதுவும் சிந்து நதி காரணமாக ஏற்பட்ட பெயர்) என்பதை எல்லா அறிஞர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். காந்தியாரும் இதைச் சமீபத்தில் சொல்லியிருக்கிறார் இந்து மதம் என்பதாக ஒரு மதமும் இல்லை. ஆகவே இந்தப்படியான மாற்றம் காந்தியார் உயிர்ப் பலியின் காரணமாக ஏற்பட்டுவிடுமானால், இனி இங்கு மத, சமுதாய, ஜாதி சம்பந்தமாக எந்தப் பிரச்னையும் சுலபத்தில் காண முடியாது. முப்பது கோடி மக்களும் ஞானவான்களாக ஒரே சமுதாய மக்களாக உலகத்தின் முன் திகழ்வார்கள்.

✲

88879

தியாகம்

தியாகத்திற்குப் பிறகு நிலைத்திருப்பது, சிரஞ்சீவித்துவத்தை அளிக்கும் உணவு ஆகும். அந்த உணவைப் புசிப்பவர்கள், மாறுதல் அற்றிருக்கும் பிரம்மத்தை அடைகிறார்கள். தியாகம் செய்யாதவர்களுக்கு இந்த வாழ்க்கையிலேயே எதுவும் கிடைப்பதில்லை; அப்படியிருக்க பர வாழ்க்கையைப்பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?

—பகவத் கீதை

அன்பியல்

எப்போதும் அன்பு எதையும் கேட்பதில்லை; ஆனால் கொடுக்கிறது. கே, அன்பு எப்போதும் கஷ்டத்திற்கு ஆளாகிறது; ஆனால் அதற்காக அது வருந்துவதில்லை; பழிக்குப் பழி வாங்குவதுமில்லை.

—மகாத்மா காந்தி

உண்டு உடுப்பநோடன்றி
வாழ்வில் செழிப்பும் அளிக்கும்

ஓர் அரிய வாழ்க்கை

★

லைப் இன்ஷூரன்ஸ் பிடிப்பது வாழ்க்கைக்குச் செழிப்பும் அளிக்கிறது. அது வாழ்க்கையில் பொதுஜன சேவை, முன்னேற்றம், பரந்த நட்பு, நல் உணர்வு ஆகியவைகளை அளித்து ஐச்வரியமும் கொடுக்கிறது.

ஆடவர்களும் பெண்மணிகளும், அவர்கள் செழிப்பாகவும், நாகரிகமாகவும் வாழ்க்கை நடத்தப் போதிய அளவு பொருள் திரட்ட ஓர் சந்தர்ப்பம் அளிக்கவல்ல நிலையில் தாங்கள் இருப்பது பற்றி "ஹிந்துஸ்தான்" கம்பெனியார் சந்தோஷமடைகிறார்கள்.

புதிய தொழில் (1946)

ரூ. 12 கோடியும் 40 லக்ஷங்களுக்குமேல்.

நியாயமான தொழில்முறைக்கு நம்பகமான இடம்:

ஹிந்துஸ்தான் கோ-ஆபரேடிவ் இன்ஷூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்,

"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"

4, சித்தரஞ்சன் அவென்யூ, கல்கத்தா.

டிவிஷனல் ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"

107, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை—1.

பெங்களூர்:
கெம்பே கௌடா ரோட்,
பெங்களூர் சிடி.

பெஜவாடா:
ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்,
கவர்னர்பெட், பெஜவாடா

மகாத்மா காந்தியடிகள்—

நம்மை அடிமை வாழ்விலிருந்து
விடுவித்த சரித்திரத்தை

காந்தி மகான் கதை

என்ற பெயரில் நாட்டுப்பாடல் வடிவத்தில்
ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு பாடி
யிருக்கிறார். அழகான அட்டைப் படம்—
உயர்ந்த காகிதம். கலிகோ பைண்டு—
டெம்மி அளவில் பக்கம் 260.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை, சென்னை 14

எல்லா ஹிக்கின்பாதம்ஸ்
புத்தகசாலைகளிலும்
கிடைக்கும்

Edited, Printed and Published by Vai. Govindan at Shakti Press Ltd.,
P.I.C- No. MS. 23, for Shakti Karyalayam, Royapettah, Madras. MS. 202.